# புதுமைக் கவிஞர்

# சுப்பிரமணிய பாரதியார்

## ஒரு கண்ணோட்டம்

13



தேன்மழை வெளியீடு

பேராசிரியர்
முனைவர் ந. சுப்பு ரெட்டியார்

# புதுவை(மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்

(ஆசிரியரின் 75-வது அகவை புகும் நினைவாக)

புதுவைப் பல்கலைக் கழகம்

(திரு. ஆனந்தரங்க கிருஷ்ணசாமிப்பிள்ளை—திருமதி. அம்சம்மாள் அறக்கட்டளை : மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நினைவுச் சொற்பொழிவு - 1989)


'அருங்கலைக்கோன்' 'ஸ்ரீசடகோபன் பொன்னடி'

**பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்**

*தமிழ்ப் பேராசிரியர்—துறைத் தலைவர் (ஓய்வு)*

*திருவேங்கடவன் பல்கலைக் கழகம்*

*திருப்பதி*



*விற்பனை உரிமை :*

**ஐந்திணைப் பதிப்பகம்**

*279, பாரதி சாலை,*

*திருவல்லிக்கேணி,*

*சென்னை-600 005*

முதற் பதிப்பு : ஆகஸ்டு - 1990

தேன்மழை — 44

© Dr. S. RAMAKRISHNAN, M. D.
Author's Second son.
AD-13 (Plot No. 3354)
Anna Nagar, Madras-600 040
Phone : 62 11 583

பக்கம் : viii + 112 = 120

விலை : ரூ. 13-00

**Puthuvai (mai) K- Kavignar Subramaniya Barathiar : Oru Kannottam**

வெளியீடு :

**தேன்மழைப் பதிப்பகம்**
34, கொத்தவால் தெரு,
ஆலந்தூர்,
சென்னை - 600 016
போன் : 43 21 01

Sales Right :
AINTHINAI PATHIPPAGAM
Phone : 84 57 12
279, (Bharathi Road) Pycrofts Road,
Triplicane, Madras - 600 005

அச்சிட்டோர் :
ஸ்ரீ வெங்கடேஸ்வரா அச்சகம்
7/40, கிழக்கு செட்டி தெரு,
பரங்கிமலை, சென்னை-600 016 [7]

**டாக்டர் ந. கடிகாசலம்**
*முதுநிலை ஆய்வாளர்*
*பன்மொழிக் கல்வித் துறை*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*சென்னை - 600 113*

# அணிந்துரை

*பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் அவர்கள் உழைப்பால் உயர்ந்த உத்தமர்; கனவிலும் பிறர்க்குத் திங்கு நினையாதவர். பயன் கருதாது தமிழ்த்தொண் டாற்றி வருபவர். எளிய தமிழில் அறிவியல் நூல்களைத் தருபவர். அன்னார் புதுவைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய அறக்கட்டளைச் சொற்பொழிவே ''புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண் ணோட்டம்'' எனும் இந்நூலாக உருவெடுத்துள்ளது.*

*கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பற்றிய இந்நூலில், மாபெரும் தேசியக் கவிஞரை ஏழு நோக்கில் காண்கிறார் பேராசிரியர். இது, 'சர் ஐசக் நியூடன் சூரிய ஒளியில் காணும் ஏழு நிறமாலை* (SPECTRUM) *போல்' (ப. 3) என்று பேராசிரியரே குறிப்பிடுகின்றார்.*

*பேராசிரியர் அவர்களின் நேர்மையை இங்குப் பாராட் டியாக வேண்டும். புதுவைப் பல்கலைக் கழகத்தில் அறக் கட்டளைச் சொற்பொழிவு ஆற்ற அவர் ஒப்புக்கொண்ட தற்கு ஒரு காரணம்: 'இத்தகைய அறக்கட்டளைகளால் பல்கலைக்கழகங்கள் கரும்பு தின்னக் கூலி கொடுக்கின்றன'. (ப. 1). 'அறிவியலை அநுபவித்துக் கொண்டிருந்த என்னைத் திசை திருப்பித் தமிழுக்கு வரச் செய்தவை இவர்தம் பாடல்களே. இதனால், வித்துவான், எம்.ஏ., பிஎச். டி., வரை படிக்கச் செய்து தமிழையே என் பிழைப் பிற்கு வழியாக அமையச் செய்தன' (ப. 3). நூலின் இறுதியில், 'என் மனத்திலுள்ள கருத்துகளை ஏதோ ஒரு வகையில் வடித்துக் காட்டினேன். காட்டாதவை ஏராள மாக உள்ளன'(ப. 102) என்று குறிப்பிடுகிறார். இவ்வாறு உள்ளத்தில் உள்ளதை — உண்மையை — வெளிப்படை யாகக் கூறிவிடுவதே பேராசிரியரின் சிறப்பான பண்பாகும்.*

*'பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேணும்' என்ற பேராசை கொண்ட பாரதியார் பாட்டுக்கு ஒரு புலவர் என்பதைப் பல்வேறு கோணங்களில் ஆணித்தரமாகப் பேராசிரியர் நிலைநிறுத்துகிறார். பாரதியின் தேசிய கீதங்கள், ஆங்கில மொழியிலுள்ள*

தேசிய கீதங்களுக்குப் பொருட்சுவையிலும் இசைச்சுவையிலும் எள்ளளவேனும் தாழ்ந்தவை அல்ல' (ப. 6) என்பது பேராசிரியரின் கருத்தாகும்.

ஆழ்வார் பாசுரங்களில் ஆழங்கால்பட்ட பேராசிரியர், பாரதியாரின் பாடல்களில் காணப்படும் ஆழ்வார் பாசுரங்களின் செல்வாக்கை ஆங்காங்கே குறிப்பிட்டுச் செல்கிறார். அத்துடன், புதுக் கவிதைகளையும் அவர் விட்டு வைக்கவில்லை. பாரதியாரின் பாடல்களைத் திறனாய்வு செய்யும் வேளையில், தம் வாழ்க்கையில் நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை—பாரதியார் பாடல்கள் தொடர்பானவற்றை—வெளிப்படுத்தவும் (பக்.12, 13) மறந்துவிடவில்லை. இதை ஓர் உத்தியாகவே கைக்கொள்கிறாரோ என்று கூட எண்ணத் தோன்றுகின்றது.

மொழியையும் இனத்தையும் நாட்டையும் இணைத்துப் பாடிய 'பாரதீயம்' பாரதியார் தம் இணையற்ற கொள்கை (ப.23) என்கின்றார் பேராசிரியர்,

கல்விச் சிந்தனையாளர் எனும் பகுதியில் பாரதியாரின் கல்விச் சிந்தனைகளை மிகத் தெளிவாகப் பேராசிரியர் அலசுகிறார். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பணியாற்றிய அநுபவம் நிறைந்த பேராசிரியர், தாய்மொழியில் கல்வி கற்பதையும், அறிவியல் கல்வியைத் தமிழ்மொழி மூலம் பெறுவதையும் (பக். 33, 35) பாரதியார் பாடல்கள் வழிநின்று உறுதிப்படுத்துகின்றார். 'கலைச்சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய்மொழியில் தொடங்க வேண்டும் என்பது, நீந்தக் கற்றுக்கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும்' (ப. 33) எனச் சாட்டையடி தருகின்றார். 'புதுமுறைக் கல்வியைப் பற்றி பாரதியார் சிந்தித்ததாக ஊகம் செய்யத் தூண்டுகிறது' (ப.42) என்று பேராசிரியர் தெரிவிக்கின்றார்.

பாரதியாரை வைணவச் செல்வராகப் பேராசிரியர் காண்கின்றார். வருணாசிரம தர்மத்தைப் பற்றிப் பாரதியின் கண்ணன் கூறுவதைப்('நாலு குலங்கள் அமைத்தான்') படிக்கும்போது தந்தை பெரியாரே கண்ணனாக நின்று பேசுவது போல் (ப. 59) பேராசிரியர்க்குத் தோன்றுகிறது. 'இயற்கை அன்னையை இயலும்போதெல்லாம் பாராட்டுவது—போற்றுவது—பாரதியார் தம் அழுத்தமான சக்தி வழிபாட்டுக் கொள்கையைச் சார்ந்ததாகும்'(ப. 54) என்று பேராசிரியர் தீர்மானிக்கிறார். கோள்களின் ஆய்வுகள்

பிற்காலத்தில் நடைபெறலாம் என்ற சாத்தியக் கூறு களைப் பாரதியார் கனவு கண்டார் (ப. 55) என்றும் பேராசிரியர் கருதுகின்றார்.

"நிறந்தனிற் கருமை கொண்டான்—அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப் பெண்கள்"

எனும் பாரதியின் பாடல் வரிகளுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம்: 'இன்றைய கருமைநிறக் காளையர் பொன்னிற மேனி மங்கையரை விரும்புவதுபோல், கண்ணனும் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தான் போலும்' (ப. 58). நடைமுறை உவமைகளை நகைச்சுவை யாக உதிர்ப்பதில் (ப. 91) பேராசிரியருக்கு நிகர் பேராசிரி யர்தான். 'உவமைச் சக்கரவர்த்தி' என்றால் அது பேராசிரியர் ஒருவராகத்தான் இருக்க முடியும். கற்றோர் கூட 'சங்கம்' அமைத்துக்கொண்டு 'கலாட்டா' செய்வதை (ப. 60) பேராசிரியர் எள்ளி நகையாடுகின்றார்.

வைணவதத்துவத்தைப் போலவே சைவ தத்துவத்தை யும் கரைத்துக்குடித்தவர் பேராசிரியர் என்பது சக்திதாசர் எனும் பகுதியில் (ப. 71-74) வெளிப்படுகின்றது. சக்தி பற்றிய மேலும் சில செய்திகளையும் (ப. 82) தருகின்றார்.

வசனமும் கவிதையும் ஒன்றாகுமா என்ற வினாவுக்குப் பேராசிரியர் தரும் விளக்கம் (ப. 99) ஏற்புடையதே. பாரதியார் புதுக்கவிதையின் பிதாமகன் (பாட்டன்) ஆகின்றார் (ப. 102) என்பது பேராசிரியரின் முடிவு.

'பாரதி, புதிய தமிழுக்குப் போடப்பட்ட பிள்ளையார் சுழி' என்பதில் ஐயமில்லை என்பது பேராசிரியரின் கணிப்பாகும்.

எளிய நடை, ஆழமான அறிவியல் பூர்வமான திறனாய்வுப் போக்கு, சிக்கலான சமய தத்துவங்களையும் எளிமையாக வெளிப்படுத்தும் பாங்கு. நடைமுறை உவமைகளை வாரி வழங்கும் பான்மை ஆகியவற்றால் பாரதியாரை ஒரு மாமனிதனாகக் காணும் "புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்: ஒரு கண் ணோட்டம்" என்ற இந்நூல் தமிழன்னைக்குப் பேராசிரியர் ந. சுப்பு ரெட்டியார் சூட்டியுள்ள புத்தம் புதிய ஆபரணமாகும் என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியல்ல.

வாழ்க பேராசிரியர்! வளர்க அவர்தம் தமிழ்த்தொண்டு!

சென்னை-113
நாள்: 18-7-1990

ந. கடிகாசலம்

# நூல் முகம்

எனக்கு வேண்டும் வரங்களை
இசைப்பேன் கேளாய் கணபதி !
மனத்தில் சலனம் இல்லாமல்
மதியில் இருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலைவந் திடநீ செயல்வேண்டும்,
கனக்கும் செல்வம் நூறுவய(து),
இவையுந் தரநீ கடவாயே[1]

— பாரதியார்

இளமை முதல் இன்றுவரை அடிக்கடி படித்து, சிந்தித்து, ஆழங்கால் பட்டு வரும் பாரதியாரின் படைப்பு களை மீட்டும் ஒருமுறை படிக்கவும் சிந்திக்கவும் வாய்ப் பளித்தது புதுச்சேரி பல்கலைக் கழகம். அந்த வாய்ப்பே திரு. **ஆனந்தரங்க, கிருட்டிணசாமி பிள்ளை - திருமதி அம்சம்மாள்** அறக்கட்டளைச் சொற்பொழிவாக வடி வெடுத்தது. அந்தச் சொற்பொழிவு வடிவமே இன்று அச்சு வடிவம் பெறுகின்றது. சொற்பொழிவு நிகழ்த்த வாய்ப்பும் வசதியும் அளித்த பல்கலைக் கழகத்திற்கு— குறிப்பாக அதன் துணைவேந்தர் (டாக்டர் கி. வேங்கட சுப்பிரமணியம் அவர்கட்கு) என் மனமுவந்த நன்றியை யும் வணக்கத்தையும் புலப்படுத்திக் கொள்வதுடன் இப் பொழிவை என் பொறுப்பில் அச்சிட்டுக் கொள்ள இசை வளித்தமைக்கு மீண்டும் ஒருமுறை நன்றி கூறுகின்றேன்.

இளமைத்துடனும் தமிழ் உணர்வுடனும் நல்ல நூல் களை வெளியிட்டு வருபவர் தேன்மழைப் பதிப்பக உரிமையாளர் திரு. **வெள்ளையப்பன்** அவர்கள். இந்தச் சிறு நூலையும் மனமுவந்து ஏற்று வெளியிட்டமைக்கும், புதுவைப் பல்கலைக் கழகம் விரும்பியபடி **ஐம்பது படிகள்** அன்பளிப்பாகத் தருவதற்கு மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டமைக்கும் என் சார்பாகவும் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சார்பாகவும் என் இதயம் கலந்த நன்றி யைப் புலப்படுத்திக் கொள்ளுகின்றேன்.

---

1. விநாயகர் நான்மணி மாலை - 7

இந்தச் சிறு நூலும் ஒருவரது அணிந்துரையுடன் வெளி வரவேண்டும் என்பது என் அவா. பெரும்பாலும் என் நூல்கள் நான் அறிந்த பெரியவர்கள், அறிஞர்கள், புலவர்கள், உடன் பணியாற்றியவர்கள், நண்பர்கள், என் மாணவர்கள் இவர்களின் அணிந்துரைகளைப் பெற்று வெளி வருதலை ஒரு மரபாகப் போற்றி வருகிறேன். அந்த முறையில் என் அருமை மாணவர் —இலக்கண மொழியில் சொன்னால் தலை மாணாக்கர் டாக்டர் **என். கடிகாசலத்தின்** அணிந்துரை பெற்று இந்நூல் வெளி வருகின்றது. திருப்பதியில் நான் பணியாற்றியது போது இவர் எம். ஏ. பயின்றபோது (1971-73) என் மாணவர்; கற்பதை அக்கறையுடன் கற்றதால், முதல் வகுப்பில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று இரண்டு தங்கப் பதக்கங்களைப் பெற்றார். பின்னர்ப் பல்கலைக் கழக மானிய ஆணையத்தின் படிப்பூதியம் பெற்று மூன்று ஆண்டுகள் என்னை வழிகாட்டியாகக் கொண்டு ஆய்ந்து பிஎச்.டி. பட்டமும் பெற்றார். ஆய்வில் வியத்தகு அக்கறை காட்டினார். அக் காலத்தில் அனைத்திந்திய நிலையில் பல மாநிலங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் நான் கலந்துகொண்டபோதெல்லாம் இவரை என்னுடன் இட்டுக் கொண்டு செல்வேன். அக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகளைப் படிக்கவும் செய்வேன். அற்புதமாகக் கட்டுரைகள் தயாரித்துக்கொண்டு வருவார்; அறிஞர்களின் பாராட்டுதல்களையும் பெறுவார். என் அபிமான புத்திரன்போல் வயது முதிர்ந்த எனக்கு நான் ஏவும் சில செயல்களைச் செய்து உதவுவார். அவர் பட்டம் பெறுவதற்குமுன் நான் ஓய்வு பெற்றுவிட்டபடியால் அவரை நான் என் கீழ் விரிவுரையாளராகச் சேர்த்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. இல்லையென்றால் திருப்பதிப் பல்கலைக் கழகத்தில் பணியாற்ற வேண்டியவர். எனக்குப் பின்னர் ஏற்பட்ட விரும்பத்தகாத சூழ்நிலையில் இவர் அங்குப் பணியாற்ற ஏழுமலையானே விரும்பவில்லை என்று நினைத்துக் கொண்டேன்.

இறையருளால் என் சிறு உதவியால் 1979 முதல் உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. தமிழ் உணர்வும் உழைப்பின் சின்னமாகவும் இருந்த முதல் இயக்குநர் திரு. **ச. வே. சுப்பிரமணியன்** இவருக்கு நல்ல

பயிற்சி அளித்தமையாலும் அவரோடு நன்கு ஒத்து உழைத்தமையாலும் சிறந்த அறிஞராகத் திகழ்கின்றார். இடையில் நிறுவனத்தின் இசைவும் பணி உரிமையும் பெற்று ஐந்து ஆண்டுகள் (1983-88) சீனநாட்டு வானொலியில் தமிழ் மொழி வல்லுநராகப் பணியாற்றி நற்பெயருடனும் புகழுடனும் திரும்பி மீண்டும் நிறுவனத்தில் சேர்ந்துள்ளார். இவருடைய நல்லொழுக்கம், உழைப்பு, நிர்வாகத்துடன் ஒத்துப்போகும் பண்பு, உடன் பணியாற்றுவோரிடம் அன்புடன் பழகும் நற்பண்பு ஆகியவை இவர் உயர்பதவிகள் பெறுவதற்குப் பெருந்துணையாக அமையும். இத்தகைய நல்லவர், வல்லவர் அணிந்துரை வழங்கினமைக்கு என் நன்றியும் ஆசியும் என்றும் உரியவை.

இந்த நூல் வெளிவரக் காரணமாக அமைந்தும் எனக்கு உடல் நலத்துடனும் மன வளத்துடனும் பணியாற்றுவதற்கு அருள் புரிந்தும் வரும் என் மனத்தில் எழுந்தருளியிருக்கும் ஏழு மலையான் திருவடிகளைச் சிந்திக்கின்றேன்.

'வேங்கடம்'
AD-13 (Plot-3354)
அண்ணா நகர்,
சென்னை-600 040
20-7-1990

ந. சுப்பு ரெட்டியார்

தொ.பே. : 62 11 583

★

## உள்ளுறை

| | | |
|---|---|---|
| | தேசியகவி | 3 |
| 1. | பாட்டுக்கு ஒரு புலவர் | 4 |
| 2. | நாடு, மொழி பற்றாளர் | 15 |
| 3. | கல்விச் சிந்தனையாளர் | 28 |
| 4. | வைணவச் செல்வர் | 44 |
| 5. | சக்திதாசர் | 71 |
| 6. | சமரச நோக்கர் | 85 |
| 7. | புதுக்கவிதை நாயகர் | 91 |
| 8 | துணை நூல் பட்டியல் | 104 |

# புதுவை (மை)க் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் : ஒரு கண்ணோட்டம்

பெரியோர்களே,

**திரு. ஆனந்தரங்கம் பிள்ளை** பெயரால் புதுவைப் பல்கலைக் கழகத்தில் நிறுவப் பெற்ற அறக்கட்டளையின் ஆதரவில் திரு. சுப்பிரமணிய பாரதியாரைப் பற்றி அவர் பிறந்த நாள் நினைவாக ஒரு சொற்பொழிவு நிகழ்த்த வேண்டுமென்று துணைவேந்தர் டாக்டர் K.வேங்கடசுப்பிரமணியம்அவர்களிடமிருந்து ஓர்அழைப்பு வந்தது; ஒப்புக்கொண்டேன். அதற்குரிய காரணங்கள்: (1) இத்தகைய அறக்கட்டளைகளால் பல்கலைக்கழகங்கள் கரும்பு தின்னக் கூலி கொடுக்கின்றன; பல அறிஞர்கள் முன்னிலையில் அறக்கட்டளை நிறுவிய வள்ளல்களையும், அக்கட்டளையின் நோக்கப்படும் பொருளைப் பற்றியும் சிந்திக்க ஒரு வாய்ப்பு கிடைக்கின்றது; (2) ஆங்கிலப் கும்பெனியிடம் வாணிகம் நடத்திப் பெருஞ்செல்வம் திரட்டிய பச்சையப்ப முதலியாரையும், பிரெஞ்சுக்

கும்பெனியிடம் வாணிகம் நடத்திப் பெருஞ்செல்வம் ஈட்டிய ஆனந்தரங்கம் பிள்ளையவர்களையும் நாடு மறவாது போற்றுவதற்குக் காரணம் அவர்கள் நல்வழியால் ஈட்டிய பொருளை நல்வழியில் செலவிடுதலேயாகும்; (3) புதுவைப் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் டாக்டர் K. வேங்கடசுப்பிரமணியம் செயற்கரிய செய்த பெரியார்களுள் ஒருவராவார். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் A.இலக்குமணசாமி முதலியார் காலத்தில்தான் அப் பல்கலைக்கழகம் உலகளாவிய புகழ்பெற்றது அவர் ஆற்றிய பலவேறு செயற்கரிய செயல்களால். அங்ஙனமே, திருவேங்கடவன் பல்கலைக்கழக முதல் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். கோவிந்தராஜுலு அவர்கள் காலத்திலும் மூன்றாவது துணைவேந்தர் டாக்டர் D. சகந்நாதரெட்டி அவர்கள் காலத்திலும் அப் பல்கலைக் கழகம் பெரிய வளர்ச்சியை எழுதியது. முதல் துணைவேந்தரை விசுவகர்மாவுக்கு ஒப்பிட்டால் மூன்றாவது துணைவேந்தரை மயனுக்கு ஒப்பிடலாம். இவர்கள் பல்கலைக்கழக வளர்ச்சிக்கு ஆற்றிய அரும்பணிகளை நேரில் கண்டவன் நான். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக இத்துணைவேந்தர் டாக்டர் K. வேங்கடசுப்பிரமணியத்துடன் பழகி அவர் ஆற்றிய, ஆற்றிவரும் அரும் பணிகளை நோக்கிய வரையில் விசுவகர்மாவையும், மயனையும் சேர்த்து ஒரு வடிவம் தந்தால் அந்த வடிவத்திற்கு ஒப்பிடலாம். புதுவைப் பல்கலைக் கழகத்தின் பன்முக வளர்ச்சிக்கு இவர் ஆற்றிவரும் அருஞ்செயல்களாலே இது தெளிவாகும்; (4) பாரதியார் சிறு வயதிலிருந்தே என் உள்ளங் கவர்ந்த மாபெரும் கவிஞர். பாடல்கள் படிப்பதற்கு எளியனவாக இருப்பினும், வயதிற்கேற்பவும் அநுபவத்திற்கு ஏற்பவும் அவை நமக்குப் புதிய புதிய அநுபவத்தைத் தருவதை உணரலாம். நான் உணர்கின்றேன். என்னுடைய 20-30 வயதுக் காலத்தில் நான் இவற்றைப் படித்ததனால் தமிழின்மீது ஆராக் காதல் கொள்ள

லானேன். அறிவியலை அனுபவித்துக் கொண்டிருந்த என்னைத் திசை திருப்பித் தமிழுக்கு வரச் செய்தவை இவர்தம் பாடல்களே. இதனால் வித்துவான், எம். ஏ., பிஎச். டி. வரை படிக்கச் செய்து தமிழையே என் பிழைப்பிற்கு வழியாக அமையச் செய்தன. பாரதியார் நூற்றாண்டில் (1) பாரதீயம், (2) கண்ணன் பாட்டுத்திறன், (3) குயில்பாட்டு - ஒரு மதிப்பீடு, (4) பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு என்ற நான்கு நூல்களை வெளியிட்டு அவருடைய நூற்றாண்டு விழாவைக் கொண்டாடினேன். —குருவிக்குத் தகுந்த இராமேசுவரம் போல ஐந்தாறு ஆண்டுகட்குப் பிறகு அவர் பாடல்களைப் பயிலும் போது புதிய சிந்தனைகள் எழுகின்றன.

இன்று **'தேசியகவி'** எனப் போற்றப் பெறும் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் எனக்குப் **புதுவைக் கவிஞராகத்** தோன்றுகின்றார்; தம் வாழ்க்கையில் கணிசமான பகுதியைப் புதுவையில் கழித்து தேச பக்தியின் கனலைத் தூண்டியவரல்லவா? பண்டிதர்களிடம் சிக்கித் தவித்த பைந்தமிழைப் பாமர மக்களின் சொத்தாகவும் செய்த மாபெருங் கவிஞராகவும் திகழ்வதால் அவர் எனக்குப் **புதுமைக் கவிஞராகவும்** காணப்படுகின்றார். இன்றைய மொழியில் அவரை சர் ஐசாக் நியூட்டன் சூரிய ஒளியில் காணும் ஏழு நிறமாலை போல் (Spectrum) ஏழு நோக்கில் காண முயல்கின்றேன். அவை (1) பாட்டுக்கு ஒரு புலவன், (2) நாடு, மொழிப்பற்றாளர், (3) கல்விச் சிந்தனையாளர், (4) வைணவச் செல்வர், (5) சக்திதாசர், (6) சமரச நோக்கர், (7) புதுக்கவிதை நாயகர் என்ற தலைப்புகளாகும். இத் தலைப்புகளில் அவரை நோக்கினாலும் ஏழு நிறமுள்ள சூரிய ஒளி வெண்மை நிறமாகத் தோன்றுவதுபோல, இவரும் இவர்தம் பாடல்கள் மூலம் பாரதியாராக-பரந்த நோக்குள்ள பாவலராக-பண்பாட்டின் கொடுமுடியாக- இத்தனைக்கு மேலாக ஒரு **'மாமனிதராகக்'** காணப்படுவதை அறியலாம்.

**1. பாட்டுக்கு ஒரு புலவர் :** பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இணையற்ற ஒரு மாபெருங் கவிஞர். பாமர மக்களும் குறைவான கல்வி பெற்றவர்களும் இலக்கியத்தைச் சுவைக்க முடியும் என்ற கொள்கைக்கு வழியமைத்துத் தந்தவர் இப் பெருமகனார்.

*பாட்டுத் திறத்தாலே-இவ்வையந்தைப்*
*பாலித்திட வேணும்![1]*

என்ற 'பேராசை' கொண்டவர். 'நமக்குத் தொழில் கவிதை'[2] என்று தம் தொழிலை வெளிப்படையாகக் கூறியவர்.

*என் நாவிற் பழுத்தசுவைத்*
*தெண்டமிழ்ப்பாடல் ஒருகோடி*
*மேவிடச் செய்குவையே[3]*

என்று வேண்டி நின்றவர்.

*செய்யுங் கவிதை பராசக்தி*
*யாலே செயப்படுங்காண்.[4]*

என்று தாம் படைக்கும் கவிதைகள் எல்லாம் அன்னை பராசக்தியின் அருளால்தான் வெளிவருகின்றன என்ற நம்பிக்கை கொண்டவர். இத்தகைய கவிஞர் பெருமான்,

---

1. தோ. பா : காணிநிலம்-3
2. வி. நா. மாலை-25
3. ஷை-30
4 ஷை-26

சுவைபுதிது, பொருள்புதிது, வளம்புதிது
சொற்புதிது சோதிமிக்க
நவகவிதை, எந்நாளும அழியாத
மாகவிதை[5]

என்ற எண்ணற்ற புதுமையான கவிதைகளைத் தமிழுலகிற்கு அளித்துள்ளார்.

இவர் பாடிக் குவித்த பாடல்களை (1) தேசிய கீதங்கள், (2) தோத்திரப் பாடல்கள், (3) வேதாந்தப் பாடல்கள், (4) பலவகைப் பாடல்கள், (5) தனிப் பாடல்கள், (6) சுயசரிதை, (7) கண்ணன் பாட்டு, (8) பாஞ்சாலி சபதம், (9) குயில்பாட்டு (10) வசன கவிதை என்று பத்து வகையாகப் பிரித்து நோக்கலாம். இதனைத் தெளிவாக அறிவிக்கும் முறையில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் ''பாட்டுக்கொரு புலவன் பாரதியடா''[6] என்று பட்டிக்காட்டான் ஒருவன் வாயில் வைத்துப் பேசிப் போந்தார். இந்தப் பாடல் பாரதியின் பாடல்கட்கு ஒரு சிறந்த உரைகல்லாகத் திகழ்கின்றது. பாரதியின் பாடல்களை வகைக் கொன்றிரண்டாக இந்த உரைகல்லின் மூலம் நோக்குவோம்.

**தேசிய கீதங்கள் :**

இந்தத் தொகுப்பில் 53 பாடல்கள் காணப்படுகின்றன.[7] பாரதி இயற்றிய தேசிய கீதங்கட்கு ஓர் உயர்ந்த

5. த. பா. வேங்கடேச ரெட்ட பூபதி-(2)-3
6. மலரும் மாலையும் — பாரதியும் பட்டிக்காட்டானும் — 1
7. எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை வெளியிட்ட ''மகாகவி பாரதியார் கவிதைகள்'' என்ற நூலில் கண்டபடி இவை எடுத்துக்கொள்ளப் பெற்றன.

இடம் உண்டு. இவற்றைப்போல் தமிழ்மொழியில் வேறில்லை. இவை ஆங்கில மொழியிலுள்ள தேசிய கீதங்களுக்குப் (Songs of Patriotism) பொருட் சுவையிலும் இசைச் சுவையிலும் எள்ளளவேனும் தாழ்ந்தவை அல்ல என்று சொல்லலாம். 'செந்தமிழ்நாடு'(20) என்ற பாடல் அவர் உரைகல்லில்,

'செந்தமிழ் நாட்டின்' - முதன்மொழி
செவியிற் சேருமுன்னே
அந்தமில் லாமல் - உள்ளத்தில்
அமுதம் ஊறுதடா ! (11)

என்று காட்டப் பெறுகின்றது. 'கரும்புத் தோட்டத்திலே' (53) என்ற பாடல்,

'கரும்புத் தோட்டத்திலே' - எனுகவி
காதைச் சுடுகுதடா
இரும்பு நெஞ்சமுமே - நீராய்
இளகி யோடுதடா ! (10)

என்று ஒளி விடுகின்றது, 'வந்தே மாதரம்' (1) என்ற கவிதையின் மாற்றை,

'வந்தே மாதரத்தைப் - பாடவே
வாய்தி றந்தவுடன்,
சந்தேக மில்லை - ஒரு புதுச்
சக்தி தோன்றுதடா ! (14)

என்று காண்கின்றோம். பாரத நாட்டின் பழம் புகழையும் தற்கால நிலைகளையும் சிந்தித்து, நாட்டன்பு கொண்டு 'எந்தையும் தாயும்' (3), 'மன்னும் இமயமலை' (6) 'நளிர் மணி நீரும் நயம்படு கனிகளும்' (19), என்ற முதலடிகளை யுடைய பாட்டுகளிலும், 'பாரத மாதா திருப்பள்ளி

எழுச்சி', 'பாரத தேவியின் திருத்தசாங்கம்' என்ற மகுடங் களைப் பெற்ற பாட்டுகளிலும், வேறு பாடல்களிலும் இனிய ஓசைப் பெருகும் கவிதை இரசமும் பொங்கும்படிப் பாடியிருப்பது நோக்கத் தக்கது. தேசிய கீதங்களின் இசைத் தன்மை ஒப்புயர் வற்றது.

## தோத்திரப் பாடல்கள் :

இதில் 78 பாடல்கள் உள்ளன. தேசிய கீதங்களைவிட அதிக ஆர்வத்தையும், கருத்துச் செல்வத்தையும், கவிதைச் சுவையையும் மட்டில்லாத பக்திப் பான்மையையும் பெற்றவை பாரதியின் தோத்திரப் பாடல்கள். கண்ணன், முருகன் போன்ற தெய்வங்களைப் பற்றிப் பலப்பல புது முறைகளில் விதம்விதமாகப் பாடியிருக்கும் கீதங்கள் மனத்தை நயுருக்கும் தன்மையுடையவை. எடுத்துக் காட்டாக, ஒன்றைக் காட்டுவேன்; கோவிந்தனைப் பற்றியது இது.

> எளியனேன் யானெனலை எப்போது
> போக்கிடுவாய் இறைவனே ! இவ்
> வளியிலே பறவையிலே மரத்தினிலே
> முகிலினிலே, வரம்பில் வான
> வெளியிலே கடலிடையே மண்ணகத்தே
> வீதியிலே வீட்டி லெல்லாம்
> களியிலே, கோவிந்தா! நினைக்கண்டு
> நின்னொடுநான் கலப்ப தென்றோ?[8]

இதைப் படிக்கும் போது நம்மைப் பக்தியின் கொடு முடிக்கு இட்டுச் சென்று விடுகின்றது. ஆழ்வார் பாசுரங் களை நினைக்கச் செய்து ஆரா அமுதமாக இனிக்கச் செய்கின்றது.

---

8. தோ பா. கோவிந்தன் பாட்டு— 2

**வேதாந்தப் பாடல்கள் :**

இத்தொகுதியில் 25 பாடல்கள் உள்ளன. பாடல்கள் இலகு தமிழில் இருப்பினும் இவை யாவும் அநுபூதி நிலையில் உள்ளவை. 'நான்' என்ற தலைப்பிலுள்ள ஏழு பாடல்களும் கீதையின் விபூதியோகத்தையும் (இயல் - 10) நம்மாழ்வாரின் திருவாய்மொழியையும் (5.6) நினைக்கச் செய்கின்றன.

*வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்*
*மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்*
*கானில் வளரும் மரமெலாம் நான்*
*காற்றும் புனலும் கடலுமே நான் (1)*

என்பது பாரதியார் பாடல்.

அர்ச்சுனா, எல்லா உயிர்கட்கும் வித்து எதுவோ, அது நான். என்னையன்றி ஜங்கம ஸ்தாவரங்களில் வாழ்வது ஒன்றுமில்லை. (10: 39)

என்பது கீதை.

*கடல்ஞாலம் செய்தேனும் யானே என்னும்;*
*கடல்ஞாலம் ஆவேனும் யானே என்னும்;*
*கடல்ஞாலம் கொண்டேனும் யானே என்னும்;*
*கடல்ஞாலம் கீண்டேனும் யானே என்னும்*

—திருவாய் 5.6: 1

என்பது நம்மாழ்வாரின் திருவாய்மொழி.

**பலவகைப் பாடல்கள் :**

இத்தொகுப்பில் பதினாறு பாடல்கள் உள்ளன. இவற்றுள் புதிய ஆத்திசூடி, பாப்பா பாட்டு, முரசு, புதிய

கோணங்கி குறிப்பிடத்தக்கவை. பாப்பா பாட்டைக் கவிமணி,

'பாப்பா பாட்டி'லே - நெஞ்சைப்
பறிகொ டுத்தேனடா !
சாப்பா டேதுக்கடா ! - சீனி
சர்க்கரை எதுக்கடா ! (12)

என்று உரைத்துக் காட்டுவார். புதிய கோணங்கியில்,

படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான் ! போவான், ஐயோவென்று
போவான்

என்ற அடிகள் குடுகுடுப் பாண்டி வாக்கில வருபவை. 'முரசு' தலைப்பில் எல்லாப் பாடல்களும் நெஞ்சை ஈர்ப்பவை.

**தனிப் பாடல்கள் :**

இத்தொகுப்பில் 24 பாடல்கள் உள்ளன. இவற்றுள் காலைப் புனைவு, மாலைப் புனைவு, வான்மதி, காற்று, மழை, காடு பற்றிய புனைவு போன்றவை இயற்கை எழிலைப் புனைந்து காட்டும் ஆங்கிலக் கவிஞர் வொர்ட்ஸ் வொர்த்தை நினைவுகூரச் செய்கின்றன. தனிப்பட்ட பெரியார்களைப் பற்றிய பாடல்கள் அற்புதமாக அமைந்துள்ளன.

செம்பரிதி ஒளிபெற்றான்; பைந்நறவு
சுவைபெற்றுத் திகழ்ந்தது; ஆங்கண்
உம்பரெலாம் இறவாமை பெற்றனரென்று
எவரெலாம் உவத்தல் செய்வார் ?

கும்பமுனி எனத்தோன்றும் சாமிநா
தப்புலவன் குறைவில் கீர்த்தி
பம்பலுறப் பெற்றனனேல் இதற்கென்கொல்
பேருவகை படைக்கின் றீரே (1)

என்பது உ. வே. சாமிநாதய்யருக்கு 'மகாமகோபாத்யாயர்' என்ற விருதளித்தபோது உவந்து பாடியது.

**சுயசரிதை :**

இது 'கனவு', 'பாரதி அறுபத்தாறு' என்ற பகுதிகளைக் கொண்டது. முன்னதில் 49 பாடல்களும் பின்னதில் 66 பாடல்களும் உள்ளன. இவற்றுள் முன்னதிலுள்ள,

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை அருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே. (49)

என்ற இறுதிப் பாடல் நிர்க்குண பிரம்மத்தை நோக்கிக் கவிஞர் வேண்டுவது.

**கண்ணன் பாட்டு :**

இதில் 23 பாடல்கள் உள்ளன. பெரியாழ்வாரைப் பின்பற்றி இப்பாடல்களை ஆக்கினாரோ என்று நினைக்கத் தோன்றுகின்றது. பெரியாழ்வாரின் பாசுரங்கள் சமய வேட்கையினின்றும் ஆழ்ந்த பக்தியினின்றும்

முகிழ்த்தவை. பாரதியின் பாடல்கள் அவருடைய கவிதா பக்தியினின்றும் கனிந்தவை. இவற்றை நன்கு அநுபவித்த புதுக்கவிஞர் ஒருவர்,

பல
கோணங்களில்
கண்ணனைப்
படம்
பிடித்த
கேமரா[9]

என்று பேசி மகிழ்கின்றார். கண்ணின் பாட்டின் மாற்று இப் புதுக்கவிதையில் பளிச்சிடுகின்றது; கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையும்,

'கண்ணன் காதலன்!-எனக்கொரு
களியமுதமடா!
விண்ணமுதமுமே-அதனை
வெல்ல மாட்டாதடா! (17)

என்ற பாடலில் கண்ணன் பாட்டை மதிப்பிடுகின்றார். 'கண்ணம்மா-என் குழந்தை' என்ற பாடல் மிக அற்புதமானது. குழந்தைகள் தங்கள் பெற்றோருக்குத் தரும் இன்பத்தை பற்றி கூறும் பாடல்கள் வள்ளுவரையும் விஞ்சி விடுகின்றன.

**பாஞ்சாலி சபதம் :**

இது தற்காலப் பண்பு மலிந்து நூதன முறையில் ஆக்கப் பெற்ற ஓர் அற்புதக் காப்பியம்; இதில் சுவை

---

9. வாலி : பொய்க்கால் குதிரைகள்-பாரதி ஒரு பிள்ளையார் சுழி.

குறைந்த பகுதிகள் மிகக் குறைவு. கல்விச் செருக்குடைய புலவர்களும் களிக்கும் படியான கற்பனை முறைகளையும் அணிகளையும் கையாண்டு அவற்றைத் தெளிவாக்கிச் சுவைப் படுத்துவதில் பாரதியின் கைவண்ணத்தை இதில் கண்டு மகிழலாம். பாத்திரப்படைப்பில் ஒரு தனிப்பட்ட உயிர்த்தத்துவம் மிளிர்வதைக் காணலாம். துரியோதனன் தீய குணங்களையுடையவனாக இருந்த போதிலும் அவனை வெறும் அயோக்கியனாகக் கவிஞர் படைக்கவில்லை. இங்குத் துரியோதனன் தனது மறத்தொழிலுக்கும் பொறாமைக்கும் ஓர் அரசியல் தத்துவத்தை வைத்துக் கொள்வதைக் காண்கின்றோம்.

*மன்னர்க்கு நீதி ஒருவகை-பிற*
*மாந்தர்க்கு நீதிமற் றோர்வகை*

என்பது அவன் கொண்ட சித்தாந்தம். இஃது ஒரு சிறந்த காவியம் என்பதை,

*அன்னை 'பாஞ்சாலி-சபதம்'*
*அறைதல் கேட்டேனடா!*
*முன்னைக் கதையெல்லாம்-கண்ணின்*
*முன் நடந்த தடா!* (13)

என்ற உரைகல்லில் கண்டு மகிழலாம். என் அரிய நண்பர் (அமரர்) **திருலோக சீதராம்** இதனை அப்படியே ஒப்பித்துக் காலட்சேபம் செய்யும் போது நம்மை பாரத காலத்திற்கே கொண்டு போவதை நினைவுகூர முடிகின்றது.

**குயில் பாட்டு :**

இந்தப் பாட்டு பாரதியாரின் புதுச்சேரி நண்பர் கிருட்டிணசாமி செட்டியாரின் மாஞ்சோலையில் முகிழ்த்தாகக் கூறுவதுண்டு. பாரதியார் தம் கற்பனை ஆற்றலைப்

பறக்கவிட்டு காவிய முறையில் படைத்த அழகான சொல்லோவியங்களில் இது தலை சிறந்தது. இதில் பாரதியாரின் கனிந்த கவிதை ஆற்றலும், நெஞ்சை அள்ளும் இசையின் ஆற்றலும் ஒருங்கே சிறந்து வற்றாத ஊற்றிலிருந்து பொங்கும் அமுத வெள்ளமாய்ப் பெருக் கெடுத்திருப்பதைக் கண்டு மகிழலாம். குயில் பாட்டில் பாரதியின் நடை இதற்குமுன் தமிழ் இலக்கியம் கண்டிராத ஒரு வெற்றியாக அமைந்துள்ளது. பாட்டு முழுதும் ஒரே இனிமையான வாக்கு; ஒரே கவிதை வெள்ளம்; வேகமும் நயமும் எந்த இடத்திலும் குறையவில்லை. என் அருமைப் பேராசிரியர் **திரு. சேஷ அய்யங்கார்** (நான் திருச்சி புனித சூசையப்பர் கல்லூரியில் பயின்றபோது வேதியியல் பேராசிரியர்) 'குக்குக்கூ, குக்குக்கூ, குக்குக்கூ...' என்று குயில் கூவுவது போல் குரல் எழுப்பி,

காதல், காதல், காதல்
காதல் போயின், காதல்போயின்
சாதல், சாதல், சாதல்

என்ற அடிகளையும் இதனைத் தொடர்ந்து வரும் ஒன்பது பாடல் பகுதிகளையும் 'குக்குக்கூ' என்ற ஒலி வருமாறு குயில் கூவுவதுபோல் பாடி மகிழ்வார்; கேட்போரையும் மகிழ்விப்பசர் (1936-39). 'குக்குக்கூ; குக்குக்கூ' என்ற குயிலின் பாட்டுதான் கவிஞரின் சிந்தையில் தேங்கி சிந்தனையில் மலர்ந்து **'குயில் பாட்டு'** என்ற கவிதையாக வடிவங்கொள்ளுகின்றது. இந்தப் பின்னணியைத் தெரிந்து கொண்டு குயில் பாட்டைப் படித்து அநுபவிக்க வேண்டும்.

குயில் பாட்டி'லே-காதல்
கொப்பு ளிக்குதடா
செயல்ம றந்தேனடா-லாகிரி
சிரசிற் கொண்டதடா! (18)

என்று பட்டிக்காட்டான் ஒருவன் பாரதி பாட்டைப் பண்ணோடு பாடக் கேட்டதனால் பெற்ற அநுபவத்தை நாமும் பெற முயலலாம், இப்பாடலில் வரும் இயற்கைக் காட்சிகள் நெஞ்சைப் பிணிக்கும் பான்மையவை. பாட்டு,

ஆன்ற தமிழ்ப்புலவீர்! கற்பனையே யானாலும்
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானும் சற்றே இடமிருந்தால் கூறிரோ?

என்று முடிகின்றது. இந்த வேதாந்தப் பொருள் 'உள்ளுறை'யாகவும் இருக்கலாம்; ஆன்மிகமான பொருளாக வும் அமையலாம், கால்ச் சுருக்கம் கருதி இதில் இறங்க வில்லை.

பொதுவாக, பாரதியின் பாடல்களில் சொல்லுக்குச் சொல்லழகு ஏறுவதையும்; கவி துள்ளும் மறியைப்போல் துள்ளுவதையும்; கல்லும் கனிந்து கனியாவதையும்; பசுங்கன்றும் பால் உண்டிடாது கேட்பதையும் காணலாம்: இவர் பாடல்களில் கிளியும் குயிலும் கூவுவதையும்; மயில் குதித்துக் குதித்து நடனம் ஆடுவதையும்; வெயிலும் மழையும் தோன்றுவதையும்; மலர்கள் மணம் வீசுவதையும் கண்டு மகிலாம். பாடல்களைப் பயிலும் போது தேனும் தினைமாவும் பாலில் உண்ணலாம்; தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம்; கானக் குழலிசையும் கேட்கலாம்; களிவண்டு பாடுவதையும் செவிமடுக்கலாம்.

பாவின் நயமெல்லாம்- யானும்
பகர வல்லேனோ?
ஆவின் பாற்சுவையை-நாழி
அளந்து காட்டிடுமோ?[10]

10, கவிமணி : பாரதியும் பட்டிக்காட்டானும்-23

**2. நாடு மொழி பற்றாளர்:** பாரதியார் வாழ்ந்த காலம் நம் நாடு அடிமை நாடாக இருந்தகாலம். இக் காலத்தில் பாரதியாரின் பாடல்கள் முகிழ்த்தன. எனவே நாட்டுப்பற்று. விடுதலை வேட்கை, தாய்மொழிப்பற்று, சமுதாய முன்னேற்றம், பெண் விடுதலை, பழமையில் புதுமை போன்றவற்றின்அடிப்படையில் அவர் பாடல்கள் அமைந்தன. இவையாவும் **பாரதீயங்களாகின.** இவற்றுள் நாட்டுப்பற்று மொழிப்பற்று ஆகிய தலைப்புகளில் உள்ள பாடல்களை மட்டிலும் ஆய்ந்து அவருடைய நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் எடுத்துக் காட்டுவேன்.

**நாட்டுப் பற்று:**

தாம் பிறந்த நாடு தமிழகமாயினும், பாரதியார் கண்ட நாடு **பாரத நாடு.** அவர்தம் தேசிய பார்வை மிக விரிந்தது. தமிழகத்தையும் பிற பகுதிகளையும் பாரதப் பெருநாட்டின் அகப்பகுதிகளாகவே நோக்கினார். 'யாதும் ஊரே; யாவரும் கேளிர்''[1] என்ற மரபு வழிவந்த தமிழ் மகனிடம் குறுகிய நோக்கு எங்ஙனம் முகிழ்க்கும்? பாரத நாடு முழுவதும் அடிமைப்பட்டிருந்த நிலையில் தமிழக விடுதலையை மட்டிலும் பிரித்துப் பாடும் குறிப்பு அவர்தம் பாடல்களில் இருக்க முடியுமா? எனவே, விரிந்த மனநிலையைக் கொண்ட அவர் பாரதத்தை பாரத மாதாவாக - இந்தியத் தாயாகவே-காண்கின்றார். நாடே பெரும்பாலான பாடல்கட்குக் கவிதைப் பொருளாயின.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே-அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே-அவர்

1. புறம் - 192

சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே[2]

என்று நாட்டை வணங்கிப் போற்றுகின்றார்.

தாயின் மணிக்கொடி பாரீர்-அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்[3]

என்ற கொடி வணக்கப் பாட்டில், பல்வேறு காரணங்களால் சிதறுண்டு கிடக்கும் மக்களை ஒன்று கூடும்படி அறைகூவி அழைக்கின்றார்; ஒரு கொடிக் கீழ் வந்து திரளுமாறு பணிக்கின்றார். இதனை அக நாட்டார் அனைவருக்கும் விடுக்கும் அழைப்பாகக் கொள்ளலாம். தமிழ் மொழியைக்—கன்னித் தமிழாகவே—ஆற்றல் மிக்க மொழியாகவே—காணும் தமிழ் மரபில் வந்த கவிஞர், பாரத மாதாவையும் 'கன்னிகை'யாகவே காண்கின்றார். பாரத மாதாவை,

முப்பது கோடி முகமுடை யாள்உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்-இவள்
செப்பு மொழிபதி னெட்டுடை யாள்எனிற்
சிந்தனை ஒன்றுடை யாள்[4]

என்று படைத்துக் காட்டும்போது வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) காணும் கவிஞரின் பாரதப் பண்மைக் காண முடிகின்றது. மேலும் 'அறுபது கோடி தடக்கைகள்' உடையவள் என்றும், இக்கைகளால் அறங்கள் நடத்துவாள் என்றும் மொழிகின்றார்.

2. நாட்டு வணக்கம்-1
3. தாயின் மணிக்கொடி—பல்லவி.
4. எங்கள் தாய்-3

நீலத் திரைக்கட லோரத்திலே-நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை-வட
மாலவன் குன்றம் இவற்றிடையே-புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு-[5]

என்று தமிழ் நாட்டிற்கு எல்லை வகுத்தது, 'வட வேங்கடம் தென்குமரி' என்ற பண்டைய தொல்காப்பிய மரபை யொட்டியேயாகும். ஆனால் அடிமைத் தளையை அகற்ற வேண்டும் என்று அவாவி நிற்கும் கவிஞர் இந்திய ஒருமைப்பாட்டையே நாடுகின்றார். இதனால் குழந்தைப் பாடலிலேயே பிஞ்சு மனங்களுக்கு,

வடக்கில் இமயமலை பாப்பா - தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா'
கிடக்கும் பெரியகடல் கண்டாய் - இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா![6]

என்று இந்திய நாட்டின் வழக்கு எல்லையை வரைந்து காட்டுகின்றார். பிறிதோர் இடத்தில்,

பேரிமய வெற்பு முதல் பெண்குமரி ஈறாகும்
ஆரியநா டென்றே அறி[7]

என்று இந்த எல்லையைக் குறிப்பிடுகின்றார். எனவே பாரதியின் பாரதப் பாடல்கள்[8] தமிழ் மொழிக்குப் புதியவை; தமிழர்களிடம் அகன்ற நோக்கை - விரிந்த பார்வையை - உண்டாக்கக் கூடியவை. எந்த மொழி

---

5. செந்தமிழ் நா—5
6. பாப்பா பாட்டு - 13
7. பாரத தேவியின் திருத்தசாங்கம் - 2
8. 'தேசிய கீதங்கள்' என்ற தலைப்பிலுள்ள பல பாடல்கள்.

யிலிருப்பினும் உயர்ந்த சிந்தனையையுடைய பாடல்கள் மற்றைய மொழிகளில் பெயர்க்கப் பெற்று நாட்டின் பொதுச் சொத்தாக ஆக்கப் பெறுதல் வேண்டும். தமிழ் மொழியில் **திருக்குறள்** இருப்பினும் அது உலக மொழிகளிலெல்லாம் பெயர்க்கப் பெற்று உலகப் பொதுச் சொத்தாகி விடவில்லையா? அது போலவே, பாரதியாரின் பாடல்கள் மொழி பெயர்ப்புகளின் மூலம் நாட்டின் பொதுச் சொத்தாக ஆக்கப் பெறுதல் வேண்டும். குறிப்பாகத் 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற பாடல் இந்திய மொழிகளனைத்திலும் பெயர்க்கப் பெற்று, எங்கும் இசை ஏற்றம் பெறுதல் வேண்டும்; மைய அரசு இதில் முயற்சி எடுத்துச் செயற்படுதல் வேண்டும்.

நாட்டுப்பற்றை மக்கட்கு ஊட்டும் முறையில் பல பாடல்கள் அமைந்துள்ளன. மக்களிடையே விடுதலையுணர்ச்சியை எழுப்புவதில் இவை பெரும் பங்கு கொள்ளுகின்றன. முதலில் நாட்டின் பழம் பெருமையைப் பேசி இந்த உணர்ச்சியை எழுப்ப முனைகின்றார் கவிஞர்.

பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரத நாடு.[9]

என்று பல்லவியாகத் தொடங்கித் **தோடிப் பண்ணில்** இசையை எழுப்புகின்றார். ஞானத்திலும், பரமோனத்திலும், கானத்திலும், வீரத்திலும், நெஞ்சில் ஈரத்திலும், நன்மையிலும், உடல் வன்மையிலும், ஆக்கத்திலும், தொழில் ஊக்கத்திலும், உயர் நோக்கத்திலும், உளத் திண்மையிலும், நுண்மையிலும், உண்மையிலும் உயர்ந்த நாடல்லவா ? வரலாற்றறிஞர்களும் பிறந்த நாள் அறியமாட்டாத பழந்தாய் என்று கூறுபவர்.

---

9. தே. கீ, 4, பாரத நாடு - 1

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு
சூழ்கலை வாணர்களும் - இவள்
என்று பிறந்தவள் என்றுண ராத
இயல்பின ளாம்எங்கள் தாய்.[10]

என்று பெருமையுடன் பேசிக் களிக்கின்றார். இன்னும்,

பாரத வீரர் மலிந்தநன் னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன் னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடு
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே[11]

என்று பாடிப் பரவி நம்மிடம் நாட்டுப் பற்றை ஊட்டு கின்றார். இத்தகைய நாட்டுக்கு,

வந்தனை கூறி மனத்தில் இருத்தி
வாயுற வாழ்த்தேனோ-இதை
'வந்தே மாதரம், வந்தே மாதரம்'
என்று வணங்கே னோ?[12]

என்கின்றார்.

முன்னர் நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டி ருக்குமிந் நாளின் இகழ்ச்சியும்[13]

10. ஷை. எங்கள் தாய் - 1
11. ஷை. எங்கள் நாடு-2
12. தே. கீ. நாட்டு வணக்கம்-1
13. சுய சரிதை-26

அவர் சிந்தனையில் எழுகின்றது. விடுதலைப் பயிரும் அவர் மனத்தில் முகிழ்க்கின்றது. ஆங்கில ஆட்சியால் அடிமைதான் நம்மவர்க்குப் புதிதேயன்றி விடுதலை புதிதன்று என்று அவர் தூய மனம் எண்ணுகின்றது. இந்தியத் தாயை—பாரத மாதாவை—நோக்கிப் பேசுகின்றார்.

நின்பொருட்டு நின்னருளால்
    நின்னுரிமை யாம்கேட்டால்
என்பொருட்டு நீதான்
    இரங்கா திருப்பதுவோ?

இன்று புதிதாய்
    இரக்கின்றோ மோ? முன்னோர்
அன்றுகொடு வாழ்ந்த
    அருமையெலாம் ஓராயோ?[14]

ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்து விட்ட தம் நாட்டினரிடம் இடைக்காலத்து வந்த இழிநிலையை எடுத்துக் காட்டிக் கழிவிரக்கம் கொள்ளுகின்றார்.

அன்னையே அந்நாளில் அவனிக் கெல்லாம்
    ஆணிமுத்துப் போன்றமணி மொழிக ளாலே
பன்னநீ வேதங்கள் உபநிட தங்கள்
    பரவுபுகழ்ப் புராணங்கள் இதிகா சங்கள்
இன்னும்பல் நூல்களிலே இசைத்த ஞானம்
    என்என்று புகழ்துரைப்போம் அதனை
                                        இந்நாள்[15]

14. தே. கீ. சுதந்திரப் பயிர்-13, 14
15. ஷெ. பாரத மாதா நவரத்தின மாலை - 3

என்று அன்னை படைத்த ஞானச் செல்வங்களை யெல்லாம் எண்ணி எண்ணிக் களிக்கின்றார்.

விடுதலையே பாரதியாரின் தாரக மந்திரம். நாட்டுப் பற்றைப்போலவே இதுவும் ஒரு **பாரதீயம்;** நாட்டுப் பற்றிலிருந்து கிளைத் தெழுந்த ஒரு கொள்கை. 'வந்தே மாதரம் ஒன்றே தாரகம்' என்பது இதன் உயிராய பண்பு. எனவே,

*வீர சுதந்திரம் வேண்டிநின் றார்பின்னர்*
*வேறொன்று கொள்வா ரோ?-என்னும்*
*ஆரமு துண்ணுதற் காசைகொண் டார்கள்ளில்*
*அறிவைச் செலுத்துவா ரோ?*[16]

என்று கேட்கின்றார். நாயன் மார்கட்கும் ஆழ்வார்கட்கும் பக்தி அவர் தம் மூச்சாக இருந்தது போலவே, இவருக்கு விடுதலையே மூச்சாக இருந்தது. சமயப் பற்று இந்நாட்டு மக்களிடையே குருதியுடன் ஊறிக் கிடப்பதை நன்கு அறிந்தவர் பாரதியார். இறைவன் பெயர்களைக் கூறிய அளவில் பிறவித் துயர் அனைத்தும் அறுந்தொழியும் எனச் சுட்டியுரைத்தலும் சமயத் தொண்டர்களை வழிபடுதலும் சமயப் பற்றாளர்களின் நடைமுறை ஒழுக்கங்கள் என்பதைத் தெளிவாக அறிந்தவர் நம் கவிஞர் பெருமான். எனவே, இந்திய நாட்டையே பாரத மாதாவாகவும், சுதந்திரத்தையே சுதந்திர தேவியாகவும் பாடிப் பரவி இம் மரபினைத் தழுவிக் கொள்ளுகின்றார். சமயத்துறைப் பாங்கில் ஒரு கொள்கையைப் பரப்பினால்தான் இந் நாட்டு மக்களுக்கு ஏற்கும் என்பதை நன்கு தெளிந்து 'பாரத மாதா திருத்தசாங்கம்', 'பாரதமாமா நவரத்தின மாலை' போன்ற பாடல்களைப் பாடுகின்றார்.

---

16. ஷை. சுதந்திரப் பெருமை - 1.

திண்ணம் காணீக் பச்சை
வண்ணன் பாதத் தாணை;
எண்ணம் கெடுதல் வேண்டா;
திண்ணம் விடுதலை திண்ணம்'[17]

என்ற பாடல்,

கண்ணன் கழலிணை
நண்ணும் மனம் உடையீர்
எண்ணும் திருநாமம்
திண்ணம் நாரணமே[18]

என்ற நம்மாழ்வாரின் பாசுரத்தை அடியொற்றி அமைந்தது.

இதந்தரு மனையின் நீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு இரண்டும் மாறிப்
பழிமிகுந் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி இன்னல்
விளைந்தெனை அழிந்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழிதிடல் மறக்கிலேனே.[19]

என்று சுதந்திர தேவிக்குத் துதி பாடுகின்றார். திருத் தொண்டத் தொகையைப் பாடி அடியார் வழிபாட்டைத் தொடங்கி வைத்தவர் சுந்திரமூர்த்தி அடிகள். இதுவே பின்னர் **திருத்தொண்டர் அந்தாதியாகவும், திருத் தொண்டர்**

17. தே. கீ. 12. பாரதமாத நவரத்தினமாலை-6
18. திருவாய் 10, 5 : 1
19. தே. கீ. சுதந்திர தேவியின் துதி-1

**புராணமாகவும்** விரிந்தது. சுந்தரமூர்த்தி அடிகளின் சுவட்டினைப் பின்பற்றிக் காந்தியடிகள், தாதாபாய் நெளரோஜி திலகர், லாலாலஜபதிராய், வ. உ. சிதம்பரம் பிள்ளை போன்ற விடுதலை தொண்டர்களைப் பாடிப் பாடிப் போற்றினார் நம் கவிஞர்.

## மொழிப்பற்று:

நாடும் மொழியும் பண்டிருந்தே நம் நாட்டவர் போற்றி வருகின்றனர். எடுத்துக்காட்டாக,

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து, சங்கத்து
இருப்பிலே இருந்து, வையை
ஏட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று, **கற்றோர்**
**நினைவிலே நடந்துஓர்** ஏன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளரு கின்றாள்[20]

என்பது வில்லி பாரத சிறப்புப் பாயிரம். பாரதியார் ஒருபச்சைத் தமிழ் மகன்; தமிழகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மொழியையும் இனத்தையும் நாட்டையும் இணைத்துப் பாடிய **பாரதீயம்** இவர்தம் இணையற்ற கொள்கை.

வாழிய செந்தமிழ்! வாழ்கநற் றமிழர்
வாழிய பாரத மணித்திரு நாடு.[21]

---

20. வில்லி பாரதம்-சிறப்புப் பாயிரம்-1
21. தே.கீ. வாழிய செந்தமிழ்.

என்ற கொள்கை நம்மையெல்லாம் ஈர்க்கின்றது. தம் இனமக்கட்கு விடுதலை வேட்கையையும், மொழிப் பற்றையும் குழைத்து ஊட்டிய கவிஞர் பெருமான் தமிழகத்தின் பண்டைய பெருமைகளையும் தமிழர்களின் வெற்றிகளையும் கூறுகின்றார்.

*சிங்களம் புட்பகம் சாவக-மாதிய*
*தீவு பலவினும் சென்றேறி-அங்கு*
*தங்கள் புலிக்கொடி மீன்கொடியும்-நின்று*
*சால்புறக் கண்டவர் தாய்நாடு.*[22]

என்று கீழ்த்திசை வெற்றிகளையும்,

*விண்ணை யிடிக்கும் தலையிமயம்-எனும்*
*வெற்பை யடிக்கும் திறனுடையார்-சமர்*
*பண்ணிக் கலிங்கத் திருள்கெடுத்தார்-தமிழ்*
*பார்த்திவர் நின்ற தமிழ்நாடு.*[23]

என்று வடதிசை வெற்றிகளையும் சுட்டிக்காட்டுவர். பாரத நாட்டுணர்வையுடைய கவிஞர் இமய வெற்றியையும் கலிங்க வெற்றியையும் ஒதுக்கிவிடாது கூறுதல் குறிப்பிடத் தக்கது. இந்திய நாட்டுணர்விலும் தமிழகத்தின் சிறப்பு கலந்தே மிளிர்கின்றது. மேலும்,

*சீனம் மிசிரம் யவனம் இன்னும்*
*தேசம் பலவும் புகழ்வீசிக் - கலை*
*ஞானம் படைத்தொழில் வாணிகமும் - மிக*
*நன்று வளர்த்த தமிழ்நாடு*[24]

22. ஷெ. செந்தமிழ் நாடு-8
23. ஷெ. ஷெ-9
24. ஷெ. ஷெ - 10

என்று சீனம், மிசிரம், யவனம் முதலிய மேற்றிசை நாடுகளில் புகழ் பரப்பிய தமிழ்நாடு என்று பெருமிதத்துடன் பேசுகின்றார். இங்ஙனம் பழம் பெருமைகளை யெல்லாம் பேசி "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே" ஒரு விடுதலை ஆற்றல் பிறக்க வேண்டும் என்று விழைகிறார்; பேரவாக் கொள்ளுகின்றார்.

வள்ளுவன்பற்றிய இவர்தம் புகழ்மாலை ஒப்புயர்வற்றது. திருவள்ளுவ மாலையில் உள்ள ஐம்பத்து மூன்று பாராட்டுகளும் இவருடைய.

வள்ளுவன் தன்னை உலகினுக் கேதந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு,[25]

என்ற பாராட்டுக்கு ஈடு சொல்ல முடியா? வள்ளுவன் தமிழ்நாட்டின் கொடைப் பொருள் என்று மொழியோடும் நாட்டோடும் வைத்துப் புகழ்ந்த கவிஞர் இவர் ஒருவரேயாவர். இந்த மாபெரும் புலவனை உலகிற்கு ஈந்து தமிழ்நாடு பெற்றது வான்புகழாகும். இங்ஙனம் புகழ் வாணிகம் நடத்திய **பாரதீயம்** தனிப் பெருஞ் சிறப்புடையது; ஒப்பற்ற புதுமைப் போக்கைக் கொண்டது.

நாட்டுப் பற்றைப் போல் தமிழ்மொழியில் பற்றும் பாரதியாரிடம் மிக்கிருந்தது. 'பாருக்குள்ளே நல்ல நாடு பாரத நாடு' என்று பறை சாற்றியது போலவே, தாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிய மொழியை எங்கும் கண்டதில்லை என்று வீறு பேசுகின்றார்.[26] தமிழைப்பற்றி இவர் இயற்றிய நான்கு பாடல்களும் தமிழர்களால் பொன்னே போல் போற்றப் பெற வேண்டியவை. அவற்றில் உணர்த்தப் பெறும் செய்திகளை உணர்ந்து உணர்ந்து தமிழர்கள் வீறு

25. ஷை. ஷை - 7
26. தே. கீ. தமிழ் - 1

கொண்டெழுதல் வேண்டும்; மொழியை வளப்படுத்த வேண்டும். இலக்கியச் செல்வத்தை, கலைச் செல்வத்தைப் பெருக்குதல் வேண்டும்.

*சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே-அதைத்*
*தொழுது படித்திடடி பாப்பா,*[27]

என்று தமிழன் உயர்வைச் சின்னஞ்சிறு குழந்தைகளின் பிஞ்சு மனங்களில் படியச் செய்ததிலிருந்து இவர்தம் மொழிப் பற்றை அறிய முடிகின்றது.

*யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்,*
*வள்ளுவர்போல், இளங்கோ வைப்போல்*
*பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை?*
*உண்மை, வெறும்புகழ்ச்சி இல்லை*[28]

என்று மொழியின் பெருமையை, இலக்கிய வளத்தின் சிறப்பை முரசு கொட்டி முழக்குவர்.

*ஆதிசிவன் பெற்று விட்டான் - என்னை*
*ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்*
*வேதியன் கண்டு மகிழ்ந்தே - நிறை*
*மேவும் இலக்கணம் செய்து கொடுத்*
*தான்* [29]

என்று தமிழ்த்தாயின் வாயில் வைத்தே தமிழின் தெய்வப் பிறப்பை எடுத்துரைப்பார்; இலக்கணத்தின் பழமையையும் பகர்வார். இவ்விடத்தில்,

27. ப. பா. பாப்பாப் பாட்டு - 12
28. தே. கீ. தமிழ் - 2
29. ஷெ. தமிழ்த்தாய் - 1

என்றுமுள தென்தமிழ்
இயம்பி இசை கொண்டான்.[30]

என்ற அகத்திய முனிவரைப் பற்றிய கம்பன் வாக்கை நினைக்கின்றோம். தமிழ்ப் புலவோர்கள் தீஞ்சுவைக் காவியங்களைச் செய்து தந்ததையும் நம் திருச்செவி சாற்றுவார்.

கன்னிப் பருவத்தில் அந்நாள் - என்றன்
காதில் விழுந்த திசைமொழி எல்லாம்
என்னென்ன வோபெயர் உண்டு - பின்னர்
யாவும் அழிவுற் றிருந்தன கண்டீர்![31]

என்று தம் காதில் விழுந்த திசைமொழிகளெல்லாம் பெயர் கூடத் தெரியாமல் அழிவுற்றன என்று கூறி தமிழின் இறவாத தன்மையை - மார்க்கண்டேயத்தை - எடுத்துக் காட்டி மகிழ்வார். இந்த உலகத்தில் அமர வாழ்வு பெற வேண்டுமாயின், "தெள்ளுதமிழ் அமுதின் சுவை காணுங்கள்" என்று மொழிவார். இன்பத்தேன் வேண்டு மென்றால் "செந்தமிழ் நாடென்று செய்யுங்கள்" என்று மேலும் நாட்டின்மேல் வைத்து நல்லுரை பகர்வார். "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்பதே இங்ஙனம் பகர் வதற்குக் காரணம் என்று கருதலாம். தமிழ்மொழி வளர்ச்சியைப் பற்றிய பாரதீயம் இது:

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்ற வேண்டும்[32]

30. கம்ப. ஆரணிய - அகத்திய - 47
31. ஷை. ஷை - 6
32. ஷை. தமிழ் - 3

**3. கல்விச் சிந்தனையாளர்:** பொது மக்கள் கடவுளை வழிபடுவதற்குத் திருக்கோயில்கள் இன்றியமையாதவை; வழிபாட்டிற்கு கோயில்கள் இன்றியமையாத நல்ல சூழ் நிலையையும் தூய்மையையும் போற்றிக் காப்பவை. அது போலவே பொது மக்கள் தம் குழந்தைகள், தம் சிறுவர்கள், வளர்ந்தவர்கள் இவர்கள் பயிற்சி பெறுவதற்கு எல்லா நிலைகளிலும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் இன்றியமையாதவை என்பதை,

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி;
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பலபல பள்ளி[1]

என்ற கவிதையில் புலப்படுத்துவார். நாடு விடுதலை பெற்ற பிறகு இந்த நிலையை எம்மருங்கும் காணலாம். வழிவழியாக முன்னோர் தேடி வைத்த அறிவுச் செல்வத்தைப் பின்னர் வரும் இளைஞர்கள் பெற்றுப் பயனடைய வேண்டும், தம்மையும் உயர்த்தித் தாம் பிறந்த நாட்டையும் உயர்த்த வேண்டும் என்பது கல்வி பற்றிக் கவிஞர் கண்ட கனவு. வறுமையின் காரணமாக இளைஞன் ஒருவன் கல்வி பெறுவதற்குத் தடை ஏற்படக் கூடாது என்பதையும் சிந்தித்துள்ளார் கவிஞர். செல்வர்களும் அரசும் இதற்கு வழி செய்தல் வேண்டும் என்பதை வலியுறுத்துவது போல்,

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்;
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;

1. தோ. பா. வெள்ளைத் தாமரை - 6

பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்தல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத்தறி வித்தல்[2]

என்று பேசுவார். அப்பொழுதுதான் தமிழகம் 'கல்வி சிறந்த தமிழ் நாடு' என்ற பழம் பெரும் புகழை நிலை நிறுத்தும் என்பது கவிஞரின் நீள் நோக்கு. கல்வி பற்றிய இவர்தம் சிந்தனை பல கிளைகளில் சென்றுள்ளது என்பதையும் காண்கின்றோம். நாற்றங் கால்களை நன்கு கவனித்தால்தான் உழவுத் தொழில் வளமாக அமையும். அது போலவே குழந்தைகளைத் தொடக்கத்திலிருந்தே சிறந்த முறையில் கல்வி கற்றலில் ஈடுபடுத்த நினைக்கும் கவிஞர்,

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு;
மாலை முழுதும்விளை யாட்டு -என்று
வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா.[3]

என்று பாப்பாவுக்கு — குழந்தைக்கு — அன்பு வழியில் அறிவுரை பகர்கின்றார்.

தொடக்க நிலைக் கல்விக்கு ஒரு பாட திட்டத்தையே வகுத்துக் காட்டுகின்றார். (அ) எழுத்து, படிப்பு, கணக்கு; (ஆ) இலேசான சரித்திரப் (வரலாற்றுப்) பாடங்கள்; (இ) பூமி சாஸ்திரம் (புவியியல்); (ஈ) மதப் படிப்பு (சமயக் கல்வி), (2) ராஜ்ய சாஸ்திரம் (Civics); (ஊ) பொருள் நூல் (Economics); (எ) சயனஸ் அல்லது

2. ஷெ. ஷெ - 9
3. பா. கா. பாப்பா பாட்டு - 6

பௌதிக சாஸ்திரம் (இயற்பியல் — Physics); (ஏ) கைத்தொழில், விவசாயம் (வேளாண்மை), தோட்டப் பயிற்சி (gardening), வியாபாரம் (வாணிகம்) (ஐ) சரீரப் (உடற்) பயிற்சி; (ஒ) யாத்திரை (சுற்றுலா) இவற்றை அநுபவ அடிப்படையில் காட்டுகின்றார்; கற்பிக்க வேண்டும் என்று சுட்டியுரைக்கின்றார்.[4] நடைமுறையில் மேற்கொள்ள வேண்டியதற்குப் பொதுக் குறிப்புகளையும் தருகின்றார். தாய்மொழி மூலம் கல்வி பயிற்றப் பெறுதல் வேண்டும் என்பது இவர்தம் உயிராய கொள்கை.

## ஆங்கிலக் கல்வி :

ஆங்கிலக் கல்வி பற்றி இவர் கூறும் கண்டனக் கருத்துகள் மிகைபடக் கூறுவனவாகவே தோன்றுகின்றன. காந்தியடிகள், பண்டித ஜவகர்லால்நேரு, இராஜாஜி போன்ற பெருந்தலைவர்கள் இம்முறைக் கல்வியைப் பெற்றவர்களே. இவர்கள் யாவரும் கெட்டா போனார்கள்? இம்முறைக் கல்வியின் விளைவு பற்றி.

செலவு தந்தைக்கோ ராயிரம் சென்றது;
தீங்கெ னக்குப்பல் லாயிரம் சேர்ந்தன;
நலமோ ரெள்துணை யும்கண்டி லேனிதை
நாற்ப தாயிரம் கோயிலிற் சொல்லுவேன்.[5]

என்று இவர் கூறும் கருத்து ஒப்புக்கொள்ளத் தக்கதாக இல்லை. இந்தக் கல்வி முறையைப் 'வார்தாக் கல்வி முறை'யாலும், இராஜாஜி கொண்டு வந்த 'குலமுறைக் கல்வி'யாலும் தகர்த்தெறிய முடியவில்லை. அவைதாம் நம் நாட்டில் செல்லாக் காசாயின. நாடு விடுதலையடைந்து கிட்டத்தட்ட நாற்பதாண்டுகட்கு மேல்

4. பாரதியார் கட்டுரைகள். பக். (353- 365)
5. சுயசரிதை - 29

ஆயினும் மைய அரசாலும் மாநில அரசாலும் நம் நாட்டுக்கேற்ற கல்வி முறையை வகுக்க இயலவில்லை. பழைய ஆங்கிலக் கல்வி முறையில் சில ஒட்டு வேலைகள் செய்கின்றனரேயின்றி அதனை அடியோடு அகற்றிப் புதுக்கல்வி ஏற்பாட்டை (Curriculum) வகுக்கவில்லை. அதிகம் பேசுவானேன்? நம் நாட்டுக்கேற்ற கல்விமுறை இன்னதுதான் என்று திட்டவட்டமாக உறுதிப்படுத்தவும் இயலவில்லை. இங்குப் பாரதியாரின் கவிதைக்கு மதிப்பு தரும் அளவுக்குக் கவிதை நுவலும் கருத்திற்குத் தர முடியவில்லை. நாடு விடுதலை பெறுவதற்கு முன் இஃது ஒரு பிரசாரக் கவிதையாகப் பயன்பட்டிருக்கலாம்; இப் போது இதனைக் கூறுவது பத்தாம் பசலித்தனமாகும். இந்த நிலையில் இன்று எம்மருங்கும் ஆங்கிலமொழி மூலம் கல்வி புகட்டும் பள்ளிகள் தோன்றிய வண்ணம் உள்ளன. பெற்றோர்களும் ஊதாரித்தனமாகச் செலவு செய்து வருவதையும் காணலாம். ஒரு சாரார் - ஆங்கில முறையில் கல்வி பயிற்றும் முறையையே வெறுப்பதையும், இன்னொரு சாரார் ஆங்கில மொழியையே வெறுப்பதை யும் காணமுடிகின்றது. நாமே வகுத்துக் கொண்ட அரசு இன்னும் தாய்மொழி மூலம் கல்வி புகட்ட வழிவகைளை வகுக்க முடியாமல் உள்ளது. அப்படி ஒரு முறை வகுக்கப் பெற்றுச் செயற்பட்டால் பின் விளைவுகள் என்னாமோ என்று எண்ணித் தயங்குகின்றதோ என்று எண்ணத் தோன்றுகின்றது. குழந்தை பிறந்தவுடன் அதன் பெற்றோர் அதன் கல்வி பற்றியும் அதன் வேலைப் வாய்ப்பைப் பற்றியும் அதிகமாகக் கவலை கொள்வது நடைமுறைப் போக்காக இருப்பதை எம்மருங்கும் காணலாம்.

## அறிவியல் கல்வி :

இன்று அறிவியல் வளர்ச்சியை **அறிவு வெடிப்பு** (Explosion of Knoupedge) என்று கூறலாம். அணுவாற்

றல் ஆய்விலும் விண்வெளி ஆய்விலும் நாடு நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது. நாடு விடுதலை பெற்ற பிறகு தான் இத்தகைய துறைகளிலெல்லாம் கவனம் செலுத்த நம் அறிவியலறிஞர்கட்கு வாய்ப்பு கிட்டியது, **ஆரிய பட்டா பாஸ்கரா, ஆப்பில், இன்சாட்** போன்ற விண்கலாங்களை—துணைக் கோள்களை—விண்வெளியில் செலுத்தி உலகப் புகழ் பெற்றனர் நம் நாட்டு அறிவியலறிஞர்கள்: நாடு விடுதலை பெறுவதற்கு முன்னரே பாரதியார் உள்ளத்தில் அறிவியல், கல்வியல் கல்வி பற்றிய சிந்தனை ஓடியுள்ளது.

*புத்தம் புதிய கலைகள்-பஞ்ச*
*பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;*
*மெத்த வளருது மேற்கே-அந்த*
*மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.*[6]

என்று மேனாட்டான் ஒருவன் கூறியதாக நினைந்து உள்ளம் குமுறுகின்றார் கவிஞர். அதிலும் 'சொல்லும் திறமை தமிழ் மெசழிக்கில்லை'—மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற கூற்றுகள் அவர் உள்ளத்தை உறுத்துகின்றன. இந்தப் பழித்திரக் கவிஞர் நமக்கு வழிகாட்டுகின்றார்.

*சென்றிடு வீர்எட்டுத் திக்கும்-கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச்*
*சேர்ப்பீர்.*[7]

என்றும்,

---

6. தே. கீ. தமிழ்த்தாய்-9
7. ஷை - ஷை - 11.

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்;
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்.[8]

என்றும் யோசனை கூறுகின்றார். தமிழில் எல்லாக் கலைகளையும் எழுதவும் விளக்கவும் முடியும் என்பதை இன்றும் சிலர் ஒப்புக் கொள்வதில்லை. இவர்கள் தமிழ் மொழியில் எல்லாவற்றிற்கும் தக்க கலைச் சொற்கள் இல்லாத காரணத்தால்தான் இவ்வாறு எண்ணுகின்றனர், எந்த மொழியிலும் அதன் வாயிலாகப் பொருள்களை விளக்க முயன்றாலன்றிப் புதிய கலைகட்கு வேண்டிய சொற்களும் சொற்றொடர்களும் அமைவதில்லை. பொருள்களை — கருத்துகளை — எடுத்துக்கொண்டு விளக்க முயன்றால் இவை தாமாகவே அமைந்துவிடும். இவ்வாறே மேற்புல மொழியனைத்திலும் கலைச்சொற்கள் உண்டாகி அம்மொழிகள் வளர்ச்சியடைந்து வருகின்றன. கலைச் சொற்களை உண்டாக்கிக்கொண்டு தாய் மொழியில் தொடங்க வேண்டும் என்று நினைப்பது நீந்தக் கற்றுக் கொண்ட பிறகு நீரில் இறங்க வேண்டும் என்று எண்ணுவது போலாகும். செயலில் இறங்கினால்தான் அனைத்தும் சீர்படும். சாலை அமைப்பதற்கு முன்னர் மண்சாலை, மண்ணும் பெரிய சல்லிகளும் கலந்த சாலை, மண்ணும் சிறிய சல்லிகளும் கலந்த சாலை என்றிப்படிப் பல படிகளைத் தாண்ட வேண்டியுள்ளதல்லவா? இந்நிலையைத் தாய்மொழி **பயிற்று மொழியாக** அமைவதிலும் சந்திக்க நேரிடும். இலக்கிய இலக்கண வளமும், சொற்களஞ்சியப் பேறும் பெற்றுள்ள தமிழ் மொழியின் நீர்மையை அறிந்து, பிற கலைகளைத் தமிழ் மொழியில் வடித்துத்தரும் பணியில் ஈடுபடுவோர்கள்தாம் 'தமிழ் மொழி

8. ஷை தமிழ் - 2

அனைத்திற்கும் வளைந்து கொடுக்கும்' என்றஉண்மையை அறிவர். 'அப் பொழுதுதான் சொல்லும் திறமை தமிழ் மொழிக்கில்லை' என்ற வசையும் நீங்கும். தமிழ் மொழியும் வளர்ந்து மேலும் வளம் பெறும்.

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளியுண் டாகும்[9]

என்ற பாட்டடியில் கவிஞரின் 'ஞானம் கனிந்த நலம்' தெளிவாகப் புலனாகும்.

பயிற்றில் பலகல்வி தந்து - இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்[10]

என்று கவிஞர் அறிவியல் கல்விக்கு ஆற்றுப் படுத்துகின்றார். தாய்மொழி மூலம் அக்கல்வி பெற வாய்ப்பு அமைக்கப் பெறுமானால் பருத்தி புடவையாய்க் காய்த்தது போன்ற பயனை நல்கும். விலைப் பாலைவிட முலைப்பால் சிறந்ததல்லவா?

மந்திரங்கள் போம்வினைத்
தந்திரம் கற்போம்;
வானையளப் போம் கடல்
மீனையளப் போம்;
சந்திரமண் டலத்தியல்
கண்டு தெளிவோம்;
சந்திதெருப் பெருக்கும்
சாத்திரம் கற்போம்.[11]

9. ஷை - ஷை - 4
10. பா. பா. முரசு - 30
11. தே. .கீ. பாரத தேசம்-11

என்ற கவிதையில் கவிஞரின் அறிவியல் கல்வியில் பேரவா நிழலிடுவதைக் கண்டு மகிழலாம்.

அறிவியல் கல்வி தமிழில் (தாய் மொழியில்) பெற வேண்டும் என்பது இவர்தம் அதிராக் கொள்கை. அதற்கு முன்னர் அறிவியல்துறைகட்குரிய கலைச் சொற்களை அறுதியிடல் வேண்டும் என்பதற்கும் கோடி காட்டுகின்றார்; யோசனைகள் கூறுகின்றார்.[12] "தமிழில் சாத்திர பரிபாஷை" "அஸ்திவார காரியம்", "பரிபாஷை சேகரிக்க ஒருபாயம்" என்ற தலைப்புகளில் இவற்றைக் காணலாம். இராஜாஜி தலைமையமைச்சராக இருந்த காலத்திலும் (நாடு விடுதலையடைவதற்கு முன்பு), திரு. தி. சு. அவிநாசிலிங்கம் கல்வியமைச்சராகப் பணி புரிந்த காலத்திலும் (விடுதலைக்குப் பின்னர்) திரு. சி. சுப்பிரமணியம் கல்வியமைச்சராகப் பணிபுரிந்த காலத்திலும் (விடுதலைக்குப் பின்னர்) கலைச் சொற்கள் தொகுக்கப்பெற்றதை நாம் அறிவோம்[13] இவை தவிர கோவையிலிருந்து வெளிவரும் கலைக்கதிர் நிறுவனம் சுமார் ஐம்பதாண்டுப் பணியின் விளைவாக கலைச்சொற்களை மூன்று தொகுதிகளாக வெளியிட்டுள்ளமை (1985) ஓர் இமாலய சாதனையாகும்.

## தொழில் கல்வி :

தொழில் வளம் பெருகினால்தான் நாட்டுவளம் பெருகும் என்பது இக்காலப் பொருளியல் காட்டும்

---

12. பாரதியார் கட்டுரைகள் -பக். (208-210)
13. இதன் விவரங்களையும் இதன் தொடர்பான ஆக்கச் செயல்களையும் இந்த ஆசிரியரின் **'அறிவியல் தமிழ்'** (கட்டுரை-6) என்ற நூலில் (பாரி நிலையம், சென்னை-108) விரிவாகக் காணலாம்.

உண்மை. ஜப்பான் போன்ற சிறு நாடுகளிலும் செல்வம் கொழிப்பதை இன்று நாம் காணாமல் இல்லை. பின் தங்கிய நாடுகளின் வளர்ச்சிக்கு இத்தகைய சிறு நாடு களும் உதவி வருவது நமக்கு வியப்பினை உண்டாக்கு கின்றது.

பல்வேறு தொழில்கள் மூலம் பல்வேறு பண்டங்களின் உற்பத்தி பெருக வேண்டுமானால் எல்லா மட்டங்களிலும் தொழிற் கல்வி பெருகவேண்டும். சிறியனவும் பெரியனவு மான தொழிற் சாலைகள் பெருக வேண்டும். பண்டங் களை வேற்று நாடுகட்கு ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியைப் (Foreign exchange) பெருக்குதல் வேண்டும். இவ்வாறெல்லாம் நாட்டின் தொழில்வளம் பற்றிக் கனவுகள் காண்கின்றார் பாரதியார்.

பட்டினில் ஆடையும் பஞ்சினில் உடையும்
பண்ணி மலைகளென வீதிகுவிப் போம்.
கட்டித் திரவியங்கள் கொண்டுவரு வோர்
காசினி வணிகருக்கு அவைகொடுப் போம்.[14]

என்ற பாடலில் இந்தக் கனவுகளைக் கண்டு தெளியலாம். பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்தலையும் தொழிற் சாலைகளை அமைத்தலையும் தொழிற்கல்வி நிலையங் களை நிறுவுதலையும் பற்றிய திட்டங்களை,

ஆயுதம்செய் வோம்நல்ல காகிதம்செய் வோம்
ஆலைகள்வைப் போம்கல்விச்
சாலைகள்வைப் போம்:
ஓயுதல்செய் வோம்தலை சாயுதல்செய் யோம்;
உண்மைகள்சொல் வோம்பல
வண்மைகள்செய் வோம்.

14. தே. கீ. பாரததேசம் - 6

*குடைகள்செய் வோம்உழு படைகள்செய் வோம்*
*கோணிகள்செய் வோம்இரும் பாணிகள்*
*செய் வோம்;*
*நடையும் பறப்புமுணர் வண்டிகள்செய் வோம்*
*ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள்செய் வோம்*

* * *

*ஓவியம்செய் வோம்நல்ல ஊசிகள்செய் வோம்*
*உலகத் தொழிலனைத்தும் உவந்துசெய்*
*வோம்.*[15]

என்ற கவிதைப் பகுதிகளில் கண்டு மகிழலாம்.

இன்னும் புதிய பாரதத்தில் சிங்களத் தீவுக்குப் பாலம் அமைத்தல், கங்கை நதியின் மிகை நீரை நடுநாட்டிற்குக் கொணர்ந்து உழவுத் தொழிலை மேம்பாட்டடையச் செய்தல், நிலத்தினை அகழ்ந்து தங்கம் முதலாம் கனிவளங் களையும் அடைதல், நிலத்தடியில் மறைந்து கிடக்கும் எண்ணெய் வளத்தைக் கண்டு வெளிக்கொணர்தல், முத்துக்குளித்தல், கோதுமைக்கு வெற்றிலையைப் பண்ட மாற்று செய்தல் போன்ற வகைகளில் செல்வத்தைப் தைப் பெருக்குதலைப் பற்றிய கனவுகள் காண்கின்றார். இவர் கண்ட கனவுகளில் ஒன்றுதான் கங்கை காவிரித் திட்டமாக உருவெடுத்து செயற்பட்டு வருகின்றது.

*காசி நகர்ப்புலவர் பேசும்உரை தான்,*
*காஞ்சியில் கேட்பதற்கோர் கருவிசெய்*
*வோம்.*[16]

என்று வானொலிப் பெட்டிகள் உண்டாக்குவதையும் வானொலி அஞ்சல் செய்தலையும் முத்தாய்ப்பாகக் காட்டுவர்.

---

15. ஷை- ஷை - 9, 10, 12.
16. ஷை. ஷை-7

தொழில் கல்வியும் தொழில் வளமும் பெருக வேண்டும் என்பதை,

- தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதில்
பல்லோர் துணைபுரிதல் வேண்டும்;
... ... ... ... ... ... ... ...
கூடுத் திரவியத்தின் குவைகள் - திறல்
கொள்ளும் கோடிவகைத் தொழில்கள்
- இவை
நாடும் படிக்குவினை செய்து
நாட்டோர் கீர்த்தியெங்கும் ஓங்கக்- கலி
சாடுந் திறலெனக்குத் தருவாய் - அடி
தாயே! உனக்கரிய துண்டோ ?

என்ற கவிதைப் பகுதிகளில் தெரிவிக்கின்றார். இப்படித் தமக்கு ஒரு 'பேராசை' இருப்பதை 'ஓம் காளி வலிய சாமுண்டி' தேவதையிடம் காட்டி, இந்த ஆசையை நிறைவேற்றுமாறு 'கோடி முறை' தொழுகின்றார்.

வேளாண்மைத் தொழிலுக்கும் கைத்தொழில் போன்றவற்றிற்கும் மதிப்பு தரும் கல்வியைப் போற்று கின்றார். 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'[17] என்ற கூற்றினால் இதனைத் தெளியலாம். 'தொழில்'[18] என்ற கவிதையில் பல்வேறு தொழில்களைப் பாராட்டி,

அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே.[19]

17. தே. கீ. சுதந்திரப் பள்ளு-4
18. ப. பா. தொழில்
19. ஷை. ஷை-1

என்று ஆற்றுப் படுத்துகின்றார். இதனால் இவர் தொழிற் கல்விக்கும் ஊக்கம் தருவதை உணரலாம்.

## பெண் கல்வி :

ஆறு, செல்வம், கலை, உடுக்கள் இவற்றையெல்லாம் பெண் தெய்வமாகப் பாவிக்கும் நம் நாட்டில் பாரதியார் இக்காலச் சமூகம் பெண் இனத்திற்கு மதிப்பு தராத இழிநிலையை நினைந்து பார்க்கின்றார். 'ஞாலம் முற்றும் பராசக்தி தோற்றம்' என்பதில் அழுந்திய மனத்தையுடைய கவிஞர் பெண் இனத்தைப் பற்றிச் சிந்திப்பது இயல்பேயன்றோ? எனவே,

*செவ்விது, செவ்விது, பெண்மை - ஆ!*
*செவ்விது செவ்விது காதல்!*

*காதலி னாலுயிர் தோன்றும்; - இங்கு*
*காதலி னாலுயிர் வீரத்தி லேறும்!*
*காதலி னாலறி வெய்தும் - இங்கு*
*காதல் கவிதைப் பயிரை வளர்க்கும்.*[20]

என்று பெண்மையையும் காதலையும் இணைத்துப் போற்றுவர். காதலின் ஊற்று பெண்ணன்றோ?

'மனைக்கு விளக்கு மடவார்' என்று பேசுவர் நான்மணிக்கடிகை ஆசிரியர். ஒரு குடும்பத்தில் தலைவி கற்றவளாக இருந்தால் அவள் வழித்தோன்றல்கள் யாவரும் நல்ல சூழ்நிலையில் கல்வி பெறுவதற்கு அடிப்படை அமைத்துத் தருவாள் என்பது கவிஞரின் கருத்து. பெண்களுக்கு உரிமை இல்லாததாலும் பெண்கள் படிக்கக் கூடாது என்ற மூடப்பழக்கம் எப்படியோ ஏற்பட்டு

20. த. பா. அந்திப் பொழுது-3, 4.

விட்டதாலும், சமூகம் பெண்களை இழிவு செய்வதாலும், பெண்கல்வியில் தேக்கம் ஏற்பட்டதைக் கவிஞர்,

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமை யைக்கொ ளுத்துவோம்.[21]

என்று வெகுண்டு உரைப்பர்.

வைய வாழ்வு தன்னில் எந்த
வகையி லும்ந மக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்க ளோடு பெண்களும்
சரிநி கர்ச மான மாக
வாழ்வம் இந்த நாட்டிலே.[22]

என்று வீரமுழக்கம் செய்வர்.

இயல்பாகவே பெண்கள் அறிவுக் கூர்மையுடையவர்கள். ஆண்களைவிட இளமையிலேயே பொறுப்பை உணர்பவர்கள். கடமையைப் போற்றுபவர்கள். இதனை நன்கு உணர்ந்த கவிஞர்,

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளே சிலமூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்.[23]

என்ற சில அறிவிலிகளை அம்பலப் படுத்துகின்றார். இன்று பள்ளிகள், கல்லூரிகளில் பெண்களே ஆண்களை

21. தே. கீ. விடுதலை-3
22. ஷை. ஷை.
23. ப. பா. முரசு-9

விட அதிக எண்ணிக்கையில் தேறி வருவதைக் காண்கின் றோம். சமூகத்தில்-குடும்பத்தில்-ஆணும் பெண்ணும் இரு கண்களை யொத்தவர்கள். ஒரு கண்ணைக் குத்திக் கெடுத்தல் மடமைச் செயலாவதுபோலவே, அவர்கள் அறிவை வளராது தடுத்தலும் அறிவுடைமைச் செயலன்று என்று உவமையால் விளக்குகின்றார்.

கண்கள் இரண்டில் ஒன்றைக் - குத்தி
காட்சி கெடுத்திட லாமோ ?
பெண்க ளறிவை வளர்த்தால் - வையம்
பேதமை யற்றிடும் காணீர்[24]

என்று பேசுவதைக் காணலாம்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்கு
மால்[25]

என்று மேலும் இக்கருத்தினை அரண் செய்வர். பெண்கள் உயர்கல்வியைப் பெற்று உயர்ந்தோங்க வேண்டும் என்பது கவிஞரின் உட்கிடக்கை.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்
திங்கே

24. ஷை. ஷை.10
25. ஷை. புதுமைப் பெண் - 1

*திலக வாணுத லார்தங்கள் பாரத*
*தேச மோங்க உழைத்திடல் வேண்டு*
*மாம்;*
*விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை*
*வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.*

*சாத்தி ரங்கள் பலபல கற்பராம்;*
*சவுரி யங்கள் பலபல செய்வராம்;*
*மூத்த பொய்ம்மைகள் யாவும் அழிப்பராம்;*
*மூடக் கட்டுகள் யாவும் தகர்ப்பராம்;*
*காத்து மானிடர் செய்கை யனைத் தையும்*
*கடவு ளர்க்கினி தாகச் சமைப்பராம்;*
*ஏத்தி ஆண் மக்கள் போற்றிட வாழ்வராம்*
*இளைய நங்கையின் எண்ணங்கள்*
*கேட்டிரோ?*[26]

என்றெல்லாம் மேல்நிலைக் கல்வி பெற்ற பெண்கள் குலம் தழைக்கப் பேரவாக் கொள்கின்றார். பெண்கள் பற்றி இங்ஙனம் பல இடங்களில் பேசுவார் கவிஞர்.

## புதுமுறைக் கல்வி :

பாரதியாரின் கவிதைகளையும் பிறவற்றையும் ஊன்றிப் பயிலுங்கால் அவர் ஏதோ புதுமுறைக் கல்வியைப்பற்றிச் சிந்தித்தாக ஊகம் செய்யத் தூண்டு கின்றது. இந்தமுறைக் கல்வியினால் பண்பாடு, புதுமுறை யான சமய நம்பிக்கை, பக்தி வளர்ச்சி, மூடப் பழக்க வழக்கங்களை ஒழித்தல் போன்ற வகையில்—சீர்திருத்த

26. ஷெ. புதுமைப் பெண்-8, 9

முறையில்—மக்களிடம் அமைய வேண்டும் எனக் கருதினாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது. இவற்றையும் காண்போம்.

பாரதியின்காலத்தில் மக்களிடம் மூடப்பழக்கங்கள்' நிறைந்திருந்தன. பேய்கள், மந்திரவாதியின் செயல்கள், யந்திர சூனியங்கள், பொய்ச்சாத்திரங்கள் ஆகியவற்றில் நம்பிக்கை—இவற்றைக் கண்டு 'நெஞ்சு பொறுக்குதில்லையே'[27] என்று நொந்து கொள்ளுகின்றார். **'கண்ணன்-என் தாய்'** (2) என்ற பாட்டில், சாதிக் கொடுமைகள், சாதிப் பிரிவுகள், பலபல தெய்வ வழிபாடுகளால் பிரிவுகள்-இவற்றைக் கண்டு இரங்குகின்றார், வெள்ளை நிறப் பூனையொன்று, சாம்பல்நிறம், கருஞ்சாந்து நிறம், பாம்பு நிறம், பாலின் நிறம்-இந்நிறங்களின் குட்டிகள் போட்டாலும் அவை யாவும் ஒரேதரமானவை என்று எடுத்துக்காட்டுகின்றார். எங்கும் சகோதரத் தன்மை நில விழைகின்றார்.

சாத்திரம் கோடி வைத்தாள்; - அவை
தம்மினும் உயர்ந்தோர் ஞானம் வைத்
தாள்;
மீத்திடும் பொழுதினிலே - நான்
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்தபொய் வேதங்களும் - மதக்
கொலைகளும் அரசர்தம் கூத்துக்களும்
மூத்தவர் பொய்நடையும் - இள
மூடர்தம் கவலையும் அவள் புனைந்தாள்.

27. தே. கீ. பாரத ஜனங்களின் தற்கால நிலைமை.

**4. வைணவச் செல்வர்:** பாரதியின் பாடல்களில் காணப் பெறும் பூமகள், இராமன், கோவிந்தன், இவர்கள் பற்றிய பாடல்களும், 'இறைவா! இறைவா' என்ற தனிப்பாடலும், 'கண்ணன் பாட்டு' என்ற தலைப்பில் காணப்பெறும் 23 பாடல்களும், 'தோத்திரப் பாடல்கள்' 'வேதாந்தப் பாடல்கள்' என்ற பிரிவுகளில் பல்வேறு தலைப்புகளில் காணப் பெறும் 14 பாடல்களும் பாரதியாரை ஒரு வைணவச் செல்வராகக் காட்டுகின்றன.

> "இதன் (கண்ணன் பாட்டின்) ஆசிரியர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரைத் தமிழ் நாட்டார் அறிவார்கள். ஆனால் அவர் பெருமையை உள்ளபடி அறிந்தவர்கள் மிகமிகச் சிலரே யாவர். ஸ்ரீமான் பாரதியார் ஒரு பெரிய மேதாவி. மகா பண்டிதர்; தெய்விகப் புலவர்; **ஜீவன்முக்தர்.** இவர் தமிழ்நாட்டின் 'ரவீந்திரர்'; இவர் எனது தமிழ் நாட்டின் தவப்பயன்...இந்த ஆசிரியரின் காலத்திற்குப் பின், எத்தனையோ நூற்றாண்டுகட்குப் பின், இவர் பாடல்களைத் தமிழ் நாட்டு மாதர்களும் புருஷர்களும் மிகுந்த இன்பத்துடன் படித்துக் களிப்படையும் காட்சியை யான் இப்பொழுதே காண்கின்றேன். இந்நூல் வாழ்க! எந்தாய் வாழ்க!!"[1]

இது 'கண்ணன் பாட்டுக்கு' **நெல்லையப்ப பிள்ளை** எழுதிய முகவுரையின் பகுதி. உபநிடதக் கூற்று போன்ற பிள்ளையவர்களின் கூற்றின் உண்மையை இன்று நாம் காண்கின்றோம்.

எல்லாம் வல்ல எம்பெருமானாகிய சர்வேசுவரனுக்கும் ஆன்மகோடிகளாகிய நமக்கும் உள்ள உறவை அறிந்து கொள்வதை **'சம்பந்த ஞானம்'** என்று வைணவ சித்தாந்தம்

1. முதற் பதிப்பின் முகவுரை.

குறிப்பிடும். 'கண்ணன் பாட்டு' அமைவதில் பாரதியாருக்கு இந்த 'சம்பந்த ஞானம்' வழிகாட்டியிருக்க வேண்டும். எம்பெருமானுக்கும் நமக்கும் (சீவான்மாக்களுக்கும்) உள்ள சம்பந்தம் **ஒன்பது** வகைப்படும் என்பதை வைணவ மந்திரங்களுள் ஒன்றான திருமந்திரத்தால் அறிகின்றோம். இந்த ஒன்பது வகை உறவு முறைகளைப் பிள்ளை உலக ஆசிரியர் அருளியுள்ள **'நவவித சம்பந்தம்'**[2] என்னும் நூலில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. இந்த உறவு முறைகளை ஆழ்வார் பாசுரங்களிலும் காணலாம் தவிர, இஷ்ட தெய்வத்தைப்—வழிபடு கடவுளைப் — பல்வேறு பாவனைகளால் வழிபடலாம் என்று நம் நாட்டுப் பக்திப்பனுவல்களும் கூறுகின்றன. ஆழ்வார் பாசுரங்களில் எம்பெருமானைத் தாய், தந்தை, குரு, தெய்வம் என்று பேசப் பெற்றிருப்பதையும் காணலாம். இவற்றையெல்லாம் மனத்தில் கொண்டுதான் பாரதியார் கண்ணனைத் தந்தையாகவும், தாயாகவும் தோழனாகவும், சீடனாகவும், அரசனாகவும், காதலியாகவும், காதலனாகவும், சற்குருவாகவும், தெய்வமாகவும் பாவித்துப் பாடியுள்ளார் என்று கருதலாம். பாரதியாரின் **'கண்ணன் பாட்டி'**லிருந்து ஒன்றிரண்டு உறவு முறைகளைக் காண்போம்.

## கண்ணன் - என் தாய் :

இறைவனைத்தாய் நிலையிலும் தந்தை நிலையிலும் வைத்து எண்ணுவர் சமயச் சான்றோர். அன்பு காட்டி வேண்டியவற்றை ஈவதால் தாயும், கல்வி முதலியவற்றை நடத்துவதில் தந்தையும் பொறுப்பாக இருப்பதால் அவர்கள் உவமையாகக் கொள்ளப் பெற்றனர்.

---

2. பதினெட்டு (அஷ்டாதச) இரகசிய நூல்களில் இஃது ஒன்று.

...... நல்வீடு செய்யும்
மாதாவினைப் பிதுவை
திருமாலை வணக்குவனே,

— திருவிருத்-95

என்றும்,

மேலாத் தாய்தந்தையும்
அவரேஇனி ஆவாரே.

— திருவாய் 5.1:8

என்றும் நம்மாழ்வார் கூறியிருத்தலைக் கண்டு மகிழலாம். இந்தத் தந்தை-மகன் உறவு நவவித சம்பந்தங்களில் ஒன்றாகும். நவவித சம்பந்தத்தைக் கூறும் திருமந்திரம் தாய்-மகன் உறவினைக் குறிப்பிடவில்லை. ஆழ்வார் பெருமக்களிடமும் கம்பன் போன்ற மாபெரும் கவிஞர்களிடமும் இந்தச் சிந்தனையைக் காணலாம்.

தெளிவிலா கலங்கல் நீர்சூழ்
திருவரங் கத்துள் ஓங்கும்
ஒளியுணர் தாமே யன்றே
தந்தையும் தாயும் ஆவார்

— திருமாலை-37

என்ற தொண்டரடிப் பொடிகளின் திருவாக்கில் தாய், தந்தை உறவினைக் காணலாம். திருமங்கையாழ்வார் திருவாக்கில் தாய் மகன் உறவு தெளிவாகக் காணப் பெறுகின்றது.

தாய்நினைந்த கன்றே ஒக்க என்னையும்,
தன்னையே நினைக்கச் செய்து தான்
எனக்கு
ஆய்நினைந்து அருள்செய்யும் - அப்பனை

— பெரிதிரு-7.3:2

என்ற பாசுரப் பகுதியில் தாய்-கன்று உறவினை உவமையாகக் காட்டித் தந்தை மகன் உறவினைக் காட்டினாலும் 'அப்பன்' என்ற சொற்றொடர் தாயையே நினைக்கச் செய்கின்றது. கம்பநாடனும் கோசலையைக் குறிப்பிடுங் கால்,

கன்று பிரி காராவின்
துயருடைய கொடி
— கம்ப. அயோ. கங்கை-17

என்று கூறுவான். கன்று-காரா உறவு தாய்-மகன் உறவினை நினைவுகூரச் செய்கின்றதன்றோ? கவிஞர் கண்ணனைத் தாயாகக் கருதிப் பாடும்போது பராசக்தியே அவருடைய தாயாகி விடுகின்றாள்.

எனையாளும் மாதேவி வீரர்தேவி
இமையவரும் தொழுந்தேவி எல்லைத் தேவி
மனைவாழ்வு பொருளெல்லாம் வகுக்குந் தேவி
மலரடியே துணையென்று வாழ்த்தாய் நெஞ்சே[3]

என்று கூறும் கவிஞர்தான் கண்ணனைத் தாயாகப் பாவித்து வழிபடுகின்றார்.

முதலில் உடலுக்கு உரம் ஊட்டுவதைப் பற்றிப் பேசுகின்றார் கவிஞர்.

உண்ண உண்ணத் தெவிட்டாதே - அம்மை
உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்

3. வேதாந். நெஞ்சொடு-2

வண்ணமுற வைத்தெனக்கே - என்றன்
வாயினிற்கொண் டூட்டுவோர் வண்மை
யுடையாள்

என்ற பகுதியில் அன்னை பாலூட்டிச் சீராட்டுவதைக் காட்டுகின்றார். மணிவாசகப் பெருமானும் "பால் நினைந்தூட்டும் தாய்"[4] என்று அன்னையின் பெருமையை-அருமையை-எடுத்துக் காட்டுவர். தாய்ப் பால் உண்ண உண்ணத் தெவிட்டாதது; இந்தப் பால் உயிரெனும் முலையில் உணர்வாக ஊறுவது. குழந்தை பிறந்தவுடன் அதற்கு வேண்டும் பால் எங்கிருந்து கிடைக்கும் என்பதை அது அறியாது. தாய்தான் தன் முலைக்காம்பை அதன் வாயில் வைத்து ஊட்டுகின்றாள். சக்திதேவிதான் கண்ணம்மா வடிவில் தனக்கு இவ்வாறு ஊட்டுவதாகக் கருதுகின்றார் கவிஞர்.

அடுத்து, கண்ணம்மா தனக்குக் கதைகள் கூறுவதைக் காட்டுகின்றார். இங்கு அன்னையைக் கவிஞர் அகில உருவமாகக் (Cosmic form) காண்கின்றார். வானமே இவளது கைகள்; பூமியே இவளது மடி. கவிஞரைக் கைகளால் அணைத்துத் தன் மடியில் கிடத்திக்கொண்டு கதைகள் சொல்லுகின்றாள். கவிஞர் இந்த நிலையை,

கண்ணனெனும் பெயருடையாள், -என்னைக்
காட்டி நிறை வான்எனுந்தன் கையில
ணைத்து
மண்ணெனுந்தன் மடியில் வைத்தே - பல
மாயமுறுங் கதைசொல்லி மனங்களிப்
பாள்

4. திருவா. பிடித்த பத்து-9

என்று காட்டுவார், கதைகள் குழந்தைகட்கு இன்பந்தரக் கூடியவை; வளர்ந்தவர்களும் முதியோர்களும்கூட கதைகளில் மனத்தைப் பறிகொடுப்பர். பண்டிருந்தே கதைகள் மானிட வாழ்க்கையில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. நமது நாட்டில் கதை சொல்லுவது ஒரு கலையாகவே மதிக்கப் பெற்று வந்துள்ளது. சிறு குழந்தையாக இருந்த பொழுது சிவாஜி அன்னையின் மடியிலிருந்து கொண்டே பல கதைகளைக் கேட்டதாக வரலாற்று மூலம் அறிகின்றோம். திருவிழாக் காலங்களிலும், பிற சமயங்களிலும். திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் புராணச் சொற்பொழிவுகள் செய்யப்பெற்று வருவதை இன்றும் காணலாம். 'கதாகாலட்சேபங்கள்' செய்வது இன்றும் ஒரு சிறந்த கலையாகப் போற்றப் பெறுகின்றது. பாமர மக்களுக்கு உயர்ந்த சமய உண்மைகளையும் வாழ்க்கைத் தத்துவங்களையும் கற்பிப்பதற்கு இக்கதைகள் பெரிதும் உதவுகின்றன. எத்தனையோ பேர் இக் கதைகளைக் கேட்டு உள்ளத் தெளிவு அடைந்துள்ளனர். அடைந்தும் வருகின்றனர். இங்ஙனம் கவிஞர் கண்ணம்மாவின் மடியிலிருந்து கொண்டே கதைகளைக் கேட்கின்றார்.

கண்ணம்மா உளவியல் நுட்பங்களை நன்கு அறிந்தவள். வயதிற்கேற்ற குழந்தைகளின் மனப் பான்மையும் உளப்போக்கும் விடுப்பார்வமும் மாறிக்கொண்டு வரும் என்பதை நன்கு அறிந்தவள். ஆகவே, ஒரு குழந்தைக் கல்வி நிபுணர்போல் குழந்தைகளின் வயதிற்கேற்றவாறு கதைகள் கூறுவாள்.

இன்பமெனச் சிலகதைகள் - எனக்
 கேற்றமென்றும் வெற்றியென்றும் சில
 கதைகள்
துன்பமெனச் சிலகதைகள் - கெட்ட
 தோல்வியென்றும் வீழ்ச்சியென்றும் சில
 கதைகள்

என்பருவம் என்றன்விருப்பம் - எனும்
இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன்பொடவள் சொல்லி வருவாள் - அதில்
அற்புதமுண் டாய்ப்பர வசமடைவேன்

என்ற பகுதியில் கண்ணம்மாவின் கதை சொல்லும் போக்கைக் காணலாம்.

கண்ணம்மா கவிஞருக்கு இந்த அகிலத்தின் தோற்றத் தினையே அழகாக எடுத்துக்காட்டிப் படைப்பின் விந்தையில் பாலனின் மனத்தைப் பறிகொடுக்கச் செய்துவிடுகின்றாள். கதைப் போக்கிலேயே வான இயலையும் புவியியலையும் பிற இயல்களையும் அற்புதமாகத் தெரிவிக்கின்றாள். அண்டகோள் இயல் அற்புதமாக விரித்துரைக்கப் பெறுகின்றது. விண்வெளியிலுள்ள பொருள்களை-காட்சிகளை-ஒவ்வொன்றாகக் காட்டுகின்றார்.

சந்திரன் என்றொரு பொம்மை - அதில்
தண்ணமுதம் போலஒளி பரந்தொழுகும்
மந்தை மந்தையாக மேகம் - பல
வண்ணமுறும் பொம்மையது மழை
பொழியும்

முந்தஒரு சூரிய னுண்டு - அதன்
முகத்தொளி கூறுதற்கோர் மொழி
யிலையே

அம்புலி, முகில், பகலவன் இவற்றைக் காட்டிய கவிஞர் இந்தக் கோள்கட்கு மிகத் தொலைவிலுள்ள விண்மீன்களையும் காட்டுகின்றார்.

வானத்து மீன்க ளுண்டு - சிறு
மணிகளைப் போல்மின்னி நிறைந்
திருக்கும்
நானத்தைக் கணக்கிடவே - மனம்
நாடிமிக முயல்கினும் கூடுவதில்லை
(நான்+அத்தை - நானத்தை : நான் அதை
இது பிராமணர் வழக்கு)

வானத்தில் கணக்கிலடங்கா உடுக்களைக் காட்டிய கவிஞர் பூமிக்கு வருகின்றார். முதலில் மலைகளைக் காட்டுகின்றார். நாடு முழுவதும் 'விளையாடி' வரும் நதிகளைக் காட்டுகின்றார். அங்ஙனம் வரும் நதிகள் இறுதியில் 'விரிகடல் பொம்மையதில்' போய் விழுகின்றன என்கின்றார். 'அந்தக்' கடல்நுரை கக்கிப் பாட்டிசைக்கும் என்றும், அந்தப் பாட்டினில் 'ஓம்' என்ற பெயர் ஒலித்திடும் என்றும் கூறுவது அற்புதம், அற்புதம்!

அடுத்து, கண்ணம்மா என்ற தாய் பின்னர்த் தமக்குக் கொடுத்தவற்றையெல்லாம் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். சோலைகளையும் காவினங்களையும் நல்கி அவற்றின் மூலமும் பல நிற மணி மலர்களையும், தருக்களில் தூங்கிடும் கனிகளையும், ஞால முழுதும் நிறைந்திருக்குமாறு நயத்தகும் பொம்மைகளாகக் குவித்து வைத்திருப்பதாகக் கூறுகின்றார். இவற்றின் கோலமும் சுவையும் சொல்லுந்தரமன்று.

இன்னும் கண்ணம்மா தனக்கு என்னென்ன தந்துள்ளாள்? தின்பதற்குப் பண்டங்கள், செவி தெவிட்டா நற்பாட்டுகள், நன்றாகப் பழகுவதற்கு மெய்த்தோழர்கள் இவற்றையெல்லாம் தந்துள்ளாள். மேலும்,

கொன்றிடும் என இனிதாம் - இன்பக்
கொடுநெருப் பாய்அனல் சுவையமுதாய்
நன்றியல் காத லுக்கே - இந்த
நாரியர் தமைஎனைச் சூழவைத்தாள்.

என்று காமச்சூட்டை எழுப்பும் நங்கையரைத் தந்ததையும் காட்டுகின்றார். அங்காடித் தெருவில் குழந்தைகட்குப் பல்வேறு அழகுடை பொம்மைகள் அடுக்கி வைத்திருப்பதைக் காண்கின்றோம். அங்ஙனமே, கண்ணம்மாவாகிய தாய் தனக்கு விளையாடுவதற்கு வைத்திருக்கும் விலங்குக் காட்சிச் சாலைகளையும், பொருட்காட்சிச் சாலைகளையும் காட்டுவார்.

இறகுடைப் பறவைகளும் - நிலந்
திரிந்திடும் விலங்குகள் ஊர்வனகள்
அறைகடல் நிறைந்திட வே - எண்ணில்
அமைந்திடற் கரியபல் வகைப்படவே
கறவுகள் மீன்வகைகள் - எனத்
தோழர்கள் பலருமிங் கெனக்களித்
தாள்;
நிறைவுற இன்பம்வைத் தாள்; - அதை
நினைக்கவும் முழுதிலும் கூடுவதில்லை.

கவிஞரும் குழந்தை நிலையிலிருந்து கொண்டு அனைத்தையும் கண்டுகளிக்கின்றார்.

சற்றுப் பக்குவம் அடைந்த குழந்தைகளுக்குத் தருவது போல் பாடத்திட்டத்தை மாற்றி அமைக்கின்றாள் கண்ணம்மா. சரியான குழந்தைகள் பள்ளியின் 'ஆசிரியை'யாகத் திகழ்கின்றாள். அவள் தரும் பாடத்திட்டம் இது.

சாத்திரம் கோடி வைத்தாள்: - அவை
தம்மினும் உயர்ந்தோர் ஞானம் வைத்
தாள்
மீத்திடும் போதினிலே - நான்
வேடிக்கை யுறக்கண்டு நகைப்பதற்கே
கோத்தபொய் வேதங்களும் - மதக்
கொலைகளும் அரசர்தங் கூத்துகளும்
மூத்தவர் பொய்நடையும் - இள
மூடர்தம் கவலையும் அவள் புனைந்
தாள்

வகுப்பில் சில சமயம் வேடிக்கை காட்டுவது போல் பொய் வேதங்கள், மதக் கொலைகள் (எ-டு. சமணர்களைக் கழுவேற்றல், சிலுவைப் போர்கள் போன்றவை), அரசர் தம் கூத்துகள் (எ-டு. துரியோதனன் செயல்கள், இராவணன் தீங்குகள், இரணியனின் அடாத செயல்கள் போன்றவை), மூத்தவர்களின் நெறி தவறிய நடக்கை, நெஞ்சிற் கவலை பயிராக்கும் மூடத்தனம் இவையும் குழந்தையின் பாடத் திட்டமாகின்றன. ஆசிரியர் வகுப்பில் பாடம் நடத்தும் போது ஒரே 'அறுவையையும்' சோர்வடையச் செய்யும் முறையையும் தவிர்க்க வேண்டுமல்லவா?

இப் பாடல் பூமிதேவியைப் போற்றும் ஒரு பாடலாகக் கருதலாம். இந்தப் பூவுலகம் முழுவதும் ஒரு திருவிழாக் கோலத்துடன் காட்சியளிக்கும் என்று எமர்சன் என்ற அமெரிக்கக் கவிஞர் கூறுவதை நாம் கேட்டதுண்டு. இதனையொட்டி பாரதியார் இந்த அகிலத்தையே (Universe) ஒரு 'விசுவரூப தரிசனமாக' (Cosmic vision) காட்டுகின்றார். இயற்கை அன்னையின்மீது பாரதியார் கொண்ட பேரவாவைப் பாடல் காட்டுகின்றது. இம்முறையில் இவர் ஆங்கிலக்

கவிஞராகிய வொர்ட்ஸ் வொத்திற்கு ஒப்பாகின்றார் இங்ஙனம் இயற்கை அன்னையை இயலும் போதெல்லாம் பாராட்டுவது—போற்றுவது — இவர் நம் அழுத்தமான சக்தி வழிபாட்டுக் கொள்கையைச் சார்ந்ததாகும் என்று கருதுவது மிகவும் பொருத்தமாகும். மேலும், தத்துவ ஞானக் கவிஞர் தாயுமான அடிகள்,

பாராதி விண் அனைத்தும் நீயாச், சிந்தை
பரியமட லாளழுதிப் பார்த்துப் பார்த்து[5]

என்று அகில முழுவதையும் 'விசுவரூப தரிசனமாகக்' கண்டு களிப்பதைப்போலவே, பாரதியாரும் பிரகிருதி மண்டலத்தையே தம் காட்சிக்குள் அடக்கி மகிழ்கின்றார் என்று கொள்வதிலும் தவறில்லை.

**கண்ணன் என் தந்தை:**

சமயச் சான்றோர்கள் எம்பெருமானைத் தந்தை நிலையில் வைத்தெண்ணக் கூடிய இடங்கள் எண்ணற்றவை. எடுத்துக்காட்டாக நம்மாழ்வார் திரு. வேங்கடமுடையானை,

...... திருவேங் கடத்து
என் ஆனை என் அப்பன்.[6]

என்றும், திருக்குறுங்குடி எம்பெருமானை,

குறுங்குடி மெய்ம்மையே
உளனாய எந்தையை[7]

5. ஆகாரபுவனம் - 24
6. திருவாய் 3, 9; 1
7. ஷை. 3. 9; 2

என்றும் குறிப்பிடுவதைக் காணலாம். இந்த ஆழ்வாரே திருவிண்ணகர் சேர்ந்த பிரானை,

என்சரண் என்கண்ணன் என்னை
ஆளுடை என்அப்பனே[8]

என்றும்,

என்அப்பன் எனக்காய் இகுளாய்
என்னைப் பெற்றவளாய்
பொன்அப்பன் மணியப்பன் முத்தப்பன்
என்னப் பனுமான
..............................
தன்னொப்பார் இல் அப்பன்[9]

என்று கூறுவதைக் காணலாம்.

இதிகாசக் கண்ணன் அச்சில்தான் பாரதியாரின் கண்ணனும் வார்க்கப் பெறுகின்றான். இயற்கைக் கோள்களை நோக்கிச் செயற்கைக் கோள்கள் ஏவப்பெற்று அண்டகோள ஆராய்ச்சி நடை பெறுவது இக் காலம். அண்மையில் (இருபதாண்டுகளுக்கு முன்) ஆளுள்ள அமெரிக்க விண்கலங்கள் ஏவப் பெற்று ஆய்வுகள் நடைபெற்றன. செவ்வாய், வியாழன், வெள்ளிக் கோள்களின் ஆய்வுகள் நடைபெறுகின்றன. இத்தகைய ஆய்வுகள் எல்லாம் பிற்காலத்தில் நடை பெறலாம் என்ற சாத்தியக் கூறுகளையெல்லாம் பாரதியார் கனவு கண்டார் என்று நினைக்கத் தோன்று கின்றது.

8. ஷெ. 6, 3; 8
9. ஷெ. 6, 3; 9

பூமிக் கெனைய னுப்பினான் - அந்தப்
புதமண்ட லத்திலென் தம்பிக ளுண்டு;
நேமித்த நெறிப்படியே - இந்த
நெடுவெளி யெங்கணும் நித்தம்
உருண்டே
போமித் தரைகளி லெல்லாம் - மனம்
போலவிருந் தாளுபவர் எங்க ளினத்
தார்
சாமி இவற்றினுக் கெல்லாம் - எங்கள்
தந்தையவன் சரிதங்கள் சிறிது ரைப்
பேன்

இந்த விண்வெளியில் நேமித்த நெறிப்படியே பல்லாயிரக் கணக்கான அண்டங்கள் நாடோறும் உருண்டோடு கின்றன. இத்தரைகளிலெல்லாம் உயிரினங்கள் வாழ் கின்றன என்பது கவிஞரின் கணிப்பு. இவற்றையெல்லாம் ஆளுவது மனித இனம்—"எங்கள் இனத்தார்." ஆதலால் தான் புதன் மண்டலத்திலும் தம் தம்பியர் இருப்பதாகச் செய்யுகின்றார் கவிஞர். இந்த மனித இனத்தின் தந்தை தான் கண்ணன். இவன் வரலாறுதான் இங்குக் கூறப் பெறுகின்றது. முதலில் திருநாமத்தைப் பற்றிக் கூறு கின்றார்.

நாவு துணிகுவ தில்லை - உண்மை
நாமத்தை வெளிப்பட உரைப்பதற்கே;
யாவரும் தெரிந்திடவே - எங்கள்
ஈசனென்றும் கண்ணனென்றும்
சொல்வதுண்டு;

மூவகைப் பெயர்புனைந் தே - அவன்
முகமறி யாதவர்கள் சண்டைகள் செய்
வார்;
தேவர்கு லத்தவன்என் றே - அவன்
செய்திதெரி யாதவர் சிலருரைப் பார்

பின்னர் கண்ணன் பிறப்பைப் பற்றிக் கூறுபவர்,

பிறந்தது மறக்குலத் தில்; - அவன்
பேதமற வளர்ந்ததும் இடைக்கு லத்தில்;
சிறந்தது பார்ப்பன ருள்ளே; —சில
செட்டிமக்க ளோடுமிகப் பழக்க முண்டு

என்கின்றார். பிறப்பால் க்ஷத்திரியன்; வளர்ப்பினால் யாதவகுலத் திலகன். ஆயினும், அவனை அந்தணர்கள் தாம் அதிகமாகப் போற்றுகின்றனர். அவன் அருளிய பகவத் கீதை பார்ப்பனர்களிடத்தில்தான் அதிகச் செல்வாக்கு பெற்றுள்ளது. அதிகம் பேர் அதைப் படிக்காவிடினும் அதைப் பற்றிப் பேசுவதில் குறைவில்லை! சாதாரணப் பேச்சில் கூட அதனைச் சிதறவிடுவர்.

செல்வ நிலைக்குக் குறைவில்லை; சேமித்து வைத்த பொன்னுக்கும் அளவில்லை. கல்வியில் சிறந்தவன். அன்னமாகி அவனிக்குத் திருமறைகளை அருளிய அப்பன். சாந்தீபினி முனிவரிடம் கல்வி பயின்றான் என்பது உலகோர் நடையையொட்டிதான். இவன் அருளிய கீதையின் இனிமையும் சொல்லி முடியா. எல்லாம் வல்ல இக்கண்ணனிடம் கொஞ்சம் பைத்தியமும் தோன்றுவதுண்டு. என்ன பைத்தியம்?

நல்வழி செல்லு பவரை - மனம்
நையும்வரை சோதனைசெய் நடத்தை
யுண்டு

என்பதுவே அது. துரியோதனாதியரிடம் அக்கிரமங்கள் தலையெடுக்கச் செய்ததும், பாண்டவர்களைப் பல்வேறு வகையில் துன்பங்களால் வாடச் செய்ததும் இவன் புரிந்த லீலா விநோதங்கள்! இன்றும் நல்லவர் வாடுவதும் அல்லவர் அவனியில் மேலோங்குவதும் இவன்

திருவிளையாடல்கள்தான். படிப்பவர்கட்கு இனிமையாக இருக்கவும், துன்புறுவோர் அமைதி பெறவும் 'தத்துவமும்' படைத்துள்ளான்! தத்துவத்தைப் பேசச் செய்கின்றவனும் இவன்தானே!

அடுத்து, கண்ணனின் பண்பு நலன்கள் பேசப் பெறுகின்றன.

நிறந்தனிற் கருமை கொண்டான்; - அவன்
நேயமுறக் களிப்பது பொன்னிறப்
பெண்கள்:
துறந்த நடைக ளுடையான்; - உங்கள்
சூனியப்பொய்ச் சாத்திரங்கள் கண்டு
நகைப்பான்.

இன்றைய கருமைநிறக் காளையர் பொன்னிறமேனி மங்கையரை விரும்புவதுபோல், கண்ணனும் அத்தகைய மனப்பான்மையைக் கொண்டிருந்தான் போலும்! இக் காலத்தில் 'உண்மையான' பகுத்தறிவு வாதிகள் பொய்யும் புனைசுருட்டும் மிக்க போலிச் சாத்திரங்களைக் கண்டிப்பதுபோல் கண்ணனும் அத்தகைய சாத்திரங்களை எள்ளி நகைத்துத் தள்ளினான் போலும்!

பாரதியின் கண்ணன் வேதங்கள் மக்கள் ஒழுகு முறையைக் கூறுவன என்ற கொள்கையுடையவன். ஆனால்,

வேதங்கள் கோத்து வைத்தான் - அந்த
வேதங்கள் மனிதர் மொழியி லில்லை
வேதங்கள் என்று புவியோர் - சொல்லும்
வெறுங்கதைத் திரளில்அவ் வேத
மில்லை;

*வேதங்கள் என்றவற் றுள்ளே - அவன்*
*வேதத்திற் சிலசில கலந்த துண்டு;*
*வேதங்க ளன்றி யொன்றில்லை - இந்த*
*மேதினி மாந்தர்சொலும் வார்த்தைக ளெல்லாம்*

என்று உண்மை நிலைமையை ஒளிக்காமல் எடுத்துரைப் பவன். உலக நன்மைக்காக 'வருணாசிரம தருமம்' ஏற்படுத் தினர் பண்டையோர். அதன் உண்மைப் பொருளை உண ராமல் பின் வந்தோர் அதனைக் கெடுத்துக் 'குட்டிச் சுவராக்கினர்'. இன்று 'உண்மை வேதம்' இன்னதென் பதை உணராதவர்கள் 'வேதம், வேதம்' என்று தவளை கள்போல் பொருளற்ற கூச்சல்களை எழுப்புகின்றனர். வருணாசிரம தர்மத்தைப் பற்றிப் பாரதியின் கண்ணன் கூறுவது:

*நாலு குலங்கள் அமைத்தான்; - அதை*
*நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்*
*சீலம் அறிவு கருமம் - இவை*
*சிறந்தவர் குலத்தினில் சிறந்த வராம்*
*மேலவர் கீழவர் என்றே வெறும்*
*வேடத்திற் பிறப்பினில்விதிப்பன வாம்;*
*போலிச் சுவடியை யெல்லாம் - இன்று*
*பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மை யுண் டென்பான்*

இப்பகுதியைப் படிக்கும்போது **'தந்தை பெரியாரே'** **கண்ணனாக நின்று பேசுவதுபோல் தோன்றுகின்றது.**

**கண்ணன் என் சேவகன் :**

'மகாபாரதத்தால் தூதுபோனவன் ஏற்றம் சொல்லு கிறது' என்பது ஸ்ரீ வசன பூஷணம். இங்குத் தூதுபோனவன் கண்ணன்; சர்வேசுவரன். பாரதியாரின் இத்தலைப்புள்ள பாடல் கண்ணனின் இந்த எளிமைக் குணத்தைக் காட்டு வதாக அமைந்துள்ளது. என்று கருதலாம். அன்றியும், இப்பாடலில் சேவகர்களின் சேவையையும் எள்ளி நகை யாடுகின்றார். பொதுவாகச் சேவகர்கள்—பணியாளர் கள்—பற்றிப் பாரதி கூறுவது:

*கூலிமிகக் கேட்பார்*
*கொடுத்ததெல்லாம் தாம்மறப்பார்;*
*வேலைமிக வைத்திருந்தால்*
*வீட்டிலே தங்கிடுவார்.*

இது பொதுவாக அரசு ஊழியர்கள் உட்பட வேலையாட் களின் பண்பு என்பதை எல்லோரும் அறிவர். ஊதியம் பெறும் அனைவருமே மனோதத்துவப் போக்கில் ஒரே வகையில் அடங்குவர். கற்றோர்கள் கூட இதற்கு விதி விலக்கு அல்லர். இவர்கள் கூட சங்கம் அமைத்துக் கொண்டு 'கலாட்டா' செய்யவில்லையா? கல்லாத பணி யாளரைப் பற்றி பாரதியார் கூறுவது:

*'ஏனடா, நீநேற்றைக்(கு)*
*இங்குவரவில்லை' என்றால்*
*பானையிலே தேளிருந்து*
*பல்லால் கடித்ததென்பார்;*
*வீட்டிலே பெண்டாட்டி*
*மேற்பூதம் வந்ததென்பார்:*
*பாட்டியார் செத்துவிட்ட*
*பன்னிரண்டாம் நாள்என்பார்;*

ஈண்டு வராமைக்கு மூன்று 'சாக்கு' போக்குகள் கூறப் பெறுகின்றன.

சில பணியாளர்கள் பொய்யே அவதாரம் எடுத்தது போல் காணப் பெறுவர். சிலர் சொல்வேறு செயல்வேறு என்றிருப்பர். சிலர் **'புரணி'** பேசுவதையும் உள்வீட்டுச் செய்திகளை ஊரம்பலப்படுத்துவதையும் வழக்கமாகக் கொண்டிருப்பர்.

*ஓயாமல் பொய்யுரைப்பர்;*
*ஒன்றுரைக்க வேறுசெய்வார்;*
*தாயாதி யோடு*
*தனியிடத்தே பேசிடுவார்;*
*உள்வீட்டு செய்தியெல்லாம்*
*ஊரம்பலத் துரைப்பார்;*
*எள்வீட்டில் இல்லை யென்றால்*
*எங்கும் முரசறைவார்;*
*சேவகரால் பட்ட*
*சிரமம் மிக உண்டுகண்டீர்*

இவையெல்லாம் வீட்டுச் சிறு சேவகர்கள், வேலைக் காரிகள் இவர்களிடத்தில் இன்றும் காணலாம். அரசு ஊழியர்கள் இதற்கு விதிவிலக்கு அல்லர். மனித இயல்பு எப்பொழுதும் ஒன்றுதானே.

நல்ல சேவகர்களும் இல்லாமல் இல்லை. சரியான கையாட்களாகச் சிலர் செயற்படுவதையும் காணத்தான் செய்கின்றோம். இப்படி ஆள் அமைவது, 'பெண்டாட்டி அமைவது போல் பூர்வ புண்ணியம்' என்றுதான் சொல்ல வேண்டும். பாரதியார் காட்டும் 'கண்ணன் என்ற சேவகன்' நல்ல உடல் கட்டுள்ளவன். கண்ணிலே களங்க மற்ற பார்வை; வாயில் இனிமையான பேச்சு; யார்

கண்டாலும் 'நல்ல வேலைக்காரன்' என்ற கருத்து ஏற்பட்டுவிடும். இந்தக் கண்ணன் தனக்கு வேண்டிய 'கூலி' பற்றிப் பேசுகின்றான்.

*தாலிகட்டும் பெண்டாட்டி*
*சந்ததிகள் ஏதுமில்லை;*
*நானோர் தனியாள்;*
*நரைதிரைதோன் றாவிடினும்*
*ஆன வயதிற்கு*
*அளவில்லை; தேவரீர்*
*ஆதரித்தால் போதும்*
*அடியேனை நெஞ்சிலுள்ள*
*காதல் பெரிதெனக்குக்*
*காசுபெரி தில்லை.*

கண்ணன் பேச்சினைப் பார்த்தால் இவன் பண்டைக் காலத்துப் பைத்தியத்தில் ஒன்றாகக் காணப்படுகின்றான். வாஷிங்டன் இர்வின் படைத்த 'ரிப்வான் விங்கிள்' என்ற கதை மாந்தனை ஒத்தவனாகத் தெரிகின்றான். சௌலப்பிய, சௌசீலய குணங்கட்கு பெயர்போன இதிகாசக் கண்ணனையும் நினைவுபடுத்துகின்றான். இந்தக் கண்ணனைப் பாரதியார் வேலையாளாக அமர்த்திக் கொள்ளுகின்றார். அவன் கவிஞருக்குச் செய்த தொண்டுகளைப் பற்றி அவர் கூறுவதைக் காண்போம்.

*கண்ணை இமையிரண்டும்*
*காப்பதுபோல், என்குடும்பம்*
*வண்ணமுறக் காக்கின்றான்*
*வாய்முணுத்தல் கண்டறியேன்;*
*வீதி பெருக்குகின்றான்,*

வீடுசுத்த மாக்குகின்றான்;
தாதியர்செய் குற்றமெல்லாம்
தட்டி யடக்குகின்றான்;
மக்களுக்கு வாத்தி,
வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்கநயம் காட்டுகின்றான்;
ஒன்றும் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்துவைத்துப்
பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போல
பிரியமுற ஆதரித்து
நண்பனாய் மந்திரியாய்
நல்லா சிரியனுமாய்,
பண்பிலே தெய்வமாய்ப்
பார்வையிலே சேவகனாய்
எங்கிருந்தோ வந்தான்
இடைச்சாதி என்று சொன்னான்

இந்தக் கூறுகளில் சிலவற்றை சில குடும்பங்களில் வீட்டு வேலைக்காக அமர்த்தப் பெறும் சில பணியாட்களிடம் காண முடிகின்றது. நாட்டுப் புறங்களிலிருந்து வரும் பணியாட்கள் சில ஆண்டுகள் இங்ஙனம் நல்ல முறையில் பணியாற்றுகின்றனர். நாளாக நாளாக '**நகரச் சாயம்**' இவர்கள் மீது படியப் படியவே, பண்புகள் மாறுகின்றன. நகர கவர்ச்சிகள் இவர்களை ஆட்கொள்ளுகின்றன.

எம்பெருமான் அடியார்க்கு எளியவனாக— ஏன், அடியவனாக— அமைகின்றான். இதனைக் கவிஞர் நன்கு உணர்கின்றார். அதனால்,

இங்கிவனை யான்பெறவே
என்னதவம் செய்துவிட்டேன்!
கண்ணன் எனதகத்தே
கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம்
எதுவும் அவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு,
சீர், சிறப்பு, நற்கீர்த்தீ
கல்வி, அறிவு
கவிதை சிவயோகம்
தெளிவே வடிவாம்
சிவஞானம் என்றும்
ஒளிசேர் நலமனைத்தும்
ஓங்கிவரு கின்றனகாண்!
கண்ணனைநான் ஆட்சிகொண்டேன்!
கண்கொண்டேன் கண்கொண்டேன்
கண்ணனை யாட்கொள்ளக்
காரணமும் உள்ளனவே!

என்று முழு மனத்துடன்— முழு மன நிறைவுடன்— எக்களிப்புடன் — பேசுகின்றார் கவிஞர். இவ்விடத்தில்,

கண்ணனை நான் ஆட்சிகொண்டேன்
.........................
கண்ணனை யாட்கொள்ளக்
காரணமும் உள்ளனவே

என்ற அடிகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. முழுட்சுப் படியிலுள்ள,

போகதசையில் ஈசுவரன் அழிக்
கும்போது நோக்கவேணும்
என்று அழியாதொழிகை,[10]

என்ற வாக்கியத்தை நினைவுகூர்கின்றோம். ஈசுவரன் சீவனாகிய தன்னொடு கலந்து பரிமாறும்போது, அவன், தன் மாட்டுக் கொண்டுள்ள பிரேமப்பித்தினால் தாழ நின்று பரிமாறி, தன்னுடைய சேஷத்துவத்தை (அடிமைத் தன்மையை) அழிக்குங்கால், 'நம் சேஷத்துவத்தை நாம் நோக்கிக் கொள்ள வேண்டும்' என நினைத்து சீவனாகிய தான் பின் வாங்கி, அவன் போகத்தைக் கொடுக்காம லிருக்க வேண்டும் என்பது இவ் வாக்கியத்தின் பொருள்.

ஈசுவரன் சேதனனை விநியோகம் கொள்ளல் இரண்டு வகைப்படும். இவற்றுள் அவன் தலைவனாகவே இருந்து இவனை அடிமையாக வைத்துப் பரிமாறுதல் ஒரு வகை. சில சமயம் அவன் இவனோடு கலந்து போகந் துய்க்கக் கருதுவான். அவ்வமயம் ஈசுவரன் சேதநனை அடிமை கொள்பவன் போன்று, இவனிடம் நெருங்கி, இவன் மாட்டுத் தனக்குள்ள வேட்கை மிகுதியால் இந்த சீவான்மாவைத் தலைவனாக வைத்துத் தான் அடிமை யாக இருந்து, இழிதொழில் செய்து அவ்விதத்தில் சேதநனை விநியோகம் கொள்ளுதல் மற்றொரு வகை. இதற்குக் குசேலர் வரலாற்றைச் சான்றாகக் கொள்ள லாம்.

இங்ஙனம் கண்ணன் தன்னிடம் சேவகனாக வந்துள்ளதைக் கற்பனையில் நினைந்து அவன் கைங்கரி யத்தை ஏற்றுக் கொள்ளுகின்றார் கவிஞர்; 'கண்ணனை நான் ஆட்சி கொண்டேன்' என்கின்றார். 'கண்ணனை

10. முமுட்சு - 92

ஆட்சி கொள்ளக் காரணமும் உள்ளனவே' என்றதனால் கண்ணன் புரியும் சேவகங்களுக்கு' இசைந்து கொடுக்கின்றார் என்று கொள்ளல் வேண்டும். பாரதியாரும் மானச நிலையில் குசேலரை ஒக்கின்றார். 'கண்ணன்—என் சேவகன்' என்ற பாடல் இப்படியெல்லாம் நாம் சிந்திக்க இடந்தருகின்றது.

பரிபாடலில் திருமாலைப் பற்றி வரும் பாடலொன்றில்,

அவரவர் ஏவ லாளனும் நீயே
அவரவர் செய்பொருட்கு அரணமும் நீயே.[11]

என்று வருதலையும் சிந்திக்கலாம். அவரவர் நினைத்தவற்றை முடித்துத் தருதலால், இறைவன் அவரவர்கட்கு ஏவலாளன் ஆகின்றான். அவரவர் செய்யும் அறம் முதலிய நாற்பொருட்கும் காப்பாகவும் (அரணமாகவும்) அமைகின்றான் என்ற கருத்தும் பாரதியாரின் இப் பாடலின் கருத்தை ஒரு புடை ஒத்துள்ளதைக் கண்டு மகிழலாம்.

கண்ணன்-என் அரசன், குருவும் சீடனும், கண்ணம்மா-என் குழந்தை போன்ற பாடல்களை எடுத்துக்காட்டி விளக்குவதற்கு நேரம் இல்லாமையால் அவை விடப்படுகின்றன. கண்ணன்-என் காதலன் என்ற பாடல்களை (ஐந்து) பரமான்மா சீவான்மா உறவைக் குறிப்பிடுவதாகக் கொண்டு விளக்க முடியும். ஆயினும், கண்ணம்மா-என் காதலி என்ற தலைப்பிலுள்ள **ஆறு** பாடல்களிலும் இந்த உறவு முறையை மாற்றிப் பேசுகின்றார். இக் கவிதைகளில் இறைவன் தலைவியாகவும், தான் (கவிஞர்) காதலனாகவும் பேசப்படுகின்றனர். மரபுக்கு மீறிய இம்

11. பரிபா. 4. அடி (72 - 73)

முறையைப் பாரதியார் எங்கோ தெரிந்திருக்க வேண்டும், இதனைச் சிந்தித்து ஆராயுங்கால் 'திருவாசக வியாக்கியானம்' எழுதிய (1834) **சீகாழித் தாண்டவராயரின் குறிப்பு** தென்படுகின்றது. அக்குறிப்பு : பத்தி முத்திக்கு உவமை பெத்தம்; பேரின்பத்திற்கு உவமை சிற்றின்பம் என வைத்து, உடம்பையுடைய யோகிகள்பால் உற்ற சிற்றின்பம், அடங்கத் தன் பேரின்பமாக, பேரின்பமான பிரம்மக் கிழத்தியோடு ஓரின்பமான அன்பே சிவமாய், அருளே காரணமாக, சுத்தாவத்தையே நிலமாக, **நாயகி பரம் பொருளாக நாயகன் பக்குவான்மாவாக,** தோழி திருவருளாக, தோழன் ஆன்மபோதகமாக, நற்றாய் பரையாக, திரோதாயி செவிலித்தாயாக, மேலும் நாயகி கூற்றெல்லாம் நாயகன் கூற்றாகவும் நிகழ்ந்துவரும். அவை அநுபூதியாற் காண்க.'' என்பது. இந்தக் குறிப்பில் 'நாயகி பரம்பொருளாக, நாயகன் பக்குவான்மாவாக' என்ற பகுதி மட்டிலும் பாரதியாரின் மனத்தைக் கவர்ந்திருத்தல் வேண்டும்; இதனை அடிப்படையாகக் கொண்டே இப்பாடல்களில் சீவான்மா-பரமான்மா உறவு முறையை, தோசையை திருப்பிப் போடுவதுபோல,மாற்றியமைத்துள்ளார் என்று கருதலாம். அல்லது கவிஞர்களுகே உரிய தனி உரிமத்தைக் கொண்டு (Poetical license) இங்ஙனம் அமைத்துக் கொண்டார் என்று கொள்ளினும் இழுக்கில்லை. இந்த அடிப்படையில்தான் இந்த ஆறு பாடல்களையும் ஆராய்தல் வேண்டும்.

**கண்ணன்-என் காந்தன் :**

இந்தப் பாடலும் தனி விளக்கத்திற்கு உரியது. தமிழ் இலக்கியத்தில் சிறந்த பகுதி அகத்துறை இலக்கியம் ஆகும். இது களவு, கற்பு என்று இருவகையாகப் பகுத்துப் பேசப்படும். களவுக் காலத்தில் தலைவனும் தலைவியும் ஒருவர் மேல் மற்றொருவர் கொண்டிருக்கும் அன்பு-ஆராக்

காதல்-இவ்வளவு அவ்வளவு என்று எடுத்துக் கூறல் இயலாது. இக் காலத்தில் தலைவன் 'கையுறை' கொண்டு தலைவியைச் சந்திக்கும் வாய்ப்புகள் உண்டு. பெரும் பாலும் இக்'கையுறை' தழை, மலர், மாலை போன்ற பொருள்களாகவே இருக்கும். 'கையுறை' பற்றிய செய் தியை 'இறையனார் களவியல்' 'திருக்கோவையார்', 'தஞ்சைவாணன் கோவை' போன்ற நூல்களில் காணலாம்.

இங்குக் **'காந்தன்'** என்ற **பெயர் களவுக் காலத்தில்** உள்ள தலைவனுக்குப் பாரதியார் சூட்டிய பெயராகும். இங்ஙனமே இக்கவிஞர் பெருமான் அத்தினபுரத்துப் பெண்களை **'மலர்விழிக் காந்தங்கள்'**[12] என்று காட்டுவ தையும் ஈண்டு நினைவுகூரலாம். களவு வாழ்க்கையில் காதலர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் வாய்ப்புகள் அருகியிருக்கும்போது இருவர் மட்டும் காதல் உணர்ச்சி காந்த சக்திபோல் உறைப்பாக இருக்குமாதலால் ஆண் 'மகனைக் **'காந்தன்'** என்றும், பெண்மகளைக் **'காந்தம்'** என்றும் சுட்டியிருப்பதும் எவ்வளவு பொருத்தமாகத் தோன்றுகின்றது! தவிர, காதலிக்குக் காதலன் 'காந்தன்' —ஈர்ப்பவன், ஈர்க்கப்படுபவன்—என்ற நிலையில் இருப்பான். ஆனால், இங்கு ஈர்ப்பவள் பெண்ணே ஆவள். ஆதலால் அவள் 'காந்தம்' என்றே தானியாகு பெயரால் உருவகமாகக் குறிக்கப் பெற்றிருத்தல் சிந்தித்து மகிழத்தக்கது. ஓர் இலாடகாந்தம். அல்லது கட்டைக் காந்தத்தின் அருகில் ஒரு காந்த ஊசி வைக்கப்பெறுங்கால் அந்தக் காந்த ஊசி சுற்றியலைவதை நினைவுகூரலாம். உலக வாழ்வில் பெரும்பாலும் ஆணே பெண்ணை நாடி அலைகின்றானேயன்றி பெண் ஆணை நாடி அலைவ தில்லை. ஆயின், இராமாயணத்தில் சூர்ப்பணகை (பெண்)

12. பாஞ்சாலி சபதம்-14

இராமனை (ஆண்) நாடி வந்தது ஒரு விதி விலக்கு. இதிகாச உலகில் கோபியர் கண்ணனை நாடி அலைவது சீவான்மாக்கள் பரமான்மாவை நாடி அலைவதற்குக் குறியீடாகும்.

**தனிப் பாடல்கள்:**

கண்ணனைப் பற்றி 'தோத்திரப் பாடல்கள்', 'வேதாந்தப் பாடல்கள்' என்ற பிரிவுகளில் பல்வேறு தலைப்புகளில் **பதினான்கு** பாடல்கள் காணப்படுகின்றன. இவற்றுள் 'இறைவா? இறைவா?'[13] என்ற இசைப் பாடலொன்றே இவர் வைணவதத்துவத்தை நன்கு அறிந்தவர் என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இதனை மட்டிலும் விளக்கி இப் பகுதியைத் தலைக்கட்டுவேன்.

*எத்தனைகோடி இன்பம் வைத்தாய்-எங்கள்*
*இறைவா! இறைவா! இறைவா!*

என்பது இசைப்பாடலின் பல்லவி. இங்குக் கடவுளைப் பொதுவாக 'இறைவா!' என்றுதான் விளிக்கின்றார்-கசேந்திரன் 'ஆதிமூலமே!' என்று பொதுவாய் விளித்தது போல,

*சித்தினை அசித்துடன் இணைத்தாய் - அங்கு*
*சேரும் ஐம்பூதத்து வான்உலகு அமைத்தாய்*
*அத்தனை உலகமும் வண்ணக் களஞ்சியம்*
*ஆகப் பலப்பலநல் அழகுகள் அமைத்தாய்*

---

13. தோ. பா.-36, இறைவனை வேண்டுதல்.

இதில் சித்து, அசித்து, ஈசுவரன் என்ற மூன்று **விசிட்டாத்வைத தத்துவங்கள்** இயைந்து நிற்கும் அதிசயம் நம் கருத்தினைக் கவர்கின்றது. சித்து என்பது அறிவுள்ள ஆன்மா. அசித்து என்பது, உயிரற்ற சடப்பொருள்; உடலும் இதனுடன் சேரும். சித்தாய உயிரை அசித்தாய உடம்புடன் இணையச் செய்து அந்த உயிரை இயக்கும் இறைவனின் செயலையும், அந்த உயிர்கள் அசித்தினைக் கொண்டு கைபுனைந்தியற்றி எத்தனையோ கோலங்கள் புனைந்து தமக்கு வேண்டிய விதவிதமான வசதிகளை யெல்லாம் அமைத்து இந்த உலகினைக் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புலனுக்கும்' ஏற்ற வண்ணக் களஞ்சியமாக ஆக்கிக்கொள்ளும் அற்புதத் திறத்தினையும் வியந்து போற்றுகின்றோம். எம்பெருமான் தலைமைப் பொறியாளராக நின்று எத்தனையோ பொறியாளர்களையும் எண்ணற்ற தொழிலாளர்களையும் கொண்டு எத்தனையே நீர்த்தேக்க அணைகளைக் கட்டி (எடு. மேட்டூர் அணை, கர்நாடகத்தில் கிருஷ்ண ராஜ சாகர் போன்றவை)யுள்ளதையும், அங்ஙனம் சேமித்த நீரைக்கொண்டு பல்லாயிரக் கணக்கான உழவர்களால் பல இலட்சக்கணக்கான ஏக்கர் நிலங்களை வளமாக்கிய செயல்களையும் நாம் எண்ணி எண்ணி இறும்பூதெய்து கின்றோம்.

அடுத்து,

*முத்தியென்று ஒருநிலை சமைத்தாய் - அங்கு*
*முழுதினையும் உணரும் உணர்வு அமைத்தாய்*
*பத்தியென்று ஒருநிலை அமைத்தாய் - எங்கள்*
*பரமா! பரமா! பரமா!*

என்ற சரணத்தில் பரமபத நாதனைக் குறிப்பிடுவதுடன் முத்தி என்ற வீடுபேற்றையும், அதனையடையும் வழி

யாகிய பக்தியையும் குறிப்பிடுகின்றார். எட்டைய புரத்தில் பிறந்து, நெல்லையில் வாழ்ந்த கவிஞர். திருக் குருகூரில் (ஆழ்வார் திருநகரியில்) அவதரித்த நம்மாழ் வாரின் தத்துவத்தில் ஆழங்கால் படுதல் இயல்பே யன்றோ?

**5. சக்தி தாசர்:** வாரணாசி வாழ்வும், கல்கத்தா வாழ்வும் புதுச்சேரியில் வாழ்ந்தபோது கொண்ட அரவிந்தரின் தொடர்பும் கவிஞரைச் சக்தி வழிபாட்டில் ஈடுபடுத்தியனவாகக் கருதலாம். 'சர்வம் விஷ்ணு மகம் ஜகத்' என்ற சமய மரபு ஒன்று உண்டு. பாரதியாருக்குச் 'சர்வம் சக்தி மயம் ஜகத்' என்ற தத்துவம்தான் அவரது மூச்சாக அமைகின்றது. இதுவே பேச்சாகவும் கவிதையில் வழிந்தோடுகின்றது. பாரதியாரைச் 'சக்தி வழிபாட் டாளர் - சக்திதாசர்' என்று சிந்திப்பதற்கு முன்னர் சக்தியைப்பற்றி நமது சமயம்—**சைவ சித்தாந்தம்**—என்ன கூறுகின்றது என்பதை விளக்குதல் மிகவும் பொருத்த மாகும் எனக் கருதுகின்றேன்.

சைவ சித்தாந்தம் முடிந்த முடியாகக் கொள்வது 'பதி' பசு, பாசம்' என்பதாகும். 'இவற்றுள் பதி என்பது' இறைவன்; கடவுள்; 'பரமான்மா' எனபடுவதும் இதுவே யாகும். பசு என்பது, ஆன்மா; உயிர். சீவான்மா' எனப் படுவதும் இதுவேயாகும். பாசம் என்பது, தளை; அஃதாவது உயிரைப் பிணித்துள்ள கட்டு. சைவ சித்தாந்த படி இவை மூன்றும் தனித் தனிப்பொருள்களாகும். இந்த மூன்று பொருள்கட்கும் எந்நாளிலும் தோற்றமும் இல்லை; முடிவும் இல்லை. தோற்றம் முடிவும் அற்றபொருள் 'அநாதியாகும்' அஃதாவது 'ஆதி' இல்லாதது. ஆதி இல்லையாதலின் அந்தமும் இல்லை. இதனைத் திருமூலர்,

பதிபசு பாசம் எனப்பகர் மூன்றின்
பதியினைப் போற்பசு பாசம் அநாதி.[1]

எனத் தெளிவுபடுத்துவர். பாரதியாரின் சக்திகொள்கையை பற்றி விளக்குவதற்கு பதியை மட்டிலும் எடுத்துக் கொள்வது போதுமானது.

ஒரு பொருளுக்குப் 'பொது இயல்பு' என்றும், 'சிறப்பு இயல்பு' என்றும் இரண்டு இயல்புகள் உண்டு என்பதை நாம் அறிதல் வேண்டும். 'இயல்பு' என்றாலும் இலக்கணம் என்றாலும் ஒன்றேயாகும். ஒரு பொருளுக்கு அதன் தன்மையில் இயல்பாக என்றும் உள்ள இயல்பு 'சிறப்பியல்பு' எனப்படும். மற்றொரு பொருளின் சார்பு காரணமாக ஒரு பொருளின்கண் உண்டாகி அச் சார்பு நீங்கியவழி உடன் நீங்கும் இயல்பு 'பொது இயல்பு' எனப்படும். இவ்வாறு சித்தாந்தம் பேசும் சிறப்பியல் பைச் **'சொரூப இலக்கணம்'** என்றும் பொது இயல்பைத் **'தடத்த இலக்கணம்'** என்றும், வழங்குவர் சித்தாந்திகள். சொரூபம் என்பது தன் இயல்பு, தடத்தம் அயலிலுள்ள பொருட்கண் இருப்பது.

பதி ஏனைய இரண்டையும்விடப் பேராற்றல் வாய்ந்தது. சுதந்திரம் உடையது. ஆகவே பிறிதொரு பொருளின் சார்பினால் மாறுபடாத தன்மையுடையது பதி. பிறிதொன்றை நோக்காது தன்னையேதான் நோக்கி நிற்கும் நிலையில் காணப்படும் இயல்புகளே பதியின் சொரூப இலக்கணமாகும். பதி உலகத்தை நோக்கி நிற்கும் நிலையில் காணப்பெறும் இயல்புகள் தடத்த இலக்கணமாகும்.

பதியின் சொரூப இலக்கணத்தை விளக்குவேன். இது குணம் குறிகளைக் கடந்தநிலை. பதி ஒன்றே; அதாவது

1. திருமந்திரம். முதல் தந்திரம் உபதேசம்-3

அது ஏகமாக இருக்கும். எல்லாவற்றிற்கும் மேலானது. அது காணப்படும் உருவ மற்றது; காலம் இடம் இவற்றால் அளவு படுத்தப்பெறாதது. குணங்களும் இல்லை; அடையாளங்களும் இல்லை; மல மற்றது, என்றும் அழியாதிருப்பது; ஆன்மாக்களுக்கு அறிவாய் நிற்பது; சலிப்பற்றது; அளவு படாததால் போக்குவரவாகிய அசைவு இல்லாதது. காட்சிக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்டது. இந்நிலையில் பதி **'பரசிவம்'** என்று வழங்கப்பெறும், தாயுமான அடிகளின் 'பரசிவ வணக்கம்' என்பதிலுள்ள பாடல்களால் இதனைத் தெளியலாம். 'அங்கிங்கெனாதபடி' என்ற முதற்பாடலில் 'சிவத்தின் சொரூப இலக்கணம்' நுவலப் பெற்றிருப்பதைக் கண்டு தெளியலாம்.

அடுத்து பதியின் தடத்த இலக்கணத்தை விளக்குவேன். இது குறிகுணங்களோடு கூடிய நிலை. தன்னையே நோக்கி நிற்கும் 'பரசிவம்' அந்நிலையினின்றும் நீங்கி உலகத்தை நோக்குங்கால் தனது சிறப்பியல்புகளில் ஒன்றாகிய பெருங்கருணை காரணமாக உயிர்களின் பொருட்டுத் தானே தன் விருப்பத்தால் தனது ஆற்றலை (சக்தியை)க் கொண்டு பல்வேறு நிலைகளை உடையதாக இருக்கும். இந்த நிலைகளே பதியின் தடத்த நிலைகளாகும். இவை யாவும் பதியின் அனந்த சக்தியாகிய அளவில்லாத ஆற்றலால் வருவனவாதலின், பதியின் தடத்த நிலைகள் யாவும் அதன் சக்தியினால் ஆவனவாகும் என்பது அறியத்தகும்; இதனால் சொரூப நிலையில் பதி **'சிவம்'** எனப்படும். தடத்த நிலையில் அது **'சக்தி'** என்று பேசப்படும் சொரூப நிலையில் சக்தி செயற்படாது அடங்கியிருத்தலால் பதி 'சிவம்' என ஒன்றேயாக இருக்கும்; சக்தி செயற்படும் தடத்த நிலையில் சிவம் அதனோடு அச் செயலையெல்லாம் உடன் இயைந்து இயற்றி நிற்றலால் 'சிவமும் சக்தியும்' இரண்டாய்-அம்மை அப்பனாய்-மாதொரு பாகனாய்-தையல் பாகனாய்-இரண்டாய்த் தோற்றம் அளிக்கும்.

தடத்த நிலையில் பதி சக்தியினால் பல நிலைகளை யுடையது. இந்த நிலையில்அதற்கு உருவம் உண்டு; தொழில் உண்டு; அவற்றிற்கு ஏற்பப் பல பெயர்களும் உண்டு. ஆயினும் இவையனைத்தும் இறைவனின் அருள் காரணமாக ஏற்பட்டவையேயன்றி வெறும் கற்பனை யல்ல என்பது அறியப்படும். சொரூப இலக்கணம் எப்படி உண்மையோ, அப்படியே தடத்த இலக்கணமும் உண்மையாகும். தடத்த நிலையில் சிலவற்றை ஈண்டு விளக்குதல் பொருத்தமுடையதாகும். சொரூப நிலையில் பதி **'பரசிவம்'** என நிற்குங்கால் அதன் சக்தி **'பராசக்தி'** என வழங்கப் பெறும். அஃது உயிர்களின் அறிவை விளக்கி நிற்கும் அறிவு வடிவமானது. அந்த அறிவே சக்தியின்சொரூபம். பாரதியாரின் சக்தி வழிபாடெல்லாம் இந்தச் சக்தியை நோக்கியே யாகும் என்று கருதலாம்.

**'மூன்று காதல்'**[2] என்ற பாடலில் மூன்றாவதாக அன்னை பராசக்தியின்மீது இவர் காதல் கொண்டதாகக் கூறுவர். இவள் ஒரு நாள் இரவில் கவிஞரிடம் வருகின் றாள். கன்னிவடிவமாக வருகின்றாள். இவளைக் கண்ட களிப்பில்,

> அன்னை வடிவமடா ! - இவள்
> ஆதிபராசக்தி தேவியடா ! -இவள்
> இன்னருள் வேண்டுமடா ! - பின்னர்
> யாவும் உலகில் வசப்பட்டுப் போமடா!

என்று எக்களிப்புடன் தம் மகிழ்ச்சிப் பெருக்கை வெளியிடு கின்றார். வாணி, சீதேவி, பார்வதி-இம் மூன்று தேவி யரும் ஒன்றாக இலங்குபவளே மாதா பராசக்தி என்பது கவிஞரின் அதிராக் கொள்கையாகும். எனவே,

---

2. தோ. பா. 64. மூன்று காதல்-4

மாதா பராசக்தி
வையமெல்லாம் நீநிறைந்தாய்
ஆதாரம் உன்னையல்லால்
ஆரெமக்குப் பாரினிலே.[3]

என்று கூறுவர்.

யாது மாகிநின்றாய் - காளி !
எங்கும் நீநிறைந்தாய் !
தீது நன்மையெல்லாம் - காளி
தெய்வ லீலையன்றோ ?[4]

யாது மாகிநின்றாய் - காளி !
எங்கும் நீநிறைந்தாய்
தீது நன்மையெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி யில்லை.[5]

எண்ணிலாப் பொருளும், எல்லையுலில்
வெளியும்
யாவுமாய் நின்றனை போற்றி.[6]

எண்ணிற் கடங்காமல் எங்கும் பரந்தனவாய்
விண்ணிற் சுடர்கின்ற மீனையெலாம்-
பண்ணியதோர் சக்தி.

3. ஷை. 63 நவராத்திரிப் பாட்டு-1
4. ஷை 30 காளிப் பாட்டு-1
5. ஷை 31 காளிஸ் தோத்திரம்-1
6. ஷை 33 மகாசக்தி பஞ்சகம்-2
7. ஷை 17 மகாசக்தி வெண்பா-4

என்ற பாடற்பகுதிகளில் **'எல்லாம் சக்தி மயம்'** என்ற கருத்து தெளிவாவதைக் காணலாம். மேலும்,

*விண்டு ரைக்க அறிய அரிதாய்*
*விரிந்து வான வெளியென நின்றனை;*
*அண்ட கோடிகள் வானில் அமைத்தனை;*
*அவற்றில் எண்ணற்ற வேகம் சமைத்தனை;*
*மண்ட லத்தை அணுஅணு வாக்கினால்*
*வருவ தெத்தனை அத்தனை யோசனை*
*கொண்ட தூரம் அவற்றிடை வைத்தனை*
*கோலமே! நினைக் காளியென் றேத்து*
*வேன்*[8]

என்று அகிலத்தின் காட்சியைத் தொகுத்துக் காட்டுவர். இந்தக் காட்சி அடுத்து வரும் ஐந்து பாடல்களில் அற்புதமாக வகுத்துக் காட்டப் பெறுகின்றது. இந்த 'வியன் பெருவையத்தின் காட்சி' 'கோமதியின் மகிமை' என்ற பாடலிலும் நன்கு காட்டப் பெறுகின்றது.

'எல்லாம் சக்தி மயம்' என்ற கருத்து வேறொரு கோணத்திலும் காட்டப் பெறுகின்றது.

*துன்ப மிலாத நிலையே சக்தி;*
*தூக்க மிலாக்கண் விழிப்பே சக்தி;*
*அன்பு கனிந்த கனிவே சக்தி;*
*ஆண்மை நிறைந்த நிறைவே சக்தி;*

8. ஷை 34 மகாசக்தி வாழ்த்து-1

இன்ப முதிர்ந்த முதிர்வே சக்தி;
எண்ணத் திருக்கும் எரியே சக்தி;
முன்புநிற் கின்ற தொழிலே சக்தி;
முக்தி நிலையின் முடிவே சக்தி.[9]

இதனைத் தொடர்ந்து வரும் பாடல்களிலும் சக்தியின் பரிணாமம் பல்வேறு விதமாகக் காட்டப் பெறுகின்றது. முத்தாய்ப்பாக,

வீழ்வு தடுக்கும் விறலே சக்தி;
விண்ணை யளக்கும் விரிவே சக்தி;
ஊழ்வினை நீக்கும் உயர்வே சக்தி
உள்ளத் தொளிரும் விளக்கே சக்தி

என்று கூறிக் களிக்கின்றார் கவிஞர். மேலும்,

பூதம் ஐந்தும் ஆனாய் - காளி!
பொறிகள் ஐந்தும் ஆனாய்;
போத மாகி நின்றாய் - காளி !
பொறியை விஞ்சி நின்றாய்[10]

என்று அன்னை இந்திரியங்களாகவும் நிற்கின்றாள், அவற்றைக் கடந்தும் நிற்கின்றாள் என்று காட்டுவர்.

எல்லாத் தொழில்களும் செயல்களும் சக்தி தேவியின் அருளால்தான் நடைபெறுகின்றன என்று நம்புபவர் பாரதியார்.

9. தோ. பா. 21. சக்தி-1
10. ஷை 30. காளிப் பாட்டு-1

செய்யும் கவிதை பராசக்தி,
யாலே செயப்படுங்காண்.[11]

என்று தாம் படைக்கும் கவிதைகளும் அன்னை பராசக்தியின் அருளால்தான் வெளிவருகின்றன என்று கூறுவதைக் காணலாம். பிறிதோரிடத்திலும்,

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும்
பயனன்றி உரைப்பாளோ ?
பாராய் நெஞ்சே ![12]

என்ற இக்கருத்தினையே மீண்டும் உரைத்து வலியுறுத்துவதைக் காணலாம். எனவே, பாடுவதும் அவள் அருளே என்று உணர்ந்த கவிஞர்.

பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித் திடவேணும்.[13]

என்று தம் 'பேராசை'யை வெளியிடுகின்றார். பராசக்தியைத் தமிழ் வாணியாகப் பாவித்து,

வெள்ளை மலர்மிசை வேதக் கருப்பொரு
ளாக விளங்கிடுவாய்
தெள்ளு கலைத்தமிழ் வாணி நினக்கொரு
விண்ணப்பம் செய்திடுவேன்;

11. வி. நா. மா. 26.
12. தோ. பா. 27. மேதை நெஞ்சே-5
13. ஷ 10 காணி நிலம்-3

*எள்ளத் தனைப்பொழு தும்பய னின்றி*
*இராதென்றன் நாவினிலே*
*வெள்ள மெனப்பொழி வாய்சக்தி வேல்சக்தி*
*வேல்,சக்திவேல், சக்திவேல்.*[14]

என்று வேண்டுகின்றார். இன்னும்,

*-சுவை*
*நண்ணும் பாட்டினொடு தாளம்-மிக*
*நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்-பல*
*பண்ணிற் கோடிவகை இன்பம்-நான்*
*பாடத் திறனடைதல் வேண்டும்.*[15]

என்று தான் பாடும் பாடல் செவ்வனே அமைதல் வேண்டும் என்று விழைகின்றார், அப்படி அமைய அன்னையின் அருளை வேண்டி நிற்கின்றார்.

*எந்தநாளும் நின்மேல்-தாயே*
*இசைகள் பாடி வாழ்வேன்.*[16]

என்று தன் விழைவை வெளியிடுகின்றார். இன்னுமோரிடத்தில்,

*நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்*
*நானி லத்தவர் மேனிலை எய்தவும்*
*பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்*
*பண்ணி லேகளி கூட்டவும் வேண்டி,நான்*

14. ஷை ஓம் சக்தி-5
15. ஷை யோகசித்தி-7
16. ஷை 31 காளிஸ்தோத்திரம்-2

முட்டும் அன்புக் கனலொடு வாணியை
முன்னு கின்ற பொழுதி லெலாம்குரல்
காட்டி அன்னை பராசக்தி ஏழையேன்
கவிதை யாவும் தனக்கெனக் கேட்கின்
றாள்.[17]

என்று தம் பாடல்களை யெல்லாம் பராசக்தி கேட்பதாகக் கூறுகின்றார்.

'வைய முழுதும் படைத்தளிக்கின்ற' என்ற தலைப்பி லுள்ள பாடலொன்றில்,

உயிரெனத் தோன்றி
உணர்வுகொண் டேவளர்ந்
தோங்கிடும் சக்தியை
ஓது கின்றோம்
பயிரினைக் காக்கும்
மழையென எங்களைப்
பாலித்து நித்தம்
வளர்க்க வென்றே.[18]

என்று அன்னை பராசக்தியை வாழ்த்துகின்றார் பிறிதோரிடத்தில்,

அன்புக்கும் தீக்கும் விடத்துக்கும் நோவுக்கும்
அச்சமில் லாதபடி
உம்பர்க்கும் இம்பர்க்கும் வாழ்வு தரும்பதம்
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்.[19]

17. ஷை. 19. பராசக்தி-3
18. ஷை. 22. வையமுழுதும்-4
19. ஷை. 18. ஓம் சக்தி-3

என்று பராசக்தியின் மீது தாம்கொண்டுள்ள நம்பிக்கையை—மனவுறுதியைத் — தெளிவாக்குகின்றார்.

தம் உடல் பொருள் ஆவியனைத்தையும் சக்தி தேவிக்கே சமர்ப்பணமாக்கி விடுகின்றார்.[20] இன்னொரு பாடலில்,

சக்திசக்தி வாழி என்றால்
சம்பத் தெல்லாம் நேராகும்;
சக்திசக்தி என்றால் சக்தி
தாசன் என்றே பேராகும்.[21]

என்று சக்தி தேவியை வாழ்த்தி, தம்மைச் 'சக்திதாசன்' என்று கூறிக்கொள்ளுகின்றார். பிறிதொரு பாடலில்,[22] சக்தியையும் தம்மையும் ஐக்கியப் படுத்திக்கொள்ளுகின்றார்.

இன்ப மாகிவிட்டாய் - காளி !
என்னுளே புகுந்தாய் !
பின்பு நின்னை யல்லால் - காளி !
பிறிது நானும் உண்டோ?

என்ற பாடலில் இக்கருத்தினைக் காணலாம். இது,

உன்னைக் கொண்டு என்னுள் வைத்தேன்
என்னையும் உன்னில் இட்டேன்[23]

என்ற பெரியாழ்வார் வாக்கையும்,

20. ஷை. 24. சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம்
21. ஷை. 25. சக்தி திருப்புகழ்-9
22. ஷை 30. காளிப் பாட்டு-2
23. பெரியாழ். திரு. 5, 4 : 5

நான்உன்னை அன்றிஇலேன்
கண்டாய்; நாரணனே !
நீ என்னை அன்றி இலை.[24]

என்ற திருமழிசையாழ்வார் திருமொழியையும்,

புவியும் இருவிசும்பும் நின்அகத்த நீஎன்
செவியின் வழிபுகுந்து என்வுள்ளாய் அவிவுஇன்றி
யான்பெரியன் நீபெரியை என்பதனை
யார் அறிவார்.[25]

என்ற சடகோபரின் திருவாக்கையும்,

தந்ததுன் றன்னைக் கொண்ட தென்
றன்னைக்
சங்கரா ஆர்கொலோ சதுரர் ?
அந்தமொன் றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்றதொன் றென்பால்[26]

என்ற மணிவாசகப் பெருமானின் மணிவாக்கையும் நினைவுகூரச் செய்துவிடுகின்றது.

சக்தியைப்பற்றி மேலும் சில செய்திகளை அறிந்து கொண்டால் பாரதியாரின் சக்தி பற்றிய பாடல்களில் மேலும் தெளிவு பெறலாம். இறைவனது மேலான சக்தி (பராசக்தி) உலகத்தை நோக்கும்போது அதன் ஒரு சிறு கூறு உலகத்தைத் தொழிற்பட முற்படும்; அதனை **ஆதிசக்தி** என்று வழங்குவர். உலகத்தை இயக்கும்

24. நான். திரு. 7
25. பெரி. திருவந். 75
26. திருவா. கோயிற்றிருப்பதிகம்-10

எல்லாச் சக்திகட்கும் இதுவே முதல் மூலமாக இருப்பதால் இப்பெயரைப் பெறுகின்றது. இச் சக்தி உயிர்கட்கு இறைவனைக் காட்டாமல், உலகத்தையே காட்டி அவற்றைப் பிறப்பு-இறப்புச் சுழலில் உழலச் செய்வதால் அது **'திரோதான சக்தி'** என்ற திருப்பெயரையும் உடையது; **திரோதாயி** என்றும் வழங்குவது உண்டு. திரோதானம் - மறைப்பது; திரோதாயி - மறைத்தலைச் செய்வது. இந்தச் சக்தியையே பாரதியார்,

பரிதி யென்னும் பொருளிடை யேய்ந்தனை
பரவும் வெய்ய கதிரெனக் காய்ந்தனை;
கரிய மேகத் திரளெனச் செல்லுவை;
காலு மின்னென வந்துயிர் கொல்லுவை;
சொரியும் நீரெனப் பல்லுயிர் போற்றுவை;
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை;
விரியும் நீள்கட லென்ன நிறைந்தனை;
வெல்க காளி யெனதம்மை வெல்கவே.[27]

என்ற பாடலை அடுத்து வரும் பாடல்களெல்லாம் இந்தச் சக்தியையே குறித்தனவாகும் என்று கருதலாம்.

திரோதான சக்தி உலகத்தைத் தொழில் படுத்த வேண்டும் என இச்சித்தலால் அஃது **இச்சா சக்தி** எனப் பெயர் பெறுகின்றது. இதற்குரிய வழியை அறிவதால் **ஞான சக்தி** என்ற திருநாமத்தையும் ஏற்கின்றது. அவ் வழியே தொழிற்படுத்தி நிற்றலால் **கிரியா** சக்தி என்ற திருப்பெயரையும் கொள்கின்றது. எனவே பராசக்தி, ஆதிசக்தி, இச்சா சக்தி, ஞான சக்தி, கிரியா சக்தி என்று இவை **'பஞ்ச சக்திகள்'** என்று தொகை நிலை பெற்றுத் திகழ்வதையும் தெரிந்துகொள்ளலாம்.

27. ஷை மகாசக்தி வாழ்த்து-3

இச்சா சக்தி எப்பொழுதும் செயற் பாட்டுக்குத் துணையாய் நிற்கும். மற்றைய இரண்டும் ஒவ்வொன்றும் தனித்தனியாகவும் இணைந்தும் ஏறியும் குறைந்தும் செயற்படும். இதனால் தடத்த நிலைகள் பெரும் பான்மையாக **ஐந்து** வகைப்பட்டு நிற்கும். இவற்றையும் நாம் தெரிந்து தெளிதல் வேண்டும். ஞான சக்தி மாத்திரம் தொழில் படும் நிலையில் பதி **சிவம்** என நிற்கும்; கிரியா சக்தி மாத்திரம் தொழிற்படும் நிலையில் பதி **சக்தி** என நிற்கும்; இரண்டும் ஒப்பத் தொழிற்படும் நிலையில் பதி **சதாசிவம்** என நிற்கும். ஞானசக்தி குறைந்து நிற்க கிரியா சக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி **மகேசுவரன்** என நிற்கும். கிரியா சக்தி குறைந்து நிற்க ஞான சக்தி மிக்குத் தொழிற்படும் நிலையில் பதி **வித்தை** என நிற்கும். இவற்றைத் தெளிந்தால் பாரதியாரின் சக்திப் பாடல்களில் பொதிந்துள்ள சக்தியின் பரிணாம சிறப்புகளை நன்கு தெளியலாம்.

மேற் கூறியவற்றால், சொரூப நிலையில் இறைவன் தனக்கென்று ஓர் உருவும், தொழிலும், பெயரும் இல்லாதவனாயினும் தடத்த நிலையில் உயிர்களின் பொருட்டுப் பலபல உருவும் தொழிலும் பெயரும் உடையவனாகின்றான் என்பதை அறிய முடிகின்றது. இதனைத் தம் அநுபூதி நிலையில் தெளிந்த மணிவாசகப் பெருமான்,

*ஒருநாமம் ஓர்உருவம்*
*ஒன்றுமிலார்க் காயிரம்*
*திருநாமம் பாடிநாம்*
*தெள்ளேணம் கொட்டாமோ ?*[28]

என்று அருளிச் செய்துள்ளமை ஈண்டு நினைத்தல் தகும். இவை தடத்த நிலையேயன்றி கற்பனை அல்ல என்பதை நாம் உளங்கொள்ளல் வேண்டும்.

---

28. திருவா. திருத்தெள்ளேணம்-1

**6. சமரச நோக்கர்:** பாரதியார் ஒரு சமரச நோக்கர் என்பதை அவர்தம் பாடல்களால் தெளியலாம். சமயச் சான்றோர்களுள் தாயுமான அடிகள், இராமலிங்க அடிகள் இவர்களே சமயங்களுள் ஒரு சமரச நிலையை நிலை நாட்ட முற்பட்டவர்கள். சமயச்சான்றோர் வரிசையில் வைத்து எண்ணப்படா விட்டாலும் மேற்கூறிய இரு பெரியார்களை அடுத்து, சமயங்களுள் ஒரு சமரச நிலையை ஏற்படுத்த முயன்றவர் பாரதியார் என்று மதிப்பிடுவதில் தவறில்லை. பண்டையோர் வழிபடும் தெய்வங்களான விநாயகர், முருகன், நாமகள், பூமகள், கண்ணன், இராமன், கோவிந்தன், சக்தி என்பவற்றையெல்லாம் வழிபட்டு மங்களாசாசனம் செய்துப் போற்றினாலும், எல்லாக் கடவுளர்களும் ஒரே பரம் பொருள் என்ற உணர்ச்சியை அடிநாதமாகக் கொண்டவர் நம் கவிஞர் பெருமான் என்பதற்கு அகச்சான்றுகள் உள்ளன. **'பாஞ்சாலி சபதத்தில்'** காப்புப் பகுதி பரப்பிரம்மத்தின் துதியாக அமைந்துவிடுகின்றது.

ஓமெனப் பெரியோர்கள் - என்று
ஓதுவ தாய்வினை மோதுவதாய்
தீமைகள் மாய்ப்பதுவாய் - துயர்
தேய்ப்பதுவாய் நலம்வாய்ப்பதுவாய்
நாமமும் உருவமும் அற்றே - மனம்
நாடரி தாய்ப்புத்தி தேடரிதாய்
ஆமெனும் பொருளனைத்தாய் - வெறும்
அறிவுடன் ஆனந்த இயல்புடைத்தாய்;
நின்றிடும் **பிரும்மம்** என்பார் - அந்த
நிர்மலப் பொருளை நினைத்திடுவேன்[1]

1. பாஞ்சாலி சபதம்-1. 1:1 (பிரும்ம துதி)

என்பது பிரும்மத்தைப் பற்றிய பாடல். "வடமொழியில் 'ஓம்' என்னும் சொல்லுக்கு 'ஆம்' என்றே பொருள். எவ்விடத்தும் 'இல்லை' யாதலின்றி 'ஆம்' என இருத்தல் பற்றியே, வேதம் பிரும்மத்திற்கு 'ஓம்' எனும் பெயர் கொடுக்கப் பட்டிருப்பதறிக" என்ற பாரதியாரின் குறிப்பு பிரும்மத்தை நன்கு விளக்குகின்றது. 'சுயசரிதை'ப் பகுதியிலுள்ள,

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்
குறிகுண மேதும் இல்லதாய் அனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே.[2]

என்ற பாடலும் பிரும்மத்தைக் குறிப்பிடுவதைக் காணலாம். இன்னும் 'புதிய ஆத்திசூடி' என்ற பகுதியின் 'காப்பும்' பரம்பொருள் வாழ்த்தாக அமைந்துள்ளதைக் காணலாம்.

ஆத்தி சூடி, இளம்பிறை யணிந்து
மோனத் திருக்கும் முழுவெண் மேனியான்;
கருநிறங் கொண்டுபாற் கடல்மிசைக் கிடப்போன்;
மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்;
ஏசுவின் தந்தை; எனப்பல மதத்தினர்
உருவகத் தாலே உணர்ந்துண ராது

2. பா. க. சுயசரிதை-49

பலவகை யாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே; அதனியில் ஒளியுறும் அறிவாம்;
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்;
அதனருள் வாழ்த்தி அமரவாழ்வு எய்
துவோம்.[3]

இதில் திருமால், சிவன், மகமது நபி, இயேசு இவர்கள் யாவரும் ஒரே பரம்பொருள் என்று குறிப்பிடுவதைக் காணலாம். 'அறிவே தெய்வம்', 'பரமசிவ வணக்கம்', 'நான்'-என்ற பாடல்களிலும் பரம்பொருள் ஒன்றே என்ற கருத்தினைக் கண்டு மகிழலாம்.

பல்லாயிரம் பல்லாயிரம் கோடி
கோடி அண்டங்கள்
எல்லாத் திசையிலும் ஓர் எல்லை
யில்லா வெளிவானிலே!
நில்லாது சுழன்றோட நியமம்
செய்தருள் நாயகன்
சொல்லாலும் மனத்தாலும் தொடரொ
ணாத பெருஞ்சோதி[4]

என்ற 'அல்லா'வைப் பற்றிய இந்தப் பாடல் பரம் பொருளுக்கும் பரஞ்சோதிக்கும் பொருந்துமாறு அமைந் துள்ளதைக் காணலாம்.

எல்லாச் சமயங்கள் கூறும் மந்திர மொழிகள் யாவும் ஒரே பொருளினையே குறிக்கும் என்பது பாரதியாரின் தெளிந்த ஞானமாகும். இதனைக் கோவிந்தசாமியின் வாக்காக வெளியிடுகின்றார்.

3. பா. க. புதிய ஆத்திசூடி-காப்பு
4. தோ. பா. 78. அல்லா-1

ஒருமொழியே பலமொழிக்கும் இடங்கொடுக்கும்
ஒருமொழியே பலமொழிக்கும் ஒழிக்கும்என்ற
ஒருமொழியைக் கருத்தினிலே நிறுத்தும் வண்ணம்
ஒருமொழி 'ஓம நமச் சிவாய' என்பர்;
'ஹரி ஹரி'யென் றிடினும் அஃதே; 'ராமராம'
'சிவசிவ' வென் றிட்டாலும் அஃதே யாகும்;
தெளிவுறவே 'ஓம்சக்தி' யென்று மேலோர்
செபம்புரிவ தப்பொருளின் பெயரே யாகும்.[5]

இப்படி வற்புறுத்திக் கூறும் கோவிந்தசாமி பின்பும் பகர்வார்:

சாரமுள்ள பொருளினைநான்சொல்லி விட்டேன்
சஞ்சலங்கள் இனிவேண்டா; சரதம்தெய்வம்;
ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;
எப்போதும் அருளைமனத் திசைத்துக்
கொள்வாய்;
வீரமிலா நெஞ்சுடையார் சிவனைக் காணார்;
எப்போதும் வீரமிக்க வினைகள் செய்வாய்;
பேருயர்ந்த ஏஹோவா அல்லா நாமம்
பேணுமவர் பதமலரும் பேணல் வேண்டும்.[6]

இப்பாடலில் எல்லாச் சமயங்களும் குறிப்பிடும் **'அடியார் வணக்கத்தை'** வலியுறுத்திப் பேசுவதைக் காணலாம்.

எல்லாச் சமயங்களும் கொண்டுள்ள கருத்து ஒன்றே யாகும் என்பதை,

---

5. பாரதி அறுபத்தாறு-63
6. பாரதி அறுபத்தாறு-64

பூமியிலே கண்டம்ஐந்து மதங்கள் கோடி !
புத்தமதம் சமணமதம் பார்ஸி மார்க்கம்
சாமியென ஏசுபதம் போற்றும் மார்க்கம்
சனாதனமாம் இந்துமதம், இஸ்லாம் யூதம்;
நாமமுயர் சீனத்துத் 'தாவு' மார்க்கம்,
நல்ல 'கண்பூசி'மதம் முதலாம் பார்மேல்
யாமறிந்த மதங்கள்பல உளவாம் அன்றே;
யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்
கொன்றே.[7]

என்று வேற்றுமையில் ஒற்றுமையை உணர்த்துகின்றார். அடுத்து நாம் திடசித்தமாக இருக்க வேண்டும் என்பதை,

பூமியிலே வழங்கிவரும் மதத்திற் கெல்லாம்
பொருளினை நாம் இங்கெடுத்துப் புகலக்
கேளாய்!
சாமிநீ; சாமிநீ; கடவுள் நீயே;
தத்வமஸி; தத்வமஸி நீயே அஃதாம்;
பூமியிலே நீகடவுள் இல்லை என்று
புகல்வதுநின் மனத்துள்ளே புகுந்த மாயை;
சாமிநீ அம்மாயை தன்னை நீக்கிச்
சதாகாலம் 'சிவாஹோ'மென்று சாதிப்
பாயே.[8]

என்ற பாடலில் வலியுறுத்துவதைக் காணலாம். இதில் சர்வ சமய சமரசத்தை நிலைநாட்டுவதையும் கண்டு மகிழலாம்.

---

7. ஷை-65
8. ஷை-66

உலகிலுள்ள சமயங்கள் போற்றும் உயர்ந்த நூல்களெல்லாம் பொது இயல்பு ஒன்றைப் படைத்திருக்கின்றன. நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ அவை யாவும் மகாவாக்கியத்துக்கு விளக்கமாக வந்து அமைந்திருக்கின்றன. மகாவாக்கியம் என்பது பரமான்மாவுக்கும் சீவான்மாவுக்கும் உள்ள சம்பந்தத்தைச் சொல்வது. வேதங்களில் நான்கு மகாவாக்கியங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றுள் மிகச் சிறப்புடையது **தத், துவம், அஸி** என்னும் மூன்று சொற்களைக் கொண்டது. **துவம்**-நீ, **தத்**-அதுவாக, அஸி-இருக்கிறாய் என்பது பொருள். சீவான்மாவாகிய நீ பரமான்வாகிய அதற்கு அந்நியமானவன் அல்லன் என்பது பொருள். இக்கோட்பாட்டை எல்லாச் சாத்திரங்களும் ஏதேனும் ஒரு விதத்தில் இயம்புகின்றன. இதை எடுத்து ஓதாத நூல் உயர்ந்த நூல் ஆகாது. 'தத்துவம் அஸி' என்னும் மகாவாக்கியத்துக்கு உற்ற உயர்ந்த விளக்கம் என்று பகவத்கீதையைச் சொல்லலாம்.

இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தால்,

*வேறுபடு சமயமெல்லாம் புகுந்து பார்க்கில்*
*விளங்குபரம் பொருளே! நின் விளையாட்டல்லால்*
*மாறுபடும் கருத்தில்லை, முடிவில்; மோன*
*வாரிதியின் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா!*[9]

என்ற தாயுமான அடிகளின் கருத்து நம் கவிஞரின் கருத்திற்கு அடிப்படையாக இருப்பதைக் கண்டு மகிழலாம்.

9. தாயுமான் சுவாமி பாடல்-630

**7. புதுக் கவிதை நாயகர்:** சென்ற நூற்றாண்டு வரையில் தமிழ் இலக்கியம் செய்யுள் வடிவத்தில் தான் இருந்தது. வானியல், மருத்துவம், தத்துவம், தருக்கம் போன்ற எந்த நூலாக இருந்தாலும் அவையனைத்தும் செய்யுள் நடையில்தான் அமைந்தன. அச்சுப் பொறி அறியப் பெறாத காலத்தில் ஏடும் எழுத்தாணியும் கொண்டு விரைவில் எழுதி முடிக்கவும், எழுதியவற்றை எளிதில் நினைவில் நிறுத்தவும், அடுத்த தலைமுறையினருக்கு அவற்றைச் செவிவழியாகக் கடத்துவதற்கும் செய்யுளின் ஓசையும் யாப்பு முறையும் உறுதுணை புரிந்தன. இலக்கியமும் '**செவிநுகர் கனி**'யாகத் திகழ்ந்ததற்கு இதுவே காரணமாகும். இதனால், தான் உரையாசிரியர்களும் திட்பமும் நுட்பமும் கொண்ட உரைகளைச் சுருக்கமாகவே எழுத நேர்ந்தது. இக்காலத்தில் இவ்வுரையைப் புரிந்து கொள்வதற்குச் 'சர்பத் கலக்குவதுபோல்', மேலும் சொற்களைப் பெய்து நீராளமாகச் செய்து விளக்க வேண்டிய இன்றியமையாமையும் ஏற்பட்டது; ஏற்பட்டும் வருகின்றது.

இன்றைய நிலை வேறு. நாம் வாழ்வது அறிவியல் தொழில் நுட்பக் காலம். தட்டச்சுப்பொறி, அச்சுப் பொறி, அச்சுப்பொறிகளிலும் பல்வேறு நுட்ப வகைகள். இவை எழுதுவதற்குத் துணையாக அமைந்து விட்டன. நாடாப் பதிவும் 'பிலிம்' படங்களில் பதிவு செய்யும் முறையும், நூலக அமைப்பு முறைகளும் எழுதியவற்றைப் பேணும் சாதனங்களாக அமைந்து விட்டன. செவிப்புல ஆட்சியைவிடக் கட்புலன் ஆட்சி மிகுந்துவிட்டது. எவற்றையும் நினைவில் நிறுத்தித் '**தலைக்கனம்**' செய்ய வேண்டிய இன்றியமையாமை இல்லாது போய்விட்டது. கல்வி முறையிலும் நெட்டுருச் செய்து நினைவிலிருத்த வேண்டிய முறை தளர்ந்து விட்டது. தகர்ந்தே போய்விட்டது என்று கூடச் சொல்லலாம். வாய்விட்டுப் படித்தல் குறைந்து வாய்க்குட்

படித்தல் செல்வாக்கு அடைந்துவிட்டது. ஒரே அறையில்-பெரிய மண்டபத்தில்-பலர் இருக்கைகளில் அமர்ந்து 'கல்லாலின்புடை அமர்ந்துள்ள தென்முகக் கடவுள்போல்' நூல்களிலும் வார, பிறை, திங்கள் இதழ் களிலும் ஆழங்கால் பட்ட நிலையில் அமர்ந்திருக்கும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருப்பதை நூலகங் களில் காணலாம். இந்தச் சூழ்நிலையில் செய்யுள் வடிவம் செல்வாக்கிழந்து உரைநடை வடிவம் உயர்ந்தோங்கிவிட்டது. மேனாட்டார் வருகைக்குப் பிறகு உரைநடை இலக்கியங்களில் புதினம், சிறுகதை, கட்டுரை வகைகள் ஆகியவை தோன்றி வளர்ந்து, நிலைத்து நின்றுவிட்டன. இந்த நிலையில் கவிதையும் உரைநடையில் ஏன் இயங்கக் கூடாது என்ற வினாவும் எழத் தொடங்கிவிட்டது. மேனாட்டு இலக்கியப் புரட்சி களின் தாக்கமும் ஆங்கிலக் கல்வியின் வாயிலாக நமக்குக் கிடைத்துள்ளது.

**விட்மெனின்** வசன கவிதை முயற்சிகள் **எஸ்ராபவுண்டு, டி. எஸ். எலியட்டு** போன்றவர்களால் ஆங்கில மொழியில் கையாளப் பெற்றன. கடந்த அரை நூற்றாண்டுக் காலத்தில் இத்தாலி ஸ்பானிஷ், செர்மென், இரஷிய மொழிகளின் இலக்கண மரபில் கணிசமான நெகிழ்ச்சியும் மாற்றமும் ஏற்படலாயின. நந்தமிழ் மொழியிலும் பாரதியாரின் காலம் முதல் (இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கம்) புதிய பாணியில் கவிதைகள் முகிழ்க்கத் தொடங்கின. தொடக்கக் காலத்தில் யாப்பு முறைகட்குக் கட்டுப்படாமல் கவிதை உணர்வுகட்குச் சுதந்திரமான எழுத்துவடிவம் கொடுக்கும் படைப்பு முயற்சி **வசன கவிதை** என்றே வழங்கப் பெற்றுள்ளது.

மேலை நாடுகளில் நடைபெற்ற கவிதைச் சோதனைகள் பாரதியார் காலம் முதல் தமிழகத்திலும் நடைபெற்றன. வால்ட்விட்மெனின் கவிதைப் பொரு

ளிலும் ஜனநாயகக் குரலிலும் கவரப் பெற்றவர் பாரதியார், விட்மெனைப் பற்றி அவர் கூறுவார்'.

'இவருடைய பாட்டில் புதுமை என்னவென்றால் இது வசன நடைபோலத்தான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனை இல்லாத கவிதைதான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும்பகுதியாகும். வால்ட்விட்மென் கவிதையைப் பொருளில் காட்டவேண்டுமே யல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோசன மில்லை என்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாக மற்றப்படி வசனமாகவே எழுதி விட்டார்.'[1]

பாரதியார் காலம்வரை கவிதை புலவர்களிடமும் பண்டிதர்களிடமும் சிக்கித் தவித்தது. கவிதை செய்யுள் வடிவில்தான் இருக்க வேண்டும் என்ற இலக்கண விதி தான் இதற்கு முதற் காரணமாகும். இதனால் கவிதைப் பண்பு மறைந்து யாப்பே முந்திரிக்கொட்டைபோல் முன்னின்று **'தரிசனம்'** தந்தது. பாரதியார் புலவர்களின் கடுமையான நடையை-தேர்வடம் போன்ற விறைப்பான தமிழ் நடையை-இவ்வாறு கண்டனம் செய்வார்:

'அருமையான உள்ளக் காட்சிகளை எளிய நடையில் எழுதுவது நல்ல கவிதை. ஆனால், சென்ற சில நூற்றாண்டுகளாகப் புலவர்களும் சாமியார் களும் சேர்ந்து வெகு சாதாரணமான விஷயங்களை அசாதாரண அலௌகிக அந்தகார நடையில் எழுது வதுதான் உயர்ந்த கல்வித்திறமை என்று தீர்மானம் செய்து கொண்டார்கள்'[2]

---

1. பாலா-புதுக் கவிதை - ஒரு புதுப் பார்வை - பக்-41 இல் காட்டப்பட்டது.
2. ஷை-பக் 42.

பாரதியார் மரபுக் கவிதைகளை எளிமையாக்கின தோடன்றி வசன கவிதைகளையும் எழுதித் தமிழில் புதிய கவிதைச் சோதனைகளை மேற்கொண்டார்; செய்யுள் வடிவ உடைப்பை மேற்கொண்டு-முட்டையை உடைத்துக்கொண்டு குஞ்சு வெளிவருவதுபோல்-வசன கவிதைகளை வெளியிட்டார். இதனைத் தெளிவுறுத்தும் போக்கில்'

பண்டிதர்கள்
கடத்திச் சென்ற
பைந்தமிழ்க் குழந்தையைக்
கண்டு பிடித்துக்
கொண்டு வந்த
காவல் நிலையம்...[3]

என்று புதுக் கவிஞர் ஒருவர் கிண்டல் செய்கின்றார். இன்னொரு புதுக் கவிஞர் முத்தொள்ளாயிரப் பாணியில்,

அன்று மணிக்கதவை
தாயர் அடைக்கவும்
மகளிர் திறக்கவும்
செய்தார் மாறி மாறி;
என்றும்
புலவர் அடைப்ப
கவிஞர் திறப்பார்.[4]

3. கவிஞர் வாலி : **பொய்க்கால் குதிரைகள்** - பாரதி ஒரு பிள்ளையார் சுழி.
4. மணி, சி : வரும் போகும்.

என்று இந்நிலையைக் காட்டுவர். புலவர் அடைத்த கவிதைத் திருக்கதவைக் கவிஞர் வந்து திறக்கும் புது முயற்சியாகத் தமிழ் வசன கவிதை முயற்சிகள் அமைந்தன என்பது இக் கவிஞர் பெற வைக்கும் குறிப்பாகும்.

## புதுக் கவிதையின் மூலம் :

'ரிஷிமூலம்', 'நதிமூலம்', இவற்றைக் காண்பது எளிதல்ல என்று கூறுவதில் உண்மை உண்டு. ஆனால் புதுக் கவிதையின் மூலத்தை ஒருவாறு அறுதியிட்டு விடலாம். கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் தமது எல்லாக் கவிதைகளும் பண்டிருந்து வரும் கவிதைகளினின்றும் சிறிதோ முற்றிலுமோ மாறுபட்ட படைப்புகளாக அமைந்த காரணத்தால் அவற்றைப் **புதுக் கவிதை**-நவ கவிதை-என்றே குறிப்பிடுகின்றார்.

*சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது*
*சொற்புதிது சோதிமிக்க*
*நவ கவிதை.*[5]

என்று அவர் தமது கவிதைகளைப் பற்றிப் பேசுவதைக் காணலாம்: ''எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்தில் செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவோனாகின்றான். ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோர்க்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன், காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்துதல் வேண்டும்'' என்று பாரதியார் தமது **'பாஞ்சாலி சபதத்திற்கு'** எழுதியுள்ள முகவுரைப் பகுதியாலும்-அவருக்குப் 'புதுக் கவிதையில்'

5. பாரதியார். வேங்கடேசபூபதி - (2)-3.

இருந்த பேரவா புலனாகும். இத்தகையதோர் அவாவைக் கொண்ட கவிஞரே 'புதுக் கவிதை'யைத் தோற்றுவித்த தந்தையுமாகின்றார்.. முன்னோடியாகவும் திகழ் கின்றார்.

தமது கவிதையுணர்வுகளையும், அகத்தெழுச்சி களையும், கனவுகள், கற்பனைகள், முற்போக்கு எண்ணங் கள், சமுதாயப் பார்வைகள், நாட்டு நிலைகள் ஆகிய அனைத்தையும் மரபு நிலைகெடாத, எளிய, இனிய, புதிய புதிய யாப்புகளில், சந்த நயங்கட்கு உட்படும் பல்வேறு புதிய வடிவங்களில் வெளிப்படுத்திய கவிஞர் பெருமான் இலக்கண விதிகட்குக் கட்டுப்படாத வடிவத் திலும் கவிதைகளைப் படைக்க முயன்றுள்ளார். இந்த முயற்சிகளின் விளைவுகளே **வசன கவிதைகளாகும்**. இத் தொகுப்பிலுள்ள கவிதைகள் வசனத்தை மீறியவை யாயினும், கவிதையின் முழுத்தன்மையை எய்தாத ஒரு முயற்சியாகவே படைத்துள்ளார் என்று கருதலாம். இதிலுள்ள முதற் கவிதை;

> 'இவ்வுலகம் இனியது; இதிலுள்ள வான் இனிமை யுடைத்து; காற்றும் இனிது. தீ இனிது. நீர் இனிது, நிலம் இனிது.'
>
> ஞாயிறு நன்று; திங்களும் நன்று. வானத்துச் சுடர்களெல்லாம் மிக இனியன. மழை இனிது. மின்னல் இனிது. இடி இனிது.

என்று தொடங்குகின்றது. இது வசனமா? கவிதையா? என்பதை ஆராய்வோம். அதற்கு முதலாக ரசிகமணி டி.கே. சியின் கவிதை பற்றிய கருத்தினைக் காண்போம்

> கவி(தை) என்றால் இன்னதென்று சொல்வதற்கு இலக்கணம் கிடையாது. உலகத்தில் எங்கும் கிடை-யாது. யாப்பியல் இந்த விஷயத்தில் எந்த

> உதவியும் புரியவில்லை. வெண்பா இது, விருத்தம் இது என்று ஏதோ சொல்லலாம். ஆனால் கவி(தை) இன்னதென்று சொல்லவே முடியாது. ஒரு பாஷை யோடும் அதிலுள்ள சிறந்த கவி(தை)களோடும் உண்மையான ஆர்வத்தோடு படாடோபத்தை யெல்லாம் தூரத்தே விட்டுவிட்டு நெடுநாள் பழகி வருவோமானால் அது தெரிய வரலாம்.[6]

இதிலிருந்து யாப்பமைதி வேறு, கவிதையின் வடிவ அமைதி வேறு என்பதை டி.கே.சி அவர்களின் கருத்து தெளிவுறுத்துகின்றது. எனவேதான் வசன கவிதையைப் படைப்போர் இலக்கணம் வேறு, கவிதை வேறு என்பதை உணர்ந்து யாப்பைப் புறக்கணித்துள்ளனர்.

கவிதைக்கும் வசனத்திற்கும் சொற்கள் பொது என்பது உண்மை. ஆயினும், கவிதையின் சுருதி வேறு; வசனத்தின் சுருதி வேறு. 'தீ இனிது' என்பதில் 'இனிது' என்ற சொல் சுவையை (நாவின் செயலை)ச் சார்ந்தது. 'தீ சுடும்' என்பதில் 'சுடும்' என்ற சொல் ஊற்றுணர்வைத் (நொப்புலச் செயலைத்) தெரிவிக் கின்றது. 'தீ சுடும்' என்ற தொடர் அறிவோடு பேசு கின்றது. 'தீ இனிது' என்ற தொடர் உணர்வோடு பேசுகின்றது. எனவே, முன்னது வசனம்; பின்னது கவிதை. சொற்றொடர் வெறும் செய்தியை மட்டிலும் சொல்லாமல், உவமையைப்போல் உணர்விடம் பேசு மானால் கவிதை பிறந்துவிடுகின்றது. தீ இல்லை என்றால் ஊண் ஏது? உலகு என்பது நிலைபெற முடியுமா? அதனால்தான் 'தீ இனிது' என்பதை உணர்ச்சி ஒப்புக்கொள்ளுகின்றது. ஒரு பொறிக்கு உரித்தான தொழிலைப் பிறிதொரு பொறியின் மீதேற்றிக் கவிதையின் சிறப்பைக் கூட்டும் கற்பனை உத்தி இங்குக்

6. டி. கே. சி. மொழிகள்-தீபம், செப்டம்பர் - 1972.

கையாளப் பெற்றிருப்பதைக் கண்டு மகிழலாம். பிறி தோரிடத்தில்,

*செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்*
*தேன்வந்து பாயுது காதினிலே.*[7]

என்று பாடுகின்றார் பாரதியார். இயற்கையாகச் சுவையை நாக்கின் மூலமே உணர்கின்றோம். காதின் மூலம் இந்தச் சுவையை உணரலாம் என்பது இயற் கைக்கு முரண்பட்டது. ஆனால், நாக்கின் தொழிலைக் காதின் மேலேற்றிக் கூறும் திடுக்கிடும் அநுபவம் நுண் ணுணர்வின் பாற்பட்டது. பொறிகளுக்குள்ள வேறுபாடு உடலியலைப் பற்றிய வரையில் உண்மையாகும்; உளவியல் அல்லது மனநிலையைப் பற்றிய வரையில் வேறுபாடு காண இயலாது. இரண்டின் விளைவும் ஒன்றுதான் என்ற நுண்ணுணர்வைக் காணும் பொழுது தான் வசன கவிதை பிறக்கின்றது. காதை அடிப் படையாகக் கொண்ட எதுகை மோனைகட்கு இப் பொழுது இன்றியமையாமை இல்லாமல் போய் விடுகின்றது என்பது உண்மை; கசப்பான உண்மையும் கூட. மேற்காட்டிய இரண்டு இடங்களிலும் பொறிகள் தங்கள் தங்கள் தொழில்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ள இயலும் என்ற கவிதை உண்மை தட்டுப்படு கின்றது. இந்த இடங்களில் பொறிகளின் தயவையும் மீறிய நேரிடையான அநுபவத்தால் இயற்கையான நுண் ணுணர்வு செயற்படுவதைக் கண்டு வியப்படைகின்றோம். இக் கவிதையை மேலோட்டமாகப் படிக்கும்போது 'வசனம்' போல் நடக்கின்றது; சற்றுச் சிந்தித்துப் படிக் கும்போது 'கவிதை'யாகி விடுகின்றது. சிறகுடன் பறப் பது போன்ற உணர்ச்சி மேலிடுகின்றது. இதனால்தான்

7. தே. கீ. செந்தமிழ்நாடு-1

இது 'வசன கவிதை' என்ற திருநாமமும் பெற்றது போலும்! மேலும்,

*தெளிவுறவே அறிந்திடுதல்; தெளிவுதர*
*மொழிந்திடுதல், சிந்திப் பார்க்கே*
*களிவளர உள்ளத்தில் ஆனந்தக்*
*கனவுபல காட்டல்; கண்ணீர்த்*
*துளிவரஉள் ளுருக்குதல்.*[8]

என்ற கவிஞனின் குறிக்கோளையும் நிலைபெறச் செய்து விடுகின்றது. கவிதையைப் படிப்போரிடமும் மந்திர ஆற்றல் போன்ற ஒருவித ஆற்றலால் இந்த உணர்வுகளை எழுப்பி விடுகின்றது.

மேற்கூறியவற்றை அறிந்த பிறகும் வசனமும் கவிதையும் ஒன்றாகுமா என்ற வினா நம்மிடையே எழத்தான் செய்கின்றது. இதற்கு ஓர் அமைதி கூற வேண்டியது இன்றியமையாததாகின்றது. உண்மையில் கவிதையும் வசனமும் ஒன்றாகா. கவிதை வசனமாகாது என்பது மட்டிலும் உறுதி. வசனம் (Prose), செய்யுள் (Verse) ஆகிய இரண்டிற்கும் அப்பாற்பட்டது கவிதை. வசனம் அல்லது உரை நடை, செய்யுள் ஆகியவை கவிதை இயங்கும் தளங்களாகும். இவை இரண்டும் கவிதையின் புறவடிவங்களாகும்; கவிஞன் கையாளும் இருவிதச் சாதனங்களாகும். இந்த இரண்டு சாதனங்களில் (Devices) மட்டிலும் கவிதையைக் காண இயலாது. இவற்றைக் கவிஞன் கையாளும் முறையில்தான் கவிதை தென்படும். படைப்புத்திறம் மிக்க கவிஞனுக்குச் செய்யுளில் கவிதை கிடைக்கும்; வசனத்திலும் கிடைக்கும். இன்று மரபுக்

8. பாஞ்சாலி சபதம்-154.

கவிதையாளர்கள் எழுதும் புதுக் கவிதைகளில் இந்த உண்மையைத் தெளிவாகக் காணலாம். ஊன்றி நோக்கு வார்க்கே இது தட்டுப்படும்.

செய்யுள் உரைநடை என்ற இரண்டிலும் கவிதை தென்படும் என்பது உண்மையே யாயினும், கவிதையின் கருப்பொருளுக்கிணங்க தான் மேற்கொள்ள வேண்டிய சாதனத்தை அறுதியிட்டுக் கொள்ளுகின்றான் கவிஞன். புதுக் கவிஞர்களில் சிலர் செய்யுள் வடிவத்திலும், சிலர் செய்யுள் உரைநடை ஆகிய இரண்டிலும், சிலர் வசனத்தில் மட்டிலும் தம் கவிதைகளை அமைக்கின்றனர். ஆனால், புதுக் கவிஞர்கள் அனைவருமே கவிதை வசனத்தில் இயங்கும் என்பதை ஒருமுகமாக ஒப்புக் கொள்ளுகின்றனர். இதனால் நாம் அறிந்துகொள்ளுவது; இன்றைய கவிஞர்கள் யாப்புணர்வு இல்லாமல் தம் கவிதைகளைப் படைக்கின்றனர். தாம் மேற்கொள்ளும் சாதனம் செய்யுளா வசனமா என்று அலட்டிக் கொள்வதில்லை. இவை இரண்டுமே கவிதையின் உண்மையான வடிவம். ''புராணத்தில் வரும் மன்மதனை ஓவியத்தில் எழுதிக் காட்டுவதற்கு ஒப்பாகும். சிவனது நெற்றிக் கண்ணால் எரிக்கப்பட்ட மன்மதன் ரதிதேவியின் கண்களுக்கு மட்டிலுமே தென்படுவானாம். அதுபோல இலக்கண தெய்வத்தின் நெற்றிக்கண் நெருப்புக்கு இரையான புதுக் கவிதையின் உருவமும் உண்மையான இலக்கிய ரதிகளுக்கு தென்படக்கூடும்''[9]. கவிதையின் கருத்து வெளிப்படும் அழகே கவிதையின் வடிவம். ஒரே பாவினத்தில் எழுதப் பெறும் இரண்டு கவிதைகள் வடிவத்தில் ஒன்று போலக் காணப்பட்டாலும் அவை வெவ்வேறு வெளியீட்டுத் தன்மையைக் கொண்டிருக்க முடியும். எடுத்துக் காட்டுகளாக இரண்டு சான்றுகளைக் காட்டலாம்.

9. புதுக் கவிதையின் உருவம் (மீரா). (அன்னம் மலர்-1976)

பாரதிதாசனும் சுரதாவும் எண்சீர் விருத்தத்தில் கவிதைகள் படைத்தாலும் அவற்றின் வெளியீட்டுத் தன்மை வேறுபட்டிருப்பதைக் காணலாம். அங்ஙனமே திருமங்கையாழ்வாரின் திருத்தாண்டகப் பாசுரங்களும் அப்பர் பெருமானின் திருத்தாண்டகப் பாடல்களும் பாணியில் ஒன்று போலத் தோன்றினாலும் அவற்றின் வெளியீட்டுத் தன்மை வேறுபட்டிருப்பது புலனாகும். இவ்வாறு உணர்த்தும் முறை கவிஞனின் மனவெளிக்குப் புலப்படும் சூக்குமத் தன்மை கொண்டது. எனவேதான் புதுக்கவிதையின் உருவம் திருமலை நாயக்கர் மகால் தூணைப்போலத் தூலமாகத் தெரிவதில்லை என்று எழுதினார் மீரா.

பாரதியின் வசன கவிதைகள் யோக நிலையில் கண்ட பேரின்பக் கனவுகள். இப் பகுதியிலுள்ள ஒவ்வொரு கவிதையும் இவ்வுண்மையைப் பறை சாற்றுகின்றது. வேத காலத்து ரிஷிகளைப்போலவே அழகு பொருந்திய அருட் சொற்களில் **'காட்சிகள்'** என்ற பகுதி வருணிக்கப் பெறுகின்றது.

பாட்டினிலே சொல்லுவதும்
அவள்சொல் லாகும் ?
பயனின்றி உரைப்பாளே ?
பாராய் நெஞ்சே![10]

என்று கூறியவரல்லவா? பாடல்கள் வசனத்திலிருந்தாலும் திருமூலர் சொற்களின் வேகத்தைப் பெறுகின்றன. பொருள் கனத்தையும் தாங்கிச் செல்லுகின்றன. இதனால் பாரதியார் சித்தர்கள் நிலைக்கு உயருகின்றார். "யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்"[11] என்று தன்னம்பிக்கையுடனும் சொல்லிக் கொள்ளுகின்றார். பாரதியார் முதன் முதலில் வசன கவிதைகளை எழுதினவராதலால்

10. தோ. பா. பேதை நெஞ்சே-5
11. பாரதி அறுபத்தாறு-1

வசன கவிதையின் தந்தையாகின்றார்; வசன கவிதை புதுக்கவிதை பிறக்கக் காரணமாக இருந்ததால் 'வசன கவிதை' என்ற பாரதியின் மகள் (சேய்) புதுக் கவிதையின் தாயாகின்றாள். ஆகவே பாரதியார் புதுக்கவிதையின் **பிதாமகன்** (பாட்டன்) ஆகின்றார்.

## இறுவாய்:

பெரியோர்களே, இன்று நீயூடனின் ஏழு வண்ணங்களடங்கிய கதிரவன் ஒளியைக்காண்பதுபோல் ஏழு கோணங்களில் ஞானக் கதிரவனாகிய சுப்பிரமணிய பாரதியாரின் படைப்புகளிலுள்ள கருத்துகளை ஏழு கோணங்களில் காட்ட முயன்றேன். என் மனத்திலுள்ள கருத்துகளை ஏதோ ஒரு வகையில் வடித்துக் காட்டினேன். காட்டாதவை ஏராளமாக உள்ளன. எழுத்து வலைக்குள் அகப்பட்டவை இவையே. இவற்றால் எளிய நடையே சிறந்த கவிதைக்கு அழகும் பொலிவும் ஊட்டும் என்ற உண்மையை மெய்ப்பித்தவர் இவரே என்றும், தற்காலக் கவிஞர்கள் தம் காலத்து வாழ்க்கையையும் கவிதைப் பொருளாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று காட்டினவர் இக் கவிஞர் கோமானே என்றும், பழமையிலிருந்து புதுமைக்கு மாறிக்கொண்டிருக்கும் தமிழரின் அறிவின் ஒளிக்கு ஓர் உருவமும், இதயத்தின் ஒலிக்கு ஓர் இசைப் பண்ணையும் அளித்துக் கவிதை புனைந்தவர் இக்கவி நாயகனே என்றும் தெளிந்தோம். இதனை விளக்கும் முறையில்

ஆ !
பாரதி
புதிய தமிழுக்குப்
போடப்பட்ட
பிள்ளையார் சுழி...[12]

12. பாரதி ஓர் பிள்ளையார் சுழி (வாலி- பொய்க் கால் குதிரைகள்)

என்று புதுக் கவிஞரின் கூற்று முக்காலும் உண்மை என்பதையும் அறிகின்றோம். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு இம் மாபெரும் கவிஞரின் பெருமையை மதிப்பிட்டால்,

புவியனைத்தும் போற்றிடவான் புகழ்
படைத்துத்
தமிழ்மொழியைப் புகழில் ஏற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக் கில்லை எனும்
வசை யென்னால் கழிந்த தன்றே.[13]

என்று அவரே பெருமிதத்துடன் கூறிக்கொள்வது முக்காலும் உண்மை; வெறும் புகழ்ச்சி இல்லை என்பது வெள்ளிடைமலை.

எழுதுகோல் தெய்வம்
இந்த எழுத்தும் தெய்வம்.[14]

என்று சொன்ன தனிப்பெரும் கவிஞருக்குத்தான் இவ்வாறு சொல்லும் திராணி இருக்கும். பவணந்தியாரும்,

தன்னைப் புகழ்தலும்
தகும்புல வோர்க்கே.[15]

என்று இதற்கு விதி வகுத்துத் தந்துள்ளாரன்றோ?

---

13. தனிப் பாடல்கள்-வேங்கடேச எட்டையர் பூபதி(2)-2
14. பாரதி அறுபத்தாறு-18
15. நன்னூல்-59

## பின்னிணைப்பு :

## பொழிவின் துணை நூல் பட்டியல்

| | | |
|---|---|---|
| ஆழ்வார்கள் | : | **நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்** (கி. வேங்கடசாமி ரெட்டியார் பதிப்பு) |
| கம்பர் | : | **கம்ப ராமாயணம் - ஆரணிய காண்டம்** (வை. மு. கோ. பதிப்பு) |
| கவிமணி | : | மலரும் மாலையும் (புதுமைப் பதிப்பகம், காரைக்குடி) |
| சங்கப் புலவர்கள் | : | **புறநானூறு** - உரை (உ. வே. சாமிநாதய்யர் பதிப்பு) |
| சங்கப் புலவர்கள் | : | **பரிபாடல்** - உரை (உ. வே. சா. அய்யர் பதிப்பு) |
| சுப்பு ரெட்டியார் ந. | : | **சைவ சமய விளக்கு** (பாரி நிலையம், 184, பிரகாசம் சாலை, சென்னை - 108) |
| சுப்புரெட்டியார் ந. | : | **அறிவியல் தமிழ்** - (பாரி நிலையம்) |
| டி. கே. சி | : | **மொழிகள்**— தீபம் (செப்டம்பர் 1972 இதழ்) |
| தாயுமானவர் | : | தாயுமானவர் பாடல்கள் (தருமையாதீன வெளியீடு) |
| திருமூலர் | : | திருமந்திரம் (குமர குருபரன் சங்கம், சீவை குண்டம்) |

பவணந்தி முனிவர் : **நன்னூல் காண்டிகை உரை** (ஆறுமுக நாவலர் பதிப்பு)

பாரதியார் : **பாரதியார் கவிதைகள்** (எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை பதிப்பு)

பாரதியார் : **கட்டுரைகள்**

பாலா : **புதுக் கவிதை ஒரு புதுப் பார்வை** (அன்னம் வெளியீடு)

பிள்ளை உலக ஆசிரியர் : **நவவித சம்பந்தம்**

பிள்ளை உலக ஆசிரியர் : **முமுட்சுப்படி**

மணி சி. : **வரும் போகும்** (நகரப் பேருந்து பற்றிய கவிதை)

மணிவாசகர் : திருவாசகம் (தருமையாதீனப் பதிப்பு)

மீரா : **புதுக் கவிதையின் உருவம்** (அன்னம் வெளியீடு, சிவ கங்கை)

வாலி : **பொய்க்கால் குதிரைகள்** (வானதி பதிப்பகம், தீனதயாளன் தெரு, தியாகராச நகர், சென்னை - 17

## பேராசிரியர்

## டாக்டர் ந. சுப்புரெட்டியாரின் நூல்கள்

**ஆசிரியம் :**

1. தமிழ் பயிற்றும் முறை
2. கவிதை பயிற்றும் முறை
3. அறிவியல் பயிற்றும் முறை
4. கல்வி உளவியல் கோட்பாடுகள்
5. யுனஸ்கோ : அறிவியல் பயிற்றும் மூலமுதல் நூல்

**இலக்கியம் :**

6. கவிஞன் உள்ளம்
7. காலமும் கவிஞர்களும்
8. காதல் ஓவியங்கள்
9. அறிவுக்கு விருந்து
10. முத்தொள்ளாயிர விளக்கம் (பதிப்பு)
11. பரணிப் பொழிவுகள்

12. அறிவியல் தமிழ்
13. திருக்குறள் கருத்தரங்கு மலர்—1974 (பதிப்பு)
14. கம்பனில் மக்கள் குரல்
15. காந்தியடிகள் நெஞ்சுவிடு தூது (பதிப்பு)
16. திருவேங்கடமும் தமிழ் இலக்கியமும்
17. தமிழ் இலக்கியத்தில்— அறம், நீதி முறைமை.
18. புதுவை (மை)க் கவி சுப்பிரமணிய பாரதியார்— ஒரு கண்ணோட்டம்.

**சமயம் தத்துவம் :**

**(அ) விளக்க நூல்கள் :**

19. முத்திநெறி (தமிழக அரசு பரிசு பெற்றது)
20. சிலநோக்கில் நாலாயிரம்
21. வைணமும் தமிழும்
22. சைவ சமய விளக்கு
23. ஆன்மிகமும் அறிவியலும்
24. வைணவ உரைவளம் (ஐதிகம், இதிகாசம். சம்வாதம்)
25. கலியன் குரல்
26. கீதைக் குறள் (பதிப்பு)
27. கண்ணன் எழில் காட்டும் கவிதைப் பொழில் (பதிப்பு)
28. கண்ணன் துதி
29. இராமர் தோத்திரம்
30. கீதைப் பொழிவுகள்
31. ஆண்டாள் பாவையும் அழகு தமிழும் (பதிப்பு)

### (ஆ) திருத்தலப் பயண நூல்கள் :

32. மலைநாட்டுத் திருப்பதிகள்
33. தொண்டை நாட்டுத் திருப்பதிகள்
34. பாண்டி நாட்டுத் திருப்பதிகள்
35. வடநாட்டுத் திருப்பதிகள்
36. சோழநாட்டுத் திருப்பதிகள் - முதற்பகுதி (த. அ. ப. பெற்றது)
37. சோழநாட்டுத் திருப்பதிகள் - இரண்டாம் பகுதி (ஷை)
38. தம்பிரான் சோழர்
39. நாவுக்கரசர்
40. ஞானசம்பந்தர்
41. மாணிக்கவாசகர்

### திறனாய்வு :

42. கவிதை யநுபவம்
43. பாட்டுத் திறன்
44. கம்பன் படைத்த சிறு பாத்திரங்கள்
45. அகத்திணைக் கொள்கைகள்
46. புதுக்கவிதை - போக்கும் நோக்கும்
47. கண்ணன் பாட்டுத் திறன்
48. பாஞ்சாலி சபதம் - ஒரு நோக்கு
49. பாரதீயம் (த. அ. ப. பெற்றது)
50. குயில் பாட்டு - ஒரு மதிப்பீடு
51. உயிர் தந்த உத்தமன் (பதிப்பு)

52. ஆழ்வார்கள் ஆரா அமுது
53. விட்டுசித்தன் விரித்த தமிழ்
54. சடகோபன் செந்தமிழ்
55. பரகாலன் பைந்தமிழ்

**வரலாறு தன்வரலாறு :**

56. நினைவுக் குமிழிகள் - முதற்பகுதி
57. நினைவுக் குமிழிகள் - இரண்டாம் பகுதி
58. நினைவுக் குமிழிகள் - மூன்றாம் பகுதி
59. நினைவுக் குமிழிகள் - நான்காம் பகுதி
60. நினைவுக் குமிழிகள் - ஐந்தாம் பகுதி
61. மலரும் நினைவுகள்
62. வேமனர்
63. குரஜாட
64. சி. ஆர். ரெட்டி
65. தாயுமான அடிகள்
66. பட்டினத்தடிகள்
67. வடலூர் வள்ளல்
68. பிரதிவாதி பயங்கரம்

**அறிவியல் ;**

69. மானிட உடல்
70. அணுவின் ஆக்கம்
71. இளைஞர் வானொலி
72. இளைஞர் தொலைகாட்சி
73. அதிசய மின்னணு
74. தமது உடல் (த. அ. ப. பெற்றது)
75. இராக்கெட்டுகள் (த. அ. ப. பெற்றது)

76. அம்புலிப் பயணம்
77. தொலை உலகச் செலவு
78. அணுக்கரு பௌதிகம் (செ. பல்கலைக் கழகப் பரிசு பெற்றது)
79. இல்லற நெறி
80. வாழையடி வாழை
81. அறிவியல் விருந்து (தமிழ் வளர்ச்சிக் கழகப்பரிசு பெற்றது)
82. வானமண்டலக் காட்சி
83. தமிழில் அறிவியல் - அன்றும் இன்றும்

**ஆராய்ச்சி :**

84. வடவேங்கடமும் திருவேங்கடமும்
85. கலிங்கத்துப்பரணி ஆராய்ச்சி
86. Religion and Philosophy of Nalayiram with Special Reference to Nammalvar
87. Studies in Arts and Science : (61st Birth Day Commemoration Volume)
88. Collected papers.

# தேன்மழை வெளியீடுகள் :

| | |
|---|---|
| தெய்வம் பிறந்தது | கு. அழகிரிசாமி |
| சிரிக்கவில்லை | ,, |
| இலக்கிய அமுதம் | ,, |
| இலக்கிய தேன் | ,, |
| இலக்கிய விருந்து | ,, |
| தவப்பயன் | ,, |
| வரப்பிரசாதம் | ,, |
| இரு சகோதரர்கள் | ,, |
| இலக்கிய சுவை | ,, |
| காலகண்டி | ,, |
| கவிச் சக்கரவர்த்தி | ,, |
| அன்பளிப்பு | ,, |
| கற்பக விருட்சம் | ,, |
| புதுவீடு புதுஉலகம் | ,, |
| நான் கண்ட எழுத்தாளர்கள் | ,, |
| தீராத விளையாட்டு | ,, |
| காவடிச் சிந்து | ,, |
| செவிசாய்க்க ஒருவன் | ,, |
| புதிய ரோஜா | ,, |
| கவியும் காதலும் | ,, |
| துறவு | ,, |

| | |
|---|---|
| நாட்டுப்புறவியல் சிந்தனைகள் | டாக்டர் ஏ. என். பெருமாள் |
| வீரத்தில் விளைந்த காதல் | ,, |
| தமிழக்கியத் சிந்தனைகள் | ,, |
| நாடகச் சிந்தனைகள் | ,, |
| சேர்வைக்காரன் கதை | ,, |
| 20-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாடகம் | ,, |
| வீர அனந்தன் | ,, |
| தமிழ் இலக்கியங்களில் அறம்-நீதி முறைமை | டாக்டர் ந. சுப்புரெட்டியார் |
| மலரும் நினைவுகள் | ,, |
| நிலவுக்கு ஏங்கியவர்கள் | மகரிஷி |
| யாகம் | ,, |
| குழந்தை இலக்கியமும், கவிஞர் வள்ளியப்பர்வும் | அம்புயம் யுவச்சந்திரா |
| வைக்கோல் கன்றுகள் | டாக்டர் க. இரவீந்திரன் |
| சாதிகள் இல்லையடி பாப்பா | ஹம்ஸா தனகோபால் |
| சொல்லடி சிவசக்தி | ,, |
| மக்கள் வழக்காற்றியல் | ச. முருகானந்தம் |
| கடற்கரை பிரதவர் கலைச்சொல் அகராதி | ,, |
| பொழுது புலர்ந்தது | ,, |
| அகவெளிப்புதர் | ,, |
| புரட்சிக்கு வித்திடும் பாவேந்தர் பாட்டு | மயிலைநாதன் |